24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

நதி 24 | பாலம் 22 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | NOVEMBER 15, 2014

# வரவு செலவுத்திட்டத்தில் மேலதிக வரவு!



கனேடிய மத்திய அரசின் நிதி அமைச்சர் யோ ஒலிவர், நவம்பர் 12, 2014 இல் வெளியிட்ட 2014 ஆம் ஆண்டின் இலையுதிர்கால பொருளாதார அறிக்கையில் கனேடிய அரசின் 2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் மேலதிக வரவாக $1.9 பில்லியன் டொலர் எதிர்பார்க்கப்படுவதாக கூறியுள்ளார்.

கடந்த மாதம் பிரதமர் அறிவித்த வரிவிலக்குகளால் ஏற்பட்ட வருமானக் குறைப்பின் பின்னரே இவ் $1.9 பில்லியன் டொலர் மேலதிக வரவு வருகிறது குறிப்பிடத்தக்கது. பிரதமர் ஸ்ரீபன் காப்பரின் பழமைவாதக்கட்சி 2006 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட போது கனேடிய வரவு செலவுத்திட்டத்தில் மேலதிக வரவு $15 பில்லியனாக இருந்தது. அது அடுத்த ஆண்டில் $10 பில்லியனாக குறைந்தது. அதன் பின்னர் 2008 ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டு வரை கனேடிய வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையே இருந்தது. தற்போது முதற்தடவையாக கடந்த ஏழு வருடத்தில் வரவு செலவுத்திட்டம் மேலதிக வரவை ($1.9 பில்லியன்) 2015 இல் காட்ட இருக்கிறது.

கடந்த மாதம் 18 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் உள்ள குடும்பம் மற்றும் சிறு வியாபார நிறுவனங்களுக்கும் பிரதமர் அளித்த வரிச்சலுகை இல்லா விட்டால் கனேடிய மத்திய அரசின் அடுத்த வருட வரவு செலவுத்திட்டம் $6.4 பில்லியன் டொலர் மேலதிக வரவைக் காட்டியிருக்கும். ஆனால் மேற்குறிப்பிட்ட வரிச் சலுகைக்கு 5 பில்லியன் டொலர் செலவாகிறது. இதைவிட அரசின் செலவினங்களைக் குறைப்பதால் $0.5 பில்லியன் டொலர் சேமிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே 2015ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் மேலதிக வரவு $1.9 பில்லியன் ஆக இருக்கிறது.

மத்திய அரசின் நிதிவள துறையின் அறிக்கை, இம்மேலதிக வரவு இனி தொடர்ந்து வரும் வரவு செலவுத் திட்டங்களில் அதிகரித்துக் கொண்டு சென்று 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் $13.1 பில்லியன் மேலதிக வரவாக இருக்கும் என்று கூறுகிறது. கனேடிய மத்திய அரசின் இப்பொருளாதார அறிக்கையை எதிர் கட்சிகள் விமர்சித்து உள்ளன. லிபரல்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

MORTGAGE ALLIANCE
The Guardian
SAVE YOUR MONEY
SAVE YOUR HOME
- 2nd Mortgage - Purchase & Refinance
- Renewal & Switch - Home Equity Loan
- Residential & Commercial Mortgage
We're Hiring Experienced & New Agents
Gini Annarasa
Cell: 416.830.3241
*Independently Owned & Operated







# 25 ஆவது ஆண்டில் விளம்பரம் நடத்தும் உலகளாவிய போட்டி

CELEBRATING 25 Years
Vlambaram Publications inc.

ரொறொன்ரோவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகை 25வது வருடத்தை (1991 - 2015) முன்னிட்டு நடத்தும் தமிழ் சமூக-இலக்கிய-வரலாற்றுப் போட்டி. போட்டிக்கான படைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு ஜனவரி முதலாம் திகதி 2015க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அஞ்சல் உறையில் அல்லது மின்னஞ்சல் பொருள் பகுதியில் '25வது ஆண்டு விளம்பரப் போட்டி' என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Vlambaram Publication Inc.
GTA Square,
5215 Finch Ave. East, #201
Toronto ON, M1S 0C2
மின்னஞ்சல் முகவரி:vlambaram@sympatico.ca

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று படைப்புக்களை தவிர ஏனையவற்றிற்கு எவ்வித பணமும் வழங்கப்பட மாட்டாது. ஆனால் சிறந்ததென நடுவர்களால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் விளம்பரம் பத்திரிகையிலும் விளம்பரம் மற்றும் தமிழ்வணக்கம் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்படலாம்.

படைப்புக்கள் முன்னர் பத்திரிகைகள், இணையங்கள் உட்பட்ட மற்றைய ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகியிருக்கக் கூடாது. இதனை எழுத்தாளர் படைப்பின் முகப்பகுதியில் உறுதிப்படுத்த வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் விளம்பரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

<u>போட்டி 1</u>
குறுநாவல் போட்டி

9,000-12,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 2</u>
திரைப்படக் கதைப் போட்டி
(Script Writing)

1500-2000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

<u>போட்டி 3</u>
கவிதைப் போட்டி

60-100 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 4</u>
கட்டுரைப் போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றில் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.

1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு
2. தமிழரின் கலையும் பண்பாடும்
3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு
4. மருத்துவமும் தமிழரும்

1,500 - 2,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

நன்கொடை: போட்டி 1இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 1,000, 500, 300 வழங்கப்படும்.
நன்கொடை: தனித்தனியே போட்டி 2, 3, மற்றும் 4இற்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 500, 300, 200 என வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 8.5"-11" (A4) தாளில் 11pt எழுத்துரு அளவில் தமிழ் unicode font இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் word ல் ஆக்கத்தை பதிவு செய்து இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சலின் முகப்பில் ஆக்கத்தை பதிவு செய்ய வேண்டாம். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் உறுதிப்படுத்தலும் படைப்பின் முன் பகுதியில் தனித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போட்டி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்குமானது. விளம்பரம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ விளம்பரத்தின் எழுத்தாளர்களோ இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

# ஜனாதிபதி தேர்தல் சர்ச்சைகள் நீங்கின - பிரசாரங்கள் தீவிரம்!

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ மூன்றாவது முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தடையில்லை என்கின்ற முடிவு வெளியாகியுள்ளது. இந்த முடிவு அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டதொன்றே. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் நடத்தப்படவுள்ளதான தகவல்கள் வெளியானவுடன், இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியாகவுள்ள ஐ.தே.க உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பல்வேறு நடவடிக்கையில் இறங்கின. அதில் முக்கியமானது எதிர்கட்சிகள் ஒன்றிணைந்து பலமான கூட்டணி ஒன்றை அமைப்பது - அதனூடாக பொதுவேட்பாளர் ஒருவரை களமி-றக்குவது. ஆனாலும், எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே இருப்பார் என்றே நம்பப்படுகின்றது. இதனை ஜே.வி.பி, சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக கட்சி போன்றவை விரும்பவில்லை. எனவே, பொதுக்கூட்டணி ஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்பில்லாத நிலையே காணப்படுகின்றது. இடையில் ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான கரு ஜயசூரிய பொது வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்ற செய்தி வெளியானது. உடனேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவருக்கு தொலைபேசியில் வாழ்த்தும் தெரிவித்தார்.

கரு ஜயசூரிய ஐ.தே.கவின் மூத்த உறுப்பினராக இருந்த போதும், அவருக்கு மக்கள் செல்வாக்கு இல்லை. ஆனால், அவரை பொதுவேட்பாளராக நிறுத்தினால் ஜே.வி.பி போன்ற ரணிலை விரும்பாத கட்சிகள் அவருக்கு ஆதரவளிக்கலாம். எனினும், அவர் வெற்றிபெறுவதற்கான மக்கள் செல்வாக்கு இருக்கப் போவதில்லை. இதனை நன்கு புரிந்து கொண்ட நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ முந்திக்கொண்டு அவருக்கு வாழ்த்து தெரிவித்ததாகவும் அரசியல் வட்டாரங்களில் நகைச்சுவையாக பேசப்படுகின்றது. இவை ஒரு புறமிருக்க, மஹிந்த ராஜபக்ஸ சட்டப்படி மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என்ற வாதங்களும் முன்வைக்கப்பட்டன. அவ்வாறான நிலை ஏற்பட்டால், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசில் உள்ள மற்றுமொருவரை களத்தில் நிறுத்த வேண்டி வரும். அவ்வாறு நிறுத்தப்பட்டால் சிங்கள மக்கள் மத்தியில் மஹிந்த ராஜபக்ஸவிற்கு உள்ள செல்வாக்கு மற்றவருக்கு கிடைக்க மாட்டாது. இந்நிலையில் எதிர்தரப்பு சரியான கூட்டணி ஒன்றை அமைத்து தீவிரமாக செயற்பட்டால் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட வாய்ப்பு ஏற்படலாம்.

ஆனால் இப்போது, மஹிந்த முன்றாம் முறையாக போட்டியிட தடையில்லை என்கிற முடிவு வந்துவிட்டது. இந்த முடிவு ஒரு ஆலோசனையே தவிர தீர்ப்பு அல்ல. உண்மையில் மஹிந்த ராஜபக்ஸ மூன்றாவது முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியுமா என்பது குறித்து உச்சநீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, அதன் தீர்ப்பாக இது வந்திருக்க வேண்டும். அப்படி வரவில்லை. அரசியலமைப்பின் அதிகாரத்தின் பிரகாரம் தற்போதைய ஜனாதிபதி, மற்றுமொரு முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு சட்டத்தில் இடையூறு இல்லை என்று உயர்நீதிமன்றம் ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா, நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளமை சரியானதல்ல. உயர் நீதிமன்றத்தின் பத்து நீதியரசர்கள் கொண்ட குழுவினால், ஜனாதி பதிக்கு அனுப்பிவைத்துள்ள அபிப்பிராயமே இந்த முடிவு. இது நீதிமன்ற தீர்ப்பு அல்ல. முன்னாள் நீதியரசான சரத் என்.சில்வாவும் இதனையே வலியுறுத்தியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஸ மூன்றாவது முறையாக வும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம் என்று உச்ச நீதிமன்றம் வழங்கியது வழக்கொன்றின் தீர்ப்பல்ல எனவும், அது ஆலோசனை ரீதியான கருத்து எனவும் அவர் தெரிவித்துள்ளார். உச்ச நீதிமன்ற நீதியரசர் களை நாடாமல் இதனை சபை முதல்வரே அறிவித்திருக்கலாம் என்றும் அவர் கிண்டலடித்திருக்கின்றார். 'விசேடமாக, வழக்கொன்றின் தீர்ப்பு வழங்கப்படும் முன் அதனை விசாரிக்க வேண்டும். அதற்கு காலம் எடுக்கும். விடயங்களைத் தொகுத்து,



சாட்சியங்களை கேட்டறிந்த பின்னரே தீர்ப்பு வழங்கப்படும். தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை பார்த்தால் நீதிபதி ஒரே நாளில் வழக்கை விசாரித்து தீர்ப்பை வழங்க முடியும். சட்டத்தை தரம்தாழ்த்தும் இவர்கள் என்ன செய்கின்றனர் என்பது தெளிவாகியுள்ளது. அலரி மாளிகை இருக்கும் இடத்தில்தான் 1802 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் இருந்தது. அதற்கு அருகில் ஆங்கிலேயர் அரசாங்கத்தின் மனிதர்களை சித்திரவதை செய்யும் கூடமும் இருந்தது. இதனை சட்டத்தரணிகள் எதிர்த்ததன் காரணமாகவே உச்ச நீதிமன்றம் புதுக்கடை என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது. 200 வருடங்களுக்கு பின் மஹிந்த ராஜபக்ஸ தற்போது உயர்நீதிமன்றத்தை அலரி மாளிகைக்கே கொண்டு வந்துள்ளார்' என சரத் என்.சில்வா கூறுகின்றார். இப்போது யார் என்ன சொன்னாலும் குறித்த சமயத்தில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறத்தான் போகின்றது. மூன்றாவது தடைவையும் மஹிந்த ராஜபக்ஸவே போட்டியிடுகின்றார். எதிர்க்கட்சிகள் இன்னும் எந்தவொரு ஆக்கபூர்வமான முடிவுகளையோ, நகர்வுகளை மேற்கொள்ளாத நிலையில் மஹிந்த ராஜபக்ஸவே மீண்டும் ஜனாபதியாக வெற்றிபெறுவார் என்பதிலும் சந்தேகமில்லை.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரங்கள் தற் போதே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இதற்காக நாடளாவிய ரீதியில் உள்ள 160 தேர்தல் தொகுதியிலுள்ள 11,478 பிரதேச வாக்களிப்பு அதிகாரப் பிரதேசங்களினூடாக வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். பல வாரங்களாக அரசியல் கட்சிகளிடையேயும், நாட்டு மக்களிடையேயும் நிலவி வந்த சந்தேகத்துக்கு உச்ச நீதிமன்றம் தெளிவான விளக்கமொன்றை கொடுத்துள்ளதாகவும், ஆகவே மக்களின் ஆதரவு நிச்சயம் எனவும் அவர் கூறுகின்றார். இந்நிலையில், அரசாங்கத்தின் சிரேஸ்ட அமைச்சரான அதாவுட செனவிரட்ன தெரிவித்துள்ள கருத்தையும் இங்கு சுட்டிக் காட்டுவது அவசியம். யுத்தக் குற்றம் தொடர்பில் வெளிநாடுகளுக்கு பதிலளிப்பதற்காகவே அவசரமாக ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். 'யுத்தக் குற்றத்திற்காக பதிலளிக்கும் நோக்கில் நடத்தப்படும் இந்த தேர்தலின் போது, மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவுடன் இருக்கின்றனர் என்பதை உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். யுத்தம் நடைபெற்ற காலத்தில் அதனை நிறுத்துமாறு சில வெளிநாடுகள் அழுத்தங்களை கொடுத்தன. சில நாடுகள் பயங்கரவாதிகளை மீட்க கப்பல்களை அனுப்பியிருந்தன. எனினும் இந்த வெளிநாடு களின் அழுத்தங்களுக்கு அடிபணியாது போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இதன் காரணமாக வெளிநாடுகள் போர் குற்றங்களை சுமத்தி விசாரணைகளை நடத்தி வருகின்றன. இதற்கு ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் சிறந்த பதிலை வழங்க வேண்டும்' இவ்வாறு அதாவுட செனவிரட்ன சிங்கள மக்களுக்கு அறிவிக்கின்றார். இவ்வகையில் இலங்கையிலுள்ள அனைத்து மக்களின் ஆதரவையும் திரட்டும் வகையில் வேலைத் திட்டங்களை ஆளும் தரப்பு முடுக்கி விட்டுள்ளது. இந்த நிலையில், வடக்கு கிழக்கில்

**- விகிர்தன் -**

வாழும் தமிழ் மக்கள் என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றார்கள் என்கின்ற எதிர்பார்ப்பு அரசியல் மட்டத்தில் எழுந்துள்ளது. வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவுள்ள தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பதை அறியும் ஆவலும் எழுந்துள்ளது. நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது தங்களுக்கு ஆதரவளிக்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் அமைச்சர் பசில் ராஜபக்ஸ கோரிக்கையும் விடுத்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் வெளியிடப்படவுள்ள விஞ்ஞாபனத்தில் யார் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை அறிவிக்கின்றார்களோ அவர்களுக்கு தமிழ் மக்கள் ஆதரவளிப்பார்கள் என்ற செய்தியினை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்தியுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவினால் வெளியிடப்படும் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் மக்களுக்கு சாதகமாக அமைத்தால் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பது குறித்து சிந்திக்கப்படும் எனவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இப்போதைக்கு இதனையே தமிழர் தரப்பின் இராஜதந்திர நிலைப்பாடாக கருதலாம்.


கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# வெற்றி வேண்டுமா? இதோ 5 குறிப்புகள்



**சத்குரு வாசுதேவ்**

எல்லாம் செய்துவிட்டேன், ஆனாலும் வெற்றி கழுவும் மீனில் நழுவும் மீனாக இருக்கிறது என்பவர்கள் இங்கே வாருங்கள். சத்குரு சொல்லும் இந்த 5 வழிமுறைகளில் ஒன்றைப் பற்றிக் கொண்டால் உங்கள் வாழ்க்கையில் இனி வெற்றி வெற்றி வெற்றி மட்டும் தான். வெற்றியைத் தேடுபவர்களுக்குப் புதிய பொன்மொழிகள் இதோ.

## #1 கைகளை நம்புவோம்! கைரேகையை அல்ல,

சத்குரு: சில சமயங்களில் எதேச்சையாக, அதிர்ஷ்டவசமாக, சில விடயங்கள் உங்களுக்குச் சாதகமாக நிகழ்ந்துவிடலாம். அப்படிக் காற்று உங்கள் பக்கம் வீசும் சமயத்திற்காக நீங்கள் காத்திருந்தால், நல்ல விடயங்கள் உங்கள் கல்லறையில்தான் நடக்கும், ஏனென்றால் அச்சமயம் வராமல் கூட போய்விடலாம்.

உங்களுக்கு தெரியுமா? கோடான கோடி தடவை ஒரு திடமான சுவரின் ஊடே நடந்து அதைக்கடக்க முயன்றால், அதில் ஒருமுறை நீங்கள் கடந்துவிட முடியுமென்று குவான்டம் கோட்பாடு (Quantum Theory) கூட சொல்கிறது. அதில் சிறிய சிக்கல் அந்த கோடான கோடி தடவையைத் தொடும் முன் உங்கள் மண்டையோடு உடைந்திருக்கும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

நீங்கள் அதிர்ஷ்டத்தை நம்பி வாழும்போது, நீங்கள் பயத்திலும் பதற்றத்திலும் வாழ்கிறீர்கள். நீங்கள் தெளிவான நோக்கத்துடனும் திறமையுடனும் வாழும் போது உங்களுக்கு எது நடந்தாலும் நடக்கா விட்டாலும், உங்களுக்கு நடப்பவை மேல் உங்களுக்கு ஆளுமை இருக்கும். அதுதான் ஸ்திரமான வாழ்க்கை.

## #2 தோல்வியில் தொலை வதை நிறுத்துங்கள்

சத்குரு: உறுதியோடு இருக்கும் ஒரு மனிதனுக்குத் தோல்வி என்பதே கிடையாது. ஒரு நாளுக்கு 100 முறை நீங்கள் கீழே விழுந்தால், அவை நீங்கள் கற்கும் 100 பாடங்களாகிவிடும். நீங்கள் விரும்புவதை உருவாக்குவதில் உறுதியுடன் இருந்தால், உங்கள் மனம் ஒரே திசையில் நிலைத்து விடும். உங்கள் மனம் இருக்கும் திசையில் உங்கள் உணர்ச்சிகளும் ஒன்றிவிடும். ஏனென்றால் நீங்கள் சிந்திக்கும் விதமாகத் தான் நீங்கள் வாழ்க்கையை உணரும் விதமும் இருக்கும். உங்கள் எண்ணமும் உணர்வுகளும் ஒன்று சேர்ந்தால், உங்கள் சக்திகளும் உங்கள் உடலும்கூட அத்திசையில் ஒருங்கிணைந்துவிடும். இவை அனைத்தும் ஒருமுகமாகின்ற போது, நீங்கள் விரும்புவதை உருவாக்கி உங்கள் கனவை நிஜமாக்கும் திறமை அபாரமாகிவிடும். பல விதங்களில் நீங்கள் படைப்பாளராகி விடுவீர்கள்.

## #3 தேவை தெளிவு - குருட்டு நம்பிக்கை அல்ல



சத்குரு: ஒரு மனிதனுக்குத் தேவை தெளிவு, குருட்டு நம்பிக்கை அல்ல. ஒரு கூட்டத்தின் நடுவே நீங்கள் நடக்கும்போது, உங்கள் பார்வை தெளிவாக இருந்தால், ஒவ்வொருவரும் எங்கு இருக்கிறார் என்று உங்களால் பார்க்க முடிந்தால், கூட்டத்தில் ஒருவரைக் கூடத் தொடாமல் நீங்கள் மிகச் சுலபமாக நடந்து சென்றுவிடுவீர்கள்.

உங்கள் பார்வைத் தெளிவாக இல்லை, ஆனால் நீங்கள் அதீத நம்பிக்கை உடையவர் என்கிறபோது, எல்லோர் மீதும் நடந்து செல்வீர்கள். தெளிவில்லாத காரணத்தால், தன்னம்பிக்கை நல்ல மாற்றுப்பொருள் என்று கருதுகிறீர்கள். அது ஒருக்காலமும் அப்படி ஆக முடியாது.

உதாரணமாக, நீங்கள் உங்கள் வாழ்க்கையின் முக்கியமான முடிவுகளை யெல்லாம் இப்படி எடுக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். ஒரு நாணயத்தைச் சுண்டிவிடுங்கள். "சரி, தலை விழுந்தால் முதல் திட்டப்படி செயல்படுவோம், ஒருவேளை பூ விழுந்துவிட்டால் இரண்டாம் திட்டப்படி செயல்படுவோம்," என்று நீங்கள் முடிவெடுத்து செயல்பட்டால், உங்கள் திட்டம் வேலை செய்ய 50 சதவிகிதம் வாய்ப்பிருக்கிறதா இல்லையா?

வாழ்க்கையில் 50 சதவிகிதம்தான் நீங்கள் சரியாக இருக்கிறீர்கள் என்கிறபோது, நீங்கள் இரண்டு தொழில்கள்தான் செய்ய முடியும். ஒன்று நீங்கள் வானிலை அறிக்கை யாளராகவோ அல்லது ஜோசியக்காரராகவோ இருக்க முடியும். இந்த பூமியில் நீங்கள் வேறெந்த வேலையும் செய்ய முடியாது.

## #4 கொஞ்சம் வளைந்து கொடுங்கள்

சத்குரு: நம் வாழ்க்கையில் பலவிதமான சூழ்நிலைகளைக் கையாள்வதற்கு, நமக்கு வெவ்வேறு விதமான ஆளுமை குணங்கள் தேவை. அதில் நீங்கள் நீரோடைபோல் வளைந்து கொடுக்கும் தன்மையுடன் இருந் தால், நீங்கள் எடுத்திருக்கும் பாத்திரத்தில் உங்களால் முழு திறனுடன் செயல்பட முடியும். அதில் சிறிதும் சிக்கலிருக்காது. ஆனால் பலருக்கோ சூழ்நிலைக்கேற்றவாறு வளைந்து கொடுக்க முடியாமல் கட்டுண்டு கிடக்கிறார்கள். அவர்களுக்கு பிடிக்காதவற்றையும் புரியாத வற்றையும் எதிர்கொள்ளும்போது, அவர்கள் சொல்ல முடியாத பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள்.

நீங்கள் அதை உடைக்க வேண்டுமென்றால், நீங்கள் அதை முற்றிலும் வேறுவிதமாக அணுக வேண்டும். நீங்கள் செய்யக்கூடிய மிக எளிமையான செயல் இது: உங்களுக்குப் பிடிக்காத ஒருவருடன் சேருங்கள். அவர்களுடன் சிறிது நேரம் செலவிடுங்கள், மிக அன்பாக, ஆனந்தமாக! உங்களுக்குப் பிடிக்காதவற்றைச் செய்யுங் கள், உங்களுக்குப் பிடிக்காதவர்களுடன் இருங்கள். அந்த சூழ்நிலையிலும் நீங்கள் புத்தியுடன், அன்புடன், ஆனந்தத்துடன் வாழக் கற்றுக் கொண்டால் அதுவே உங்களுக்கு வெற்றி.

## #5 எனக்கு என்ன கிடைக்கும்?

சத்குரு: உயர்ந்த மனிதனாக ஆக வேண்டும் என்கிற பேராவல் உங்களுக்கு இருக்கத் தேவையில்லை. நீங்கள் யாராக இருக்கிறீர்கள் என்பதன்மேல் உள்ள கவனத்தைத் தாண்டி உங்கள் குறிக்கோளை யும், நீங்கள் இயங்கும் வளையத்தையும் விரிவுபடுத்திவிட்டால், எப்படியும் நீங்கள் உயர்ந்த மனிதராகத்தான் இருப்பீர்கள்.

உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்று சில மனிதர்கள் ஏங்கியதில்லை. அவர்கள் பார்வை "எனக்கு என்ன கிடைக்கும்?" என்பதைத் தாண்டி இருந்தது. "எனக்கு என்ன கிடைக்கும்?" என்ற இந்த ஒரு கணக்கை மட்டும் நீங்கள் கைவிட்டு விட்டு, உங்கள் திறமையின் உச்சத்தில் செயல்பட்டால், ஏதோ ஒருவிதத்தில் நீங்கள் உயர்ந்தவராகத்தான் இருப்பீர்கள்.

அப்போது இயல்பாகவே "என்னைச் சுற்றி யிருக்கும் உயிர்களுக்கு நான் என்ன செய்ய முடியும்?" என்று பார்க்கத் துவங்கி விடுவீர்கள். உங்கள் திறமைகளையும் இயல்பாகவே அதிகரித்துக் கொள்வீர்கள், ஏனென்றால் செய்வதற்கு அவ்வளவு செயல்கள் இருக்கும்!







MORTGAGE ALLIANCE
Lic # 10530

RIGHT AT HOME
"1 Brokerage in the GTA"

Corporate Office: Sheppard Aver E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

Brokerage Office :112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3
Brokerage - 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

## MORTGAGE & LINE OF CREDIT



- நல்ல ரேட்ல மோட்கேஜ்
- லைன் ஒப் கிரெடிட்
- ரீபைனான்ஸ்
- 2வது, 3வது மோட்கேஜ்
- பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
- வீடு வாடகைக்கு விட அல்லது பெற்றுக்கொள்ள

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?

WIN UP TO
$100,000
WHEN YOU USE THE RIGHTBROKER
ASK ME HOW!
*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

BEST RATE GUARANTEED

மற்றும் எதுவாக இருந்தாலும் அழையுங்கள்.
"மோட்கேஜ் கிளினிக்"
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

MORTGAGE IN ANY SITUATION

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for appointment)

வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00 மணி வரை



எமது முகவரி :
1504 Markham Rd, Toronto,
ON, M1B 2V9
(Markham & HWY 401)



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

# Real Estate Service

உங்கள் விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள்.
எமது மிகக் குறைந்த விற்பனைக் கொமிசன் $1000* மட்டுமே!!!

"To Every Bird, Its Own Nest is Beautiful"

* Listing commission does not include buyer Brokerage Commission of 2.5%

# இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் நாடுதிரும்பும் சூழல் உள்ளதா?

## தாயகமடல்

இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் நீண்ட காலமாக அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழர்களை நாட்டிற்கு திருப்பியனுப்புவது குறித்த செய்திகள் தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. சில நாட்களுக்கு முன்னர் செ.சந்திரஹாசன் இவ்விடயம் பற்றி தெரிவித்திருந்தார். தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை மீண்டும் நாட்டுக்கு திருப்பி அனுப்புவது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். இலங்கை அகதிகளுக்கான புனர்வாழ்வு அமைப்பின் பொருளாளராக இருக்கும் எஸ். சி சந்திரஹாசன், தந்தை செல்வா என்றழைக்கப்படும் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் புதல்வர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதேவேளை, வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் இந்தியாவிலுள்ள இலங்கை தமிழ் அகதிகளை அவர்களின் சொந்த ஊர்களுக்கு திருப்பியனுப்ப இந்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கின்றார். சில நாட்களுக்கு முன்னர் சென்னையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரைநிகழ்த்துவதற்காக அழைக்கப்பட்ட அவர் சென்னையில் வைத்து ஊடகவியலாளர் சந்திப்பில் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கை தமிழர்கள் அகதிகளாக இந்தியாவில் தங்கியுள்ளனர். 115 முகாம்களில் ஒரு லட்சம் பேர் வரையில் தங்கியுள்ளனர். இவர்களுடன் முகாம்களுக்கு வெளியே தங்கி இருப்பவர்களையும் சேர்த்தால் இரண்டு லட்சம் இலங்கைத் தமிழர்கள் இந்தியாவில் அகதிகளாக உள்ளனர். பல ஆண்டுகளாக இங்கு இருந்தும் அவர்களுக்கு இந்திய குடியுரிமை இதுவரை கிடைக்கவில்லை. தங்குமிடம், உணவு உள்ளிட்ட பல்வேறு செலவுகளை இங்குள்ள அரசுதான் செய்து வருகிறது. இலங்கையில் இருந்து அகதிகளாக வெளியேறியவர்கள் இனி நாட்டுக்குத் திரும்ப மாட்டார்கள் என எண்ணி, அவர்களுக்குச் சொந்தமான நிலங்களை இராணுவத்தினர் அபகரித்து வருகின்றனர். தாய்நாட்டின் பூர்வீக குடிகளான இரண்டு லட்சம் அகதிகள் இந்தியாவில் இருப்பதால் இலங்கையில் உள்ள தமிழர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதனால் தமிழர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்க மக்கள் பிரதிநிதிகளை போதியளவுக்கு எங்களால் தேர்ந்தெடுக்க முடியவில்லை. இதைப் போக்க இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அகதிகளைத் திருப்பி அனுப்புவது குறித்து, மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது பேச்சு நடத்தினோம்.



இதையடுத்து, அகதிகளைத் திருப்பி அனுப்ப குழு ஒன்றை இந்திய அரசு அமைத்தது. தற்போது மோடி தலைமையில் புதிய அரசு பதவியேற்று உள்ளது. அகதிகளைத் திருப்பி அனுப்புவது குறித்து, மோடி அரசுடனும் பேச்சு நடத்தி வருகிறோம் அவர்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வந்து பல ஆண்டுகளாகின்றன. திரும்பி தாய் நாட்டுக்குப் போனால் தங்களுடைய நிலங்கள் கிடைக்குமா? போதிய பாதுகாப்பு அளிக்கப்படுமா? என்பதால் இங்குள்ள அகதிகள் நாடு திரும்ப அச்சப்படுகின்றனர். இந்த அச்சத்தைப் போக்கி அவர்களது நிலங்களை அவர்களுக்கே அளித்து மீள்குடியமர்வு செய்ய, இலங்கை அரசை இந்தியா வற்புறுத்த வேண்டும். இரண்டு லட்சம் அகதிகளை பாதுகாப்பதும் இந்தியாவுக்கு சுமை தான். எனவே தமிழர் நலனுக்காக, அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டும். இவ்வாறு விக்னேஸ்வரன் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

தமிழகத்தில் (முகாம்களில்) தற்போது சுமார் ஒரு லட்சம் இலங்கை அகதிகள் வாழ்ந்து வருகின்றனர் எனவும், இவர்களில் 3,500 பேர் பட்டதாரிகள் எனவும், மற்றும் சிலர் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் சந்திரஹாசன் சுட்டிக்காட்டுகின்றார். பெறுமதி மிக்கவர்களான இவர்கள் இலங்கைக்கு திரும்பும் பட்சத்தில் அது நாட்டுக்கு நன்மையாக அமையும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். சாதாரணமாக நோக்கும் போது, இந்தியாவில் இருக்கும் இலங்கை அகதிகள் நாடு திரும்புவது என்கின்ற விடயம் சரியானதே. ஆனால், அதற்கான பாதுகாப்பான சூழல் இலங்கையில் உள்ளதா என்பதுதான் கேள்வி. அத்துடன் அகதிகளாக அங்கு வாழும் மக்கள் சொந்த நாட்டிற்கு வர விரும்புகின்றார்களா? தங்களை தங்கள் நாட்டிற்கு அனுப்புமாறு கோரிக்கைகள் அவர்களிடமிருந்து வந்துள்ளனவா? அவர்களை பாராமரிப்பதில் சிக்கல் என தமிழக அரசோ இந்திய மத்திய அரசோ கூறுகின்றதா? அல்லது அவர்களை கட்டாயம் இலங்கைக்கு திருப்பியனுப்ப வேண்டும் என இலங்கை அரசு இந்தியாவிடம் கோரியுள்ளதா?

இக்கேள்விகளுக்கு பதில் தேட வேண்டியது அவசியமாகின்றது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக தமிழகத்தை நோக்கி வடக்கு கிழக்கு தமிழர்கள் அகதிகளாக செல்லத் தொடங்கினார்கள். போர்க்காலங்களில் ஏற்பட்ட உயிர் அச்சம் காரணமாகவே அவர்கள் இவ்வாறு சென்றனர். மன்னாரிலிருந்து படகுகளில் பெரும்பாலானோர் சென்றனர். இறுதிப்போர் நடைபெற்ற நாட்களில் அவ்வாறு செல்வதற்கு வழியிருந்திருக்குமானால் மேலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தியா சென்றிருப்பர். அப்போது வழிகள் அனைத்தும் இறுக்கமாக அடைக்கப்பட்டிருந்தன. அதனால் அவர்களால் செல்ல முடியவில்லை. இப்போது, தமிழகத்தில் முகாம்களிலும் வெளியிலுமாக இரண்டு இலட்சம் இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள் என்றே பொதுவாக வைத்துக் கொள்வோம். அவர்களில் இன்னமும் முகாம்களில் இருப்பவர்கள் பல்வேறு வசதியின்மைகளுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். இருந்தாலும் கூட அம்மக்கள் இலங்கைக்கு - தங்கள் சொந்த ஊர்களுக்கு வர விருப்பமில்லாதவர்களாகவே உள்ளனர். அதற்கு பிரதான காரணம் போர் முடிவடைந்த பின்னரும், தமிழ் பிரதேசங்களில் நிலவும் அச்சுறுத்தல்கள் தான். அச்சமற்ற, இயல்பான வாழ்க்கையை விரும்பும் அவர்கள் தமிழக முகாம்களிலுள்ள வசதியின்மைகளையும் சகித்துக்கொண்டு வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

முகாம்களுக்கு வெளியில் வாழும் இலங்கையர்கள் ஓரளவிற்கு தங்கள் பொருளாதாரத்தை நிலைப்படுத்தி வாழ்பவர்களாகவே உள்ளனர். அவர்கள் சில சமயங்களில் அங்கிருந்து வேறு மேற்கு நாடுகளுக்கு செல்ல விரும்புகின்றனரே தவிர சொந்த நாட்டிற்கு திரும்ப விரும்பவில்லை. கட்டாயமாக அம்மக்களை நாடு கடத்த முற்பட்டாலொழிய அவர்கள் தாமாக விரும்பி நாடு திரும்பும் நிலையில் இல்லை. அரசியல் காரணங்களுக்காக அவர்களை நாட்டிற்கு அனுப்ப வேண்டும் என்று கோருவதோ, அவர்களுக்கு இலங்கை அரசு பாதுகாப்பு வழங்கும் என எதிர்பார்ப்பதோ அல்லது அவர்களின் பாதுகாப்பை இந்தியா உறுதி செய்ய வேண்டும் என கேட்பதோ இத்தருணத்தில் ஏற்புடையதல்ல என்றுதான் கூறவேண்டும். 20 வருடங்களுக்கு மேலாக தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் தமிழகத்தில் உள்ள சில கட்சிகளால் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறு தங்களுக்கு குடியுரிமை வழங்கப்படுவதை இலங்கை அகதிகள் விரும்புவதாகவும் தெரிகின்றது. இலங்கையில் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட்ட பின்தான் அகதிகள் நாடு திரும்ப வேண்டும் என்பதல்ல. தற்போது நிலவும் அச்சுறுத்தலான சூழ்நிலைகள் மாறி, தமிழ் மக்கள் அச்சமின்றி வாழும் இயல்பு நிலை தோன்றினால் தமிழகத்தில் அகதிகளாக வாழும் மக்களை இலங்கைக்கு அழைக்கலாம். அவர்களும் அச்சமின்றி வருவார்கள். அதுவரையில் அந்த மக்களை ஒரு பொறிக்குள் சிக்கவைக்கும் நிலையை ஏற்படுத்தத் கூடாது..

**- ஆதித்தன் -**


விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் ப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician I.G.Ayurvedic Medical Services (SriLanka)

# அடுக்குமாடி கட்டிடத்தொகுதி நிர்மாணிப்பதில் முன்னேற்றம்!

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் - 427**

ஒன்ராறியோ அரசின் புதிய நிலைப்பாடு, மரங்களால் (wood framing) வீடு, மனை கட்டுவதில் முன்னேற்றமான நிலைப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு சிறந்த மாற்றம். நீண்டகால கோரிக்கை இப்பொழுது ஒன்ராரியோ அரசினால் செப்ரெம்பர் 2014 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இம்முறையானது ஜனவரி 01, 2015 இல் இருந்து நடைமுறைக்கு வரவுள்ளது.

இதுவரை நடைமுறையிலிருந்த 4 அடுக்குமாடி வரையான வீடு, மனைகள் மட்டுமே மரத்தினாலான (wood framing) கட்டிடமாக நிர்மாணிக்க கூடியதாக ஒன்ராரியோ கட்டிட அமைப்பு விதி வசதி அளித்து இருந்தது. அடுத்த வருட ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 4 அடுக்கிலிருந்து, 6 அடுக்குவரை இவ்வாறான wood framing இனால் கட்டும் முறை நடைமுறைக்கு வர உள்ளது. ஏற்கனவே இருந்த முறையினால், அனேகமாக தொடர்மாடி மனைகளே (Town homes) கட்டப்பட்டுக் கொண்டிருந்தன. புதிய நடைமுறையினால் 6 அடுக்குமாடிகளான கொண்டோக்கள் (Condominiums) கட்டக்கூடியதாக இருக்கும். இதனால் கூடியளவு மனைகள் கட்டப்படக்கூடிய வசதிகள் உண்டு. நிர்மாணத்திற்குரிய செலவும் ஒப்பீட்டளவில் குறைவாகவும், குறைந்த காலத்திலும் நிர்மாணம் செய்து முடிக்கலாம். வருடம் முழுவதும் நிர்மாணம் செய்யக்கூடியதாகவும் இருக்கலாம். இதனால் கூடியளவு மக்கள் வீடு, மனைகளை வாங்கக் கூடிய நிலை ஏற்படும். விலையில் மாற்றம்?

### ஆதன முதலீடு புத்திசாலித்தனமா?

பொதுவாக பங்குச்சந்தை முதலீடு, ஆதன முதலீடு போன்றவை ஒப்பிடும் முதலீடுகளாகக் காணப்படுகின்றன. எது சிறந்தது என்பதனை கடந்த 10 வருடங்களில் நடந்த புள்ளிவிபரங்களைக் கொண்டு பார்ப்போம். உலகில் மக்களால் வாழவிரும்பும் முக்கிய நகரங்களில் ஒன்றாக ரொறொன்ரோ கருதப்படுகின்றது. பலர் இங்கு வந்து வாழ விரும்புகின்றார்கள்.



யூன் 2004 இலிருந்து யூன் 2014 வரையான காலத்தில் பங்குச் சந்தையில் (TSX) ஏற்பட்ட வளர்ச்சி 77% இற்கு அதிகமாகக் காணப்படுகின்றது. June 2004 இல் TREB பகுதியில் சராசரி விலை $316,532. June 2014 இல் TREB பகுதியில் சராசரி விலை $568,953. இது 80% வளர்ச்சியாகக் காணப்படுகின்றது. இதே காலத்தில் ரொறொன்ரோவில் ஆதனவளர்ச்சி 79% ஆகக் காணப்படுகின்றது. யோர்க் பெரும்பாகத்தில் வளர்ச்சி 91% ஆகக் காணப்படுகின்றது. ஆதனம் வாழும் இடமாகக் காணப்படுகின்றது. பிள்ளைகளை வளர்க்கும் இடமாகவும் காணப்படுகின்றது.

கடந்த 10 வருட புள்ளி விபர அறிக்கையின் பிரகாரம் ஆதன முதலீடு, பங்குச்சந்தை முதலீட்டை விட சிறந்ததாகக் காணப்படுகின்றது. ஆனால் கடந்த கால புள்ளிவிபரம் எதிர் காலத்திலும் நடக்கலாம் என எதிர்பார்க்க முடியாது.

எனினும் புதிய வரவாளர்களின் வருகையில் ஏற்பட்டுள்ள அரசின் கொள்கை, வட்டிவீத அதிகரிப்புகள் - எதிர்மறைவான நிலைமையை ஏற்படுத்தலாம் எனத் தோன்றவில்லை. இருப்பதற்கு இடம் தேவை என்பது உண்மையாக இருப்பதால், இதனைப்பற்றி சிந்தித்து ஆதனத்தில் முதலீடு செய்வது தவறான முடிவாக இருக்காது எனத்தான் தோன்றுகின்றது. எதற்கும் தகுந்த முகவரின் அறிவுறுத்தலுடன் முடிவு எடுக்கலாம்.


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



*Raja Mahendran*, P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

* INDEPENDENTLY OWNED AND OPERATED

**HOUSE FOR SALE**
**KENNEDY & SHEPPARD**
'50 X 250' land. Builders choice. Detached house. Asking price $650k

**HOUSE FOR SALE**
Semi detached. 3 Bedrooms 3 washrooms. Attached garage. Finished bsmt. hardwood floor milton special. Asking price $439,900

**CONDO. FOR RENT**
**YONG & FINCH**
1 Bedroom condo for rent. 1 Parking. Available in mid November 2014. Asking $1,400.

**CONDO FOR RENT**
**Tridel Condo.**
Brand new never lived. 2 Bedrooms and 2 washrooms. Avail. immediately. Rent $1,450

**BRAND NEW DETACHED HOUSE FOR SALE**
To be Built. 3800sq.ft. + 4800sq.ft Asking price $1.3 Million.

**CONDO FOR RENT**
Brand new condo. with rental guarantee. Only certain units available in Downtown Toronto. Close to CN Tower, Rogers center. From $270k

**New Condo. projects By Tridel Special price**
i. Islington & Bloor
ii. Kennedy & HWY 401
iii. AQUAVISTA Project lakeview

# 3 அமெரிக்க மாநிலங்களில் தமிழ் மொழிக்கு அங்கீகாரம்

அமெரிக்கத் தமிழ் கல்விக்கழகம் (அ.த.க.) என்கிற இலாபநோக்கமற்ற வரிவிலக்கு பெற்ற கல்வி அமைப்பு 4 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்டது. முதற்கட்டமாக ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தை அறிமுகப் படுத்தித் தற்பொழுது 62 பள்ளிகள் அவற்றைப் பயன்படுத்துகின்றனர், அமெரிக்க நாட்டில் மட்டுமல்லாது இங்கிலாந்து, ஆஸ்திரேலியா நாட்டில் நடைபெறும் பள்ளிகளும் இவற்றில் அடங்கும்.

இதுவரை 8 நிலைகள் உருவாக்கப்பட்டு 3500க்கும் மேற்பட்ட மாணாக்கர் தமிழ் பயில்கின்றனர். அனைத்துத் தமிழ்ப் பள்ளிகளுக்கும் மாணாக்கருக்கும் பயன்படும் வகையில் கல்வி மேலாண்மைக்கான பொதுவான மென்பொருள்களை நிறுவி உதவி புரிகிறது. அமெரிக்கத் தமிழ்ப் பள்ளிகள் அனைத்தும் வாரயிறுதியில், முழுதும் தொண்டர்களால் இலாப நோக்க மற்று நடத்தப்படுபவை. தம் பிள்ளைகள் அமெரிக்க மண்ணில் வாழ்ந்தாலும், அவர்கள் தமிழ் படிக்க வேண்டுமென விழையும் பெற்றோர்கள் செலுத்தும் கட்டணங்களை மட்டுமே முதலாகக் கொண்டு நடைபெறும் பள்ளிகள் தான் அனைத்துமே. பயிற்று விக்கும் ஆசிரியர் யாவரும் ஊதியம் எதுவுமின்றி ஒவ்வொரு வாரமும் தங்களின் பொன்னான நேரத்தைச் செலவிட்டுப் பணியாற்றும் தன்னார்வத் தமிழ் பெற்றோர்கள் தாம். எந்த அரசாங்கங்களும் (இந்திய/தமிழக) இவற்றுக்கு நிதியுதவியோ, இடமோ, பொருளோ வழங்குவதில்லை.

அமெரிக்க நாட்டில் இலாப நோக்கமற்ற அமைப்புகளுக்கு வழங்கப்படும் சலுகையாக வகுப்பறை வசதிகள் சற்றுக் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு கிடைக்கின்றன. தன்னார்வச் சேவைகளால் இயங்கும் தமிழ்ப் பள்ளிகளின் செலவீனங்களில் பெரும்பகுதி வகுப்பறை வாடகைக்கே செலவாகிறது. பெற்றோரின் விருப்பத்திற்காகத் தொடக்கப் பள்ளியில் (நான்கு / ஐந்தாம் வகுப்பு வரை) படிக்கும் மாணாக்கரே பெரும்பான்மையாக வாரக்கடைசியில் நடைபெறும் தமிழ்ப் பள்ளிகளில் பயில்கின்றனர். நடுநிலை/ மேல்நிலை பள்ளி மாணாக்கரின் முதன்மை கல்வி சார்ந்த வகுப்புகளும் அதனை ஒட்டிய வீட்டுப்பாடங்களும் தினசரிச் சுமையாகிப் போவதால் அவர்களுக்கு வாரநாட்களில் மிகக்குறைந்த நேரமே கிடைக்கிறது. வாரக் கடைசி நாட்களில் இவர்கள் விளையாட்டு, மற்ற பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

இந்த ஆளுமையிலிருந்து மாணாக்கரை மீட்டுத் தமிழ் மொழி கற்பதிலும் அவர்களுக்குப் பயன் உள்ளது என்பதைப் பெற்றோரின் வற்புறுத்தலின்றி அவர்களாகவே உணர, தமிழ்ப்பள்ளிகளுக்கு உயரிய கல்வி நிறுவனம் எனும் அங்கீகாரம் ஒரு மாபெரும் தேவை. அமெரிக்காவில் இரண்டாவது மொழியாகவே தமிழ் மொழியைக் கற்கிறார்கள். அமெரிக்க நாட்டுக் கல்வி முறைப்படி குறைந்த பட்சம் மேல் நிலைப் பள்ளியில் (9 முதல் 12 வரை) நான்கு ஆண்டுகள் ஆங்கிலமன்றி வேறொரு மொழியை மாணாக்கர் கட்டாயமாகப் பயில வேண்டும். இதற்காக 4 மொழி மதிப்பீட்டு புள்ளிகளை (language credits) மாணாக்கர் பெற முடியும். இதனால் கல்லூரியில்/ பல்கலைக்கழகத்தில் இளங்கலையில் சேருவதற்குத் தேவையான கூடுதல் புள்ளிகள் கிடைப்பதுடன், கட்டணமும் வெகுவாகக் குறைகிறது.

மொழி மதிப்பீட்டு புள்ளிகளுக்காக ஸ்பானிஷ், ஜெர்மன், ∴ப்ரெஞ்ச், ஏன் ஜப்பானிய, சீன மொழிகளைப் பயிலும் தமிழ் மாணாக்கர் அமெரிக்க நாடு முழுவதும் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் மற்ற மொழிகளுக்கு மாற்றாக அல்லது கூடுதலாகத் தமிழ் மொழியைப் பயில்வது அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய 4 மதிப்பீட்டு புள்ளிகளைப் பெற்றுத்தரும். தமிழ்ப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் பெறுவது என்பதைத் தலையாயக் கடமையாகக் கொண்டு அ.த.க. கடந்த 3 ஆண்டுகளாகப் பணியாற்றி வந்ததன் பயனாகத் தற்பொழுது 3 மாநிலங்களில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

மினசோட்டா, மிசௌரி, & டெக்சஸ் (ஹூஸ்டன் நகரப் பள்ளி) பள்ளிகள் இந்த மாபெரும் அங்கீகார முத்திரையை ஈண்டெடுத்திருக்கிறார்கள். ஹூஸ்டன் பள்ளி முதலில் ஜூன் 2014ல் இந்த அங்கீகாரத்தைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து மினசோட்டா/மிசௌரி மாநிலப் பள்ளிகள் அக்டோபர் 2014ல் இந்த மைல்கல்லைத் எட்டியிருக்கிறார்கள்.

இந்தப் பள்ளி அங்கீகாரத்தை வழங்கிய நிறுவனத்தைப் பற்றிய சிறு குறிப்பு:

அட்வான்செட் (AdvancEd www.advanc-ed.org) எனும் இந்நிறுவனம் கல்வி நிலையங்களின் ஆற்றலைப் பல பரிமாணங்களில் ஆய்வு செய்து தரச் சான்றிதழ் வழங்கும் உலகளாவிய நிறுவனம்.

இதுவரையில் இந்நிறுவனம் உலகம் முழுதும், ஏறக்குறைய 20 மில்லியன் மாணாக்கர் பயிலும், 32,000 கல்வி நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்கி இருக்கிறது. அமெரிக்க நாட்டின் 50 மாநிலங்களிலும் ஏற்கத்தக்க கல்வி மதிப்பீட்டு நிறுவனம் அட்வான்செட் ஒன்று தான். அட்வான்செட் வரையறுக்கும் பள்ளி மதிப்பீடுகளை மீறியதொரு தரம் இன்று வரை எதுவுமில்லை என்று சொல்லலாம். மினசோட்டா, மிசௌரி, ஹூஸ்டன்- டெக்சாஸ் ஆகிய 3 தமிழ்ப் பள்ளிகளும் அரசு நடத்தும் பொதுப்பள்ளிகள் பெற்ற சராசரிப் புள்ளிகளை விட, அதிகப் புள்ளிகள் பெற்று சீர்மிகு தரத்துடன் நடப்பதாக, அட்வான் செட் தனது இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

'எங்களின் 30 ஆண்டு கல்வித்துறை அனுபவத்தில் இத்தமிழ்ப்பள்ளி அமைப்புகள் போன்றதொரு தன்னார்வ கல்வி நிறுவனத்தைக் கண்டதில்லை. பயிற்று வித்தல் என்பது இத்தன்னார்வலர்களுக்கு முதன்மை பணியாக இல்லாவிடினும் தரமான கல்வி மற்றும் கல்வி நிறுவனத்துக்கான அத்தனை தேவைகளையும்/பணிகளையும் இவர்கள் திறம்படச் செய்வது கண்டு வியக்கிறோம். அத்துடன் தமிழ் மொழியின் மேல் கொண்டிருக்கும் பற்றைப் பள்ளி நிர்வாகக் குழு, ஆசிரியர், பெற்றோர் மற்றும் மாணாக்கர் உட்பட அனைவரின் கண்களிலும் நாங்கள் காண முடிந்தது' என்றார்கள்.

ஆசியாவின் மூத்த செம்மொழியான தமிழ்மொழி 2000 ஆண்டுகளுக்கும் மேலாக, மாற்றங்களற்ற இலக்கணத்துடன் பயன்பாட்டில் உள்ள ஒரே மொழி என்பதனை உலக வல்லரசான அமெரிக்காவும் உணர்ந்து போற்றும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. பல்வேறு நாட்டு இனங்களையும் மொழிகளையும் பேசும் புலம்பெயர்ந்த மக்களைப் பிரதானமாகக் கொண்டு, அனைத்துப் பண்பாடுகளையும் மொழிகளையும் சமமாக மதிக்கும் அமெரிக்க நாடும் தமிழின் உயர்வையும், பெருமையையும் உணரத் துவங்கியுள்ளது.

## *Tutorial 290 [MATH]*

***Questions (Answers will appear on next issue)***

1) Give 2 equivalent numbers for the following.
   (a) 2.5 (b) 3.05
   (b) Write down the value of (a) Two Hundred Five Thousandths
   (ii) Three Hundred and six Hundredths [For Grade 6]

2) What is the last digit of, a] 3^237 b] 2^247 [for gr. 8]

3) An escalator move at a constant rate from one floor to the next floor. Jack walks up 29 steps while travelling on the escalator between the floors. Jill takes twice as long to travel between the floors and walk up only 11 steps when it is stoped, how many steps does the escalator have between the two floors. [for gr. 9]

4) There are 25 men and 20 women who belong to a club. An executive panel consisting of A president,vice president, a secretary and a treasurer is being chosen.
   a] In how many ways could the executive panel be chosen if it must include at least one woman and one man.
   b] In how many ways could the executive panel be chosen if the president and vice President must have different genders.

5) Suppose you take a multiple choice test with 10 questions and each question has 5 answer choices.What is the probability you got exactly 4 questions correct just by guessing.

6) Each of 5 boys chooses a watch from 12 different styles.What is probability at least 2 boys choose the same type of watch.



***By Mr. S.F.XAVIER [Teacher]***
***Tel. 647.340.9490***
***416.732.2228***

விளம்பரம் பத்திரிகையை இணையத்தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

# SPECIAL DEAL FOR BUYERS & SELLERS

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

**Also Free Moving**

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

**Get More $$$ For Your House By Calling Me!**

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

(This Deal Start From March 01st to November 30th)



## Lourdson Antonipillai

(Sales Representative)

**Dir: 416.738.8824**

**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

HOMELIFE
HIGHER STANDARDS

*Independently Owned & Operated

# வரவு செலவு...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

கட்சியின் தலைவர் ஜஸ்ரின் ரூடோ தெரிவிக்கையில் அரசின் வரிச் சலுகைகள் மேல் தர வர்க்க மக்களுக்கே நன்மைகளை தருகின்றன என்றார். புதிய ஜனநாயகக்கட்சியின் தலைவர் ரொம் மல்கெயர் தெரிவிக்கையில் மத்திய அரசின் வரிச்சலுகைகள் 15% இற்கும் குறைவான கனேடியர்களுக்கே நன்மை பயக்கிறது என்றார். அரசு தனது மேலதிக வரவை கீழ்த்தர மற்றும் நடுத்த வர்க்க மக்களுக்கு பயனளிக்கும் பொதுப்போக்குவரத்து செலவுகளுக்கு பயன்படுத்தாமல் மேல் தரவர்க்க மக்களுக்கு இரண்டாவது BMW மகிழுந்து வேண்ட உதவுகிறது என்றார்.

இரண்டு பெற்றோருக்கும் இடையே பகிரப்பட்டு கணிக்கப்படும். அதாவது வருமானம் குறைந்த அல்லது வேலைக்கு செல்லாது வீட்டில் பிள்ளைகளை பராமரிக்கும் ஒரு பெற்றாரிற்கு மற்றவருடைய வருமானத்தில் இருந்து ஆகக்கூடியது $50 ஆயிரம் வரை மட்டும் வருமானமாக மாற்றப்பட்டு இருவருக்கும் வருமான வரி கணிக்கப்படும் என கூறியிருந்தது. இதனால் 1.8 மில்லியன் கனேடிய குடும்பங்கள் பயன்பெறும் என்று கூறியிருந்தது.

தற்போது கனேடிய மத்திய அரசு தாங்கள் கூறிய தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றமுன் வந்துள்ளது. ஆனால் இவ்வாக்குறுதியை அப்படியே நிறைவேற்றினால் முன்னாள்



இவற்றை மறுதலித்து பதிலளித்துள்ள நிதி அமைச்சர் யோ ஒலிவர், குழந்தைப் பிள்ளைகள் உள்ள எல்லா குடும்பங்களும் இவ்வரிச்சலுகைகளால் சராசரி $1,140 ஐ சேமிக்கிறார்கள் என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் 25% கனேடியக் குடும்பங்கள் $30,000 இற்கு உட்பட்ட குடும்ப வருமானம் உள்ளவர்கள். அவர்களும் இவ் வரிக் குறைப்பால் பயனடைகிறார்கள் என்றார்.

பழமைவாதக்கட்சி தனது கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாங்கள் பதவிக்கு வந்தால் வருமான வரி கணிப்பின்போது குடும்ப வருமானம்

நிதியமைச்சர் ஜிம் ஃபிளாரிட்டி கூறிய மாதிரி மேல் தரவர்க்கம் அதிகூடிய வருமான வரி விலக்கை பெறுவார்கள் என்றபடியால் தற்போதைய நிதி அமைச்சர் யோ ஒலிவர் இவ்வருமான வரிக்குறைப்பிற்கு உச்சவரம்பாக $2,000 மட்டுமே பெறலாம் என்ற மாற்றத்துடன் தங்களது தேர்தல் வாக்குறுதியை பழமைவாதக்கட்சியினர் நிறைவேற்றுகின்றனர். இதனால் பழமைவாதக்கட்சியின் தேர்தல் பிரசார அறிக்கையில் கூறியபடி 1.8 மில்லியன் கனேடிய குடும்பங்கள் இந்த வரி விலக்கால் பயன் பெற்றாலும் அதில் 543 ஆயிரம் குடும்பங்களது வரிக் குறைப்பு $2,000 உடன் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த குடும்ப வருமானதை பகிர்ந்து வருமானவரி கணிக்கும் முறையை வெளியிட்ட பிரதமர், தற்போது உள்ள கனேடிய வருமான வரி கணிக்கும் முறை இரண்டு பெற்றோரையும் ஒரு அறையில் வாழும் இருவர் (room-mates) போலக் கணிக்கிறது. அவர்களுக்கு இடையே உள்ள குடும்ப உறவை கருத்தில் கொள்ளவே இல்லை. இது சரியானது அல்ல. மற்றும் யதார்த்தமும் அல்ல. அதனாலேயே தனது அரசு இந்த வருமானவரி கணிக்கும் முறையில் மாற்றம் கொண்டு வருகிறது என்றார்.

### கனேடிய மத்திய அரசின் தற்போதைய வருமான வரி வீதம் பின்வருமாறு

| | |
|---|---|
| $0-$43,953 | 15% |
| $43,954 - $87,907 | 22% |
| $87,998 - $136,270 | 26% |
| $136,270 க்குமேல் | 29% |

இதனால் தற்போது 18 வயதிற்குட்பட்ட பிள்ளை உள்ள குடும்பம் ஒன்றில் ஒரு பெற்றார் $60,000 உம் மற்றவர் $12,000 வருமானமாக உழைத்தால் அவர்கள் மத்திய அரசின் வருமான வரியாக $8,582 செலுத்துவார்கள். தற்போது அறிவித்துள்ள குடும்ப வருமானத்தைப் பகிர்ந்து மத்திய அரசின் வருமான வரி கணிக்கும் முறைப்படி இவ்விரண்டு பெற்றோரும் ஒருவர் $36,000 ஐயும் மற்றவர் $36,000 ஐயும் வருமானமாக பெறுபவர்களாக கணக்கில் கொண்டு மத்திய அரசின் வருமானவரி கணிக்கப்படும். இதனால் இக்குடும்பம் மத்திய அரசின் வருமான வரியாக $7,458 ஐ செலுத்துவர். அதாவது இக்குடும்பம் இப்புதிய வருமானவரி கணிப்பின் மூலம் $1,124 ஐ சேமிக்கிறார்கள்.

இவ்வாறு குடும்பவருமானத்தை இரண்டு பெற்றோரிடமும் பங்கிட்டு வருமானம் வரி கணக்கு பார்க்கும் முறை அமெரிக்காவில் 1948 ஆம் ஆண்டில் இருந்தே அமல்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதிசயம் ஆனால் உண்மை...

உங்கள் கைபேசி எண்ணை வைத்து உங்கள் வயதை கணிக்கலாம்...

1)உங்கள் மொபைல் எண்ணின் கடைசி ஒரு எண்ணை எடுக்கவும்
2)அதை இரண்டால் (2) பெருக்கவும்..
3)அதனுடன் ஐந்தை (5) கூட்டவும்
4)கிடைக்கும் விடையை 50 ஆல் பெருக்கவும்
5) வரும் தொகையுடன் 1764 ஐ கூட்டவும்
6)அதனுடன் நீங்கள் பிறந்த வருடத்தை கழிக்கவும் (உ+ம்-1985,1987,1956 etc)
இப்பொழுது உங்களுக்கு (3 digit) ஒரு விடை கிடைத்திருக்கும்...

அதில் முதல் எண் உங்கள் மொபைலின் கடைசி எண்... மற்ற (2 digit) எண் உங்களின் வயது....!

செய்து பாருங்க. கண்டிப்பாக ஆச்சரியப்படுவீங்கள்.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555


RemaxShan.com
Scarborough
Sheppard/Rouge River
$659,900
Detached
4+2 Beds 5 Baths
Oshawa
Wilson/Taunton
$439,900
Detached
4 Beds 3 Baths
Oshawa
Coldstream & Ritson
$469,500
Detached
4 Beds 3 Baths
Whitby
401/Thickson/Burns
$429,900
Detached
4+1 Beds 4 Baths
Whitby
Anderson And Taunton
$434,500
Detached
3 Beds 3 Baths
Ajax
Rossland And Westney
$400,000
Detached
3+1 Beds 3 Baths
Ajax
Harwood And Kinstston
$429,000
Detached
3 Beds 3 Baths
Ajax
Taunton And Harwood
$474,900
Detached
3 Beds 3 Baths
Ajax
Audley/Williamson
$489,000
Detached
4 Beds 3 Baths
Ajax
Harwood/Rossland
$489,900
Detached
3 Beds 3 Baths
MORTGAGE?
NO PROBLEM
BMO
RBC
CIBC
TD
PRIVATE LENDING ALSO AVAILABLE
Shan Thayaparan
Sales Representative
DIR 416.567.7675
shan@remaxshan.com
#1
RE/MAX
RE/MAX VISION
REALTY INC., BROKERAGE*
*Independently Owned & Operated. Not inteded to solicit
BUS 416.321.2228
#1 - 2210 Markham Rd.
Scarborough, ON M1B 5V6

# வயிறு - உயிர் காக்கும் பெட்டியா? குப்பைத்தொட்டியா?

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

வாழ்க்கை என்னும் பயணத்தில் வயிறு என்னும் இஞ்சினுக்கு சரியான உணவை முறையாக போட்டால்தான் சரியாக இயங்கும். ‘கண்டதை படித்தால் பண்டிதன் ஆகலாம்’ அதுபோல ‘கண்டதை தின்றால் வண்டியன் ஆகலாம்’ என்பர். வயிறு என்னும் பெட்டிக்குள் இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், மலக்குடல், குடல்வால் மற்றும் உமிழ்நீர், பித்தநீர், கணையநீர், குடல் திரவங்கள் போன்றவையும் அடங்கியுள்ளன. வயிற்றினுடைய தசை அழகாக சமமாக இருக்கும்போது அவ்வளவாக நோய்கள் வர வாய்ப்பில்லை. ஆனால் வயிறு வளர்ந்து தொந்தி உருவாகும் போது அல்சர், குடல் இறக்கம் (Hernia), மலச்சிக்கல் போன்ற நோய்களுக்கு வழிவகுத்து விடுகிறது.

காரணம் என்ன? நேரம் தவறி உணவு அருந்துதல், தேவைக்கு அதிகமாக உண்பது, உண்டபின் உடனே உறங்குவது, எப்போதும் நொறுக்குத் தீனியைக் கொறித்துக்கொண்டிருப்பது, அதிகம் கொழுப்பு மற்றும் இனிப்பு சேர்ந்த உணவுகள் இது போன்ற காரணங்களால் வயிறு குப்பைத் தொட்டியாக மாறி விடுகிறது. அதனால் வயிறு பெருக்கும் போது குடல் இருக்கும் இடத்தை விட்டு சற்று சரிகிறது. அதனால் அதனை சார்ந்த சிறுகுடல், பெருங்குடல் போன்ற அனைத்து



உறுப்புகளும் தமது இயல்பு நிலையிருந்து விலகி ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்துவிடுகிறது. இதன் விளைவாக அஜீரணம், வாயுத்தொல்லை, பித்தநீர் அதிகம் சுரத்தல் போன்ற பிரச்சினைகள் ஆரம்பமாகிவிடுகின்றன.

எனவே வாயை ருசியிலிருந்து கட்டினால் வாழ்நாளின் அளவை நீட்டலாம். ஆனால் இப்போது அநேகமாகனோர் தமது வயிற்றை எவ்வளவு நிரப்ப முடியுமோ அவ்வளவுக்கு உண்பார்கள். காலையில் தூங்கி எழுந்ததும் காப்பி, பின்பு காலை உணவு, மீண்டும் தேநீர் பின் வேலைத்தளத்திற்கு வந்த பின் ஏதேனும் ஒன்றை அருந்துவது, கடிப்பது அதன்பின் மதிய உணவு, மாலையில் சிற்றுண்டியுடன் தேநீர், அடுத்து இரவு உணவு, இதுபோன்று இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை ஏதேனும் ஒன்றை



வயிற்றில் போட்டுக் கொண்டிருந்தால் வயிற்றின் இயக்கத்தில் தளர்வு ஏற்படும். இது குப்பை தொட்டியில் குப்பையை திணிப்பது போல ஆகிவிடும்.

மார்பின் சுற்றளவு அதிகமாகவும், வயிற்றின் சுற்றளவு 4 அல்லது 5 அங்குலம் குறைவாகவும் இருக்க வேண்டும். மார்பளவு பெரிதாக இருந்தால் நுரையீரல் நன்கு விரிந்து சுவாசத்தை சீராக்கும். இது இதயத்திற்கு நல்லது. வயிறு பெரிதானால் முதுகெலும்பு நேராக இல்லாமல் வளைந்து விடும். வயிற்றுத் தசைகள் அனைத்தும் முதுகெலும்பை இழுத்துக் கொள்ளும். இதனால் முதுகுவலி, கழுத்துவலி, இதய துடிப்பு அதிகமாகுதல், மேல் மூச்சு வாங்குதல், படபடப்பு ஏற்படுதல் போன்ற பல தொல்லைகள் தொந்தி காரணமாக வயிற்றுப் பெட்டியை வந்தடைகின்றன.

வேலைப்பழுவின் காரணமாகவும், நேரம் கிடைக்காமையினாலும் அவசர அவசரமாக வயிற்றுப் பெட்டிக்குள் உணவை அள்ளித் திணிப்பார்கள். இதனால் ஜீரணக்குடல் கெட்டுப்போகும். அல்லது மலக்குடல் கெட்டுவிடும். இதை அனைவரும் உணர வேண்டும். சீனர்கள் (Chinese) நீண்டநாள் வாழ்வதற்கு ஒரு இரகசியம் உள்ளது. எவ்வளவுதான் பசியால் தவித்த போதும் அவர்கள் உணவை வாரி வாய்க்குள் திணிக்கமாட்டார்கள். அவர்கள் உணவை உண்ணும் முறையே விஞ்ஞானரீதியான கலாசாரமாக உள்ளது. ஒரு நீண்ட குச்சியை வைத்துக்கொண்டு கைவிரல்களால் கொஞ்சமாக எடுத்து நன்கு மென்று விழுங்குவார்கள். மீண்டும் விரல்களால் குச்சியைப் பிடித்து உணவை எடுத்து உண்பார்கள். இதன் மூலம் சிறிது சிறிதாக உட்கொள்ளப்படுவதால் வாயின் உமிழ்நீர் கலந்து கூழ்போன்று அரைத்தும் குடலுக்குள் செல்வதால் ஜீரண உறுப்புகளுக்கான வேலைப்பழுவும் குறைந்து எளிதாக ஜீரணமடைவதுடன் ஆயுளையும் அதிகரிக்கச் செய்கின்றது.

ஆரோக்கியமான உணவு முறைகளைப் பொறுத்தவரை அறுசுவைகளான இனிப்பு, புளிப்பு, உப்பு, உறைப்பு, துவர்ப்பு, கசப்பு போன்றவற்றை நாள்தோறும் உணவில் சேர்த்துவர வேண்டும். ஆனால் இப்போதெ



ல்லாம் நாம் கசப்பு, துவர்ப்பு போன்றவற்றை உணவில் சுவை கருதி சேர்ப்பதில்லை. இவைதான் இரத்தத்தை தூய்மைப்படுத்துவதில் பெரும்பங்களிப்பு செய்கின்றன. குடலில் நோய்கிருமிகள் அணுகாமல் பாதுகாக்கும், வயிறு மந்தமடைவதை தடுக்கும் சுவைகள் கசப்பு, துவர்ப்பு என்பனவே.

இறுதியாக வயிற்றுப் பெட்டியினுள்ள உறுப்புகள் அனைத்தையும் செம்மையாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்வதற்கு யோசனங்களிலுள்ள பயிற்சிகளைவிட சிறந்தவை வேறொன்றுமில்லை. அவற்றுள் முக்கியமானவை.

1. பஸ்ஸிமொத்தசானம்
2. தனுராசனம்
3. பவனமுத்தாசனம்
4. புஜங்காசனம்
5. உட்டியானா
6. நாடிசுத்தி

அத்துடன் மலச்சிக்கல், செரியாமை இவை இரண்டும்தான் வயிற்றுப் பிரச்சினை அனைத்திற்கும் மூலகாரணம்.


AUM WELLNESS CLINIC IN

Healing Massage, Suffering From Pain?

Get Relief From:

| | | |
|---|---|---|
| முதுகுவலி | கழுத்துவலி | தோள்பட்டைவலி |
| முழங்கால் வலிகள் | தீராததலைவலி | நரம்புப்பிடிப்பு |
| நீரிழிவு | தூக்கமின்மை | கொலஸ்ரோல் |
| உடல் எடை குறைத்தல் | இரத்த ஓட்டத்தை சீராக்குதல் | |

**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

Dr. Lata

Based on Appointment



Cell: 416.890.9217 Office: 647.304.6046
5215 Finch Ave. E. #220, Toronto, ON



ஆரோக்கிய வாழ்வு

Diploma in Yoga Therapy (India)

416.289.2033 after 7:00pm
416.617.5721

YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# குரலோசையின் தன்மைகள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நாம் நன்றாக வாழ்வதற்கு நமது உறுப்புக்கள் யாவும் நல்ல நிலையில் இருக்க வேண்டும். குரலைப் பொறுத்த மட்டில் எல்லோருக்கும் ஒரே தன்மை இருப்பதில்லை. ஓசை, பேச்சில் மாற்றம் இருக்கும். எனவே எதற்கும் பயிற்சி முறை யால் பயன்பெறமுடியும். இதற்கு முயற்சி முக்கியமாகும். குரல் சீராக இருந்தால்தான் ஓசைப் பயனைப் பெறமுடியும். இதற்கு நல்ல மூச்சுத்திறன் முக்கியமாகும். நல்ல சுவாசக் கட்டுப்பாடுடன் (good breath control) சரியான முறையில் சுவாசநிகழ்வு அமைய வேண்டும்.



நாம் பேசுவதற்கு தேவையான காற்றை நுரையீரல் நிரப்ப வேண்டும். அதாவது மூக்கின் மூலமாக சுத்தமான ஆழ்ந்த சுவாசத்தை பெற்றுக் கொள்ள பயிற்சிமுறை முக்கியமாகும். அத்துடன் தெளிவான உரைக்கு சரியான முறையில் சுவாசத்தை அடக்குதல் போன்றவற்றை கையாள வேண்டும்.

நாம் சுவாசிக்கும்போது வாயை மூடிக் கொண்டு மூக்கின் வழியால் சுவாசிக்க வேண்டும். ஆழ்ந்த சுவாசப் பயிற்சியானது மூச்சுத்தசைகளை உறுதிப்படுத்தும் எனக் கூறப்படுகின்றது.

நாம் பேசும் போது காற்றை உள் வைத்துக் கொண்டு பின்பு வெளிவிடுகின்றோம். எனவே இதற்கு முக்கியம் சுவாசக்கட்டுப்பாடாகும். இதற்கு பயிற்சி முறை உண்டு. மெதுவாக மூச்சை வெளியே விட்டு இடையிடையே நிறுத்தவும். சுவாசித்த காற்றை அடக்கிப் பின் மெதுவாக வெளிவிடல் நன்றாகும். இப்படி செய்வதற்கு நேரத்தை ஒதுக்கி பயிற்சி முறைகளைக் கையாள வேண்டும். இதனை மேற்கொள்ள யோகா பயிற்சி பெற்றவர் களிடம் சென்றால் நற்பயனைப் பெறமுடியும்.

மேலும் செவிப்புலன் குறைந்தோர் முதலில் முறையாக சுவாசப்பயிற்சி எடுக்க வேண்டும். செவிப்புலன் குறைந்த பிள்ளைகளைப் பார்த்தால் அவர்களின் சுவாசநிலை பலவீன மாக காணப்படும். இதன் காரணத்தை நோக்கும்போது இவர்கள் பேசுவதற்கு ஆழ்ந்த சுவாசத்தை எடுப்பது குறைவே யாகும். இப்படியானோர் கதைக்கும்போது ஒவ்வொரு வார்த்தையும் மூச்சை விட்டு விட்டுப் பேசுவர். பேச்சைக் கற்றுக் கொள்ளும் போது மற்றக் குழந்தைகளைவிட இவர்களுக்கு பேச மூச்சு அதிகம் தேவை. இவர்கள் மெதுவாகப் பேசுவதினால் இரு முறை வெளிகாற்று நுரையீரலுக்குள் செல்லுகின்றது.

அதாவது ஒருவர் மூச்சை உள் இழுக்கும் போது தோள் பகுதி மேலே உயரக் கூடாது எனவும் வயிற்றுத் தசைகள் முன் தள்ளக் கூடாது எனவும் கூறுவர். விலா எலும்புகள் விரிவடைவதினால் ஏற்படும் மூச்சு சரளமாக இருக்கவேண்டும்.

நாம் நாளாந்தம் சுவாசப்பயிற்சி செய்து கொண்டு வருவோமானால் சுவாசத் தசைகள் வலுவடையும். இதனால் நன்மை பெறமுடியும். ஒருவருக்குப் பலமான தொனி இருந்தால்தான் குரல் நல்லமுறையில் அமையும். செவிப்புலன் அற்றோர் மகிழ்ச்சியாக இருக்கும் போது நன்றாகச் சிரிக்க வைத்து வார்த்தைகளைக் கற்றுக்கொடுக்க வேண்டும். பாடல்களை நல்ல இசையுடன் பாடிக் காட்ட வேண்டும். அப்பொழுது அவர்களும் கற்கவோ, பாடவோ முனைவர். நல்ல சொற்கள் அமைந்த பாடல்களை C.D யில் பெற்று அவர்களுக்கு அருகாமையில் கேட்கக் கூடியதாக வைப்பதினால் நன்மையுண்டாகும். குரலானது சில வேளையில் ஆரம்பநிலையில் பலம் உள்ளதாகவோ பலம் அற்றதாகவோ காணப்படலாம். ஆனால் ஆரம்பத்தில் சத்தம் உள்ள குரலை எதிர்பார்க்கக் கூடாது குழந்தையின் குரல் தெளிவாகவும், இனிமையாகவும் இருந்தால் போதுமானது. பின்பு அவர்களை சத்தமாகவும் பேசக் கற்றுக் கொடுக்கலாம். சத்தம் என்றால் மெதுவாகப் பேசுவதை விட ஓரளவு உயர்த்திப் பேசுதலாகும்.

சிலர் குரலை உயர்த்திப் பேசுவர், சிலர் குரலைத் தாழ்த்திப் பேசுவர் எனவே இந்த குரல்ஒலியால் நன்மையும் தீமையும்


வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**

D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796


தொடர்ச்சி 14ஆம் பக்கம்




# குரலோசையின்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

உண்டு. எனவே இந்த குரல் ஒலியால் நன்மையும் தீமையும் உண்டு. உரிய இடம் கண்டு குரலைப் பயன்படுத்த வேண்டும். இதனைக் கவனிக்கும் போது சுவாச வேகத்தைப் பொறுத்து குரல்வளை விரிந்து குரல் ஒலி மிகுந்து கேட்கும். சுவாசப் பயிற்சி மூலம் அகன்ற மார்ப்பும், நல்லவலுப் பெற்ற நுரையீரலும், குரல்வளை விருத்தி ஏற்பட்டு குரலின் பலத்தை நல்ல முறையில் ஏற்படுத்திக் கொள்ளும்.

குரலின் தன்மை தொனி எனக் கூறப்படுகின்றது. தொனியை உயர்வு, தாழ்வு என பிரிக்கலாம். அத்துடன் தொனிகள் இனிமையுடன் தெளிவாகவும் இருக்க வேண்டும். கேட்போரைக் கவரக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

குரல்வளையில் அழுத்தம் அதிகமானால் தொனி அதிகமாக இருக்கும். அழுத்தம் குறைவாக இருந்தால் தொனியும் குறைந்து காணப்படும். சுவாசக்குழலின் தன்மையும் ஓரளவு தொனியில் வேறுபாட்டை உண்டாக்கலாம். சுவாசக்குழல் நீளமாக இருப்பின் தொனி குறைவாக இருக்கும். குரல்வளையின் தசையால் அழுத்தம் மாறுபடலாம்.

குரல் ஓசை என்று குறிப்பிடும்போது பேச்சின் ஒலியை குறிக்கின்றது. அதாவது பேச்சு ஒலிகள் காது கேளாத குழந்தைகளுக்கு கற்றுக்கொடுத்த பின்பு அதில் இருந்து வார்த்தைகளை கற்பிப்பது பகுத்தாய்கின்ற முறையாகும். இம்முறையினால் இயற்கையான முறையில் பயன்பெறமுடியும். சிறு பிள்ளைகள் பெரிய பிள்ளைகள் விட கலகலப்பாகவும் தெளிவாகவும் தவறற்று



உச்சரிக்க கற்றுக்கொள்ள முடியும். இவ்வேளையில் ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கும் போது எளிதில் உச்சரிப்பதற்கு தகுந்த வாய் அசைவை அறிந்து கொள்ள முடியும். கற்றுக் கொடுக்கும் போது உச்சரிப்பு தானாக வரும்வரை அச்சொல்லை மீண்டும் மீண்டு தொடர்ந்து கூறிக் கொள்வர். எனவே ஒரு வார்த்தையை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுத்து வருதல் வேண்டும். இதனால் நற்பயன் உண்டு.

சிறுபிள்ளைகள் பேசும்போது உறுப்புக் களுக்கு அதிக அசைவைக் கொடுப்பதை பெரும்பாலும் தவிர்த்தல் வேண்டும்.

நாம் ஒன்றை நன்கு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். எங்கு நாம் சென்றாலும் நம்மிடம் ஒருவர் பேசத்தொடங்கியவுடன் நம்மைப்பற்றி உயர்ந்த, தாழ்ந்த எண்ணங்களை ஏற்படுத்த குரல் தான் முதன்மையாகவுள்ளது. இதனை மனதில் இருத்திக் கொண்டு எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

குரல் மாறுபட மேலும் புகை பாதகமாக அமைகின்றது. பெரும்பாலும் புகைபிடிப்போர் குரலை அவதானித்தால் அவர்களின் தொனி, ஒலி மாற்றலாகக் காணப்படும். மற்றும் புகை சார்ந்த சுற்றாடலில் தங்கினாலும் குரல் மாற்றம் மாறுபட ஏதுவாகும். மற்றும் சளி, சுரம் போன்ற வியாதிநிலை ஏற்பட்டாலும் நமது குரல் ஒலி பங்கம் அடைவதை அறிவோம். இவற்றுக்கு தகுந்த முறைகளைச் கையாள வேண்டும்.

மேலும் கூறப்போனால் நாம் தங்கும் இடம் நல்ல காற்றோட்டம் செறிந்த இடமாகவும் வெப்பம் அற்ற இடமாகவும் அமைய வேண்டும். மேலும் அதிக காரமான உணவுப் பண்டங்களை தவிர்ப்பது நன்மை பயக்கும். அதேபோன்று அதிக சூடானவற்றையும் கையாளாதிருந்தால் குரல் செம்மையடைந்து மாற்றமடையாது.

மேல்கூறப்பட்ட உணவுப்பண்டங்களினால் வயிற்றில் உள்ள (இரைப்பை) அமிலத்தன்மையை அதிகரிக்கச் செய்து புரை ஏறும் நிகழ்வை ஏற்படுத்தி குரலை பங்கப்படுத்தும் நிலையை உருவாக்கிவிடும். அத்துடன் நின்றுவிடாது குரல்வளைப் பகுதியில் அமிலத்தன்மை உருவாகி அவ்விடத்தில் புண் தாபிதமும் ஏற்பட ஏதுவாகலாம்.

எனவே இப்படியான அமில வெப்பு உணவுப் பண்டங்களினால் அல்லது திரவங்களினால் குரல்மாற்றம் நிகழ இடம் உண்டு. மதுபானம் அளவுக்கு மீறி எடுக்கும்போது தணிப்பதற்குரிய பானங்களை சேராமல் பாவிப்பதினாலும் குரல்மாற்ற நிலை ஏற்பட ஏதுவாகும். மேலும் ஈரலில் மாற்ற நிலையை ஏற்படுத்தி உணவை சமிபாடடையச் செய்யுக் சக்தியை இழுக்கச் செய்கின்றது. இப்படியான நிலைகளிலும் நமது குரல் மாறுபடலாம். எதற்கும் முன்சிந்தனை வேண்டும்.

பெண்களைப் பொறுத்தமட்டில் சோகை நோய் தொண்டை இறுக்கம் ஏற்பட்டு குரல்மாற்றம் ஏற்பட இடமாகலாம். மேலும் சொல்லப் போனால் குரலுக்கு ஓய்வும் முக்கியமாகும். குரல்வளைப் பகுதியில் ஏதும் அறுவை சிகிச்சை பெற்றிருந்தாலும் ஓய்வு பிரதானமாக கையாள வேண்டும்.

மேலும் குரலைப்பாதுகாக்க அதிக சத்தமான இடங்களில் பேசுவதை தவிர்த்தல் வேண்டும். தொலைபேசியில் நீண்டநேரம் பேசிக் கொண்டிருந்தால் செவிப்புலன் கெடுவதுடன் குரல் ஒலியும் பாதிக்கப்படலாம் என ஆய்வுநிலையில் அறிய முடிகின்றது. கண்ட கண்ட வேளையில் மேடைப் பேச்சில் பங்கு எடுப்பதினாலும் குரலில் மாற்றநிலை ஏற்படலாம். இப்படி ஆடல் பாடல் நிகழ்வில் சேர்ந்து கொள்பவர்களுக்கும் குரல் மாற்றம் ஏற்பட ஏதுவாகலாம். எனவே எதுவும் அளவோடு கையாண்டால் கெடுதி ஏற்படாது என்பதை உணர்வது நன்று.

நமது ஒலியன் தன்மையை இலகுவில் கண்டுகொள்ள நாம் பாடும் பொழுதோ அன்றி உரையாடும் போதோ பேச்சுப் பேசும் போதோ அதனை ஒலி நாடா மூலம் பதிவு செய்து கேட்டுக் கொள்வதினால் யாவும் நன்கு புலனாகும். இதனால் தகுந்த மாற்ற நிலையை அமைத்துக் கொள்ளலாம்.

எனவே எம்மை நாம் பாதுகாப்பது எம்மிடமே உண்டு என்பதை நன்கு உணர்ந்து கொள்ளுங்கள்.

# அவலம் மாறிடுமா?



**மண்சரிவில் புதையுண்டு மரணித்த மலையக உறவுகளுக்கு அஞ்சலி!**

மண்ணிற் புதைந்து உயிர்நீத்த
மலையத் துறவுகள் அனைவர்க்கும்
கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறோம்!
கைகளைக் கூப்பி வணங்குகிறோம்!!

கோப்பி தேயிலை றப்பருடன்
கொக்கோ மிளகுத் தோட்டத்தில்
ராப்பக லாகப் போராடி
இரத்தம் சிந்தும் உறவுகளே!

காலங் கால மாயுழைத்தும்
கடைத்தே றாது மலையகத்தில்
ஞாலம் வெட்க வாழ்வோட்டும்
நமது அன்பு உறவுகளே!

பட்ட காலே படுமென்ற
பழமொழிக் கேற்ப நலிவுகளால்
கெட்டு நொந்து வாழ்கின்ற
கிட்டிய எங்கள் உறவுகளே!

இருநூ றாண்டுகள் மலையகத்தில்
இருந்து உழைத்தும் விடிவுதனைச்
சிறிதள வேனும் காணாத
தேயிலைத் தோட்டத் துறவுகளே!

காசுப் பயிர்க்கு உணவாகிக்
கரைந்து போகும் உறவுகளே!
கூசும் மனதுடன் உம்துயரிற்
கூடி நாமும் பங்கேற்றோம்!!

நெஞ்சை உலுக்கிய சம்பவத்தை
நேர்ந்த துயரக் கதைகேட்டு
அஞ்சலி கூறும் வாயால்நாம்
ஆறுதல் கூறவும் முனைகின்றோம்!

அடிபட் டவர்கள் தமக்குள்ளே
ஆறுதல் கூறி மகிழ்தல்போல்
விடிவைத் தேடும் நாம்சேர்ந்து
விரைந்து கூடிச் செயற்படுவோம்!

மண்ணிற் புதையும் வரலாறு
மலையகத் திற்கே உரித்தென்று
எண்ணித் தானோ தெய்வங்கள்
இறங்கிக் கீழே வரவில்லை!!

எத்தனை தலைமைகள் கண்டீர்கள்!
எத்தனை உறுதிகள் பெற்றீர்கள்!!
அத்தனை யும்நம் உறவுகள்போல்
ஆழப் புதைந்து போயினவோ??

வெள்ளைக் காரன் போய்விட்டால்
விடிவு வருமென எதிர்பார்த்தீர்
கொள்ளை அடிப்போர் நிறம்மாறிக்
கொடுமை செய்தல் தொடர்கிறதே…!

தலையெடுக் கின்ற இளவல்கள்
தட்டிக் கேட்பா ரெனஇருந்தீர்!
விலைபோய் விட்ட அவர்கள்தான்
விடிவைக் கண்டார் என்செய்வீர்…!

மலையைக் கரைக்கும் மழைபோற்கல்
மனதைக் கரைத்து மலையகத்தார்
நிலையை மாற்றும் நிகழ்வாக
நேர்ந்த அவலம் மாறிடுமா?

- சபா அருள்சுப்பிரமணியம் -

**COMMERCIAL UNITS FOR SALE**

Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

**Pl. call: 416.315.9397**

# அன்புடைமை - 6

திருவள்ளுவரின் 76வது குறளில் இருந்தே இந்த இதழின் தொடர்கட்டுரையை ஆரம்பிப்போம்.

‘அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை’

நிற்கின்றது’ என்று மு.வ விளக்கம் கொடுத்துள்ளார். ‘தருமத்துக்கு அன்பு துணையாவதோடு, பாவத்தை நீக்கவும் அதுவே துணையாகும்’ என்று சாமி சிதம்பரனார் விளக்கம் கொடுத்துள்ளார். இந்தக் குறளின் மூலம் அன்புடைமையின்




இந்தக் குறளிற்குப் பரிமேலழகர் ‘அன்பு துணையாவது அறத்திற்கே என்று சொல்லுவர் அறியார். ஏனை மறத்திற்கும் அவ்வன்பே துணையாவது’ என்றவாறு பொருள் உரைத்துள்ளார். ‘வீரச் செயல் களுக்கும் அன்பு துணையாகத் திகழ்கிறது என்பதை அறியாதவர்களே, அறச் செயல்களுக்கு மட்டுமே அன்பு துணையாக இருப்பதாகக் கூறுவார்கள்’ என்று கலைஞர் இதற்கு விளக்கம் கொடுத்துள்ளார். ‘அறியாதவர், அறத்திற்கே மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர். ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அதுவே துணையாக


முக்கியத்துவம் தெரிகின்றது. அன்பு என்பது மன உணர்வு மட்டுமல்லாது இந்தப் பிரபஞ்சத்தையே இயக்கிக் கொண்டிருக்கின்றது என்று ஆன்மீகவாதிகள் கூறுகின்றார்கள். மனித மேம்பாடுகளின் ஊற்று மூலமாக அன்பு உள்ளது. அன்புடைமை என்ற சொத்தை முழுமையாக்கிக் கொண்டவர் உண்மை, வாய்மை, மெய்மை, சத்தியம் போன்ற நற்குணங்களைக் கொண்டிருப்பர். நல்லொழுக்கம், புரிந்துணர்வு, சகோதர உணர்வோடு மற்றவர்களுக்கு நன்மை செய்தல் போன்ற நல்ல செயல்களுக்கும்

அன்புடைமையே மூலகாரணமாகின்றது. எமது மனத்தில் அமைதி ஏற்படவும் அன்புடைமை காரணமாகின்றது. ‘அன்பே சிவம்’ என்று திருமூலரும் ‘அன்பே கடவுள் கடவுளே அன்பு’ என்று பகவான் சாயிபாபாவும் குறிப்பிட்டுள்ளார்கள். எல்லாவிதமான ஆன்மீக முயற்சிகளும் அன்புடைமையை மனிதர்களில் ஏற்படுத்தும் நோக்கம் கொண்டவை என்று கூறப்படுகின்றது. அன்புடைமை இருக்கும் இடத்தில் வெறுப்பு, கவலை, கோபம், பொறாமை போன்ற எதிர்மறையான விடயங்களுக்கு இடமில்லை என்று நம்பப்படுகின்றது. மனிதனைத் தெய்வத்தின் நிலைக்கு உயர்த்தக் கூடிய சக்தி அன்பிற்கு உள்ளது. அன்பினைப் பகிர்ந்து கொள்ளும் பொழுது மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அன்பினை வளர்த்துக் கொள்வதற்கு கொடுத்தலும், மன்னித்தலும் சரியான செயற்பாடுகள்.

மதம் எம்முள் இருக்கும் மெய்ப்பொருளான இறைவனை உணர்தலுக்கு உதவுகின்றது. ‘Religion is to Realise’ என்றும் “Religion of Love” என்ற ஆங்கிலச் சொற்தொடர்களை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். மதத்தை நாங்கள் பின்பற்றுவதற்கு அன்பு அடிப்படைத் தேவையாக உள்ளது. உண்மையான அன்பு எது என்பதில் நாங்கள் வேறுபட்ட புரிந்துணர்வைக் கொண்டிருக்கின் றோம். நாம் விருப்பம் கொள்வதை யும், எமது ஆசைகளையும் அன்பு என்று தவறாகப் புரிந்து கொள்கின்றோம். தன்னலமற்ற வகையில் அன்பைப் பகிர்ந்து கொள்ளும் தன்மையை நாங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். உலகியல் அன்பு, ஆன்மீக அன்பு என்று அன்பினை இரு வகையாகப் பிரித்து ஆய்விடுவதை நாங்கள் கண்டிருக்கின்றோம். ஆன்மீக அன்பு என்ற விடயத்திற்குள் மட்டும் எமது பார்வையைச் செலுத்தாது முக்கியமாக உலகியல் அன்பு பற்றி விரிவாக ஆராய்வதற்கே இந்தத் தொடர் கட்டுரையை எழுதுகின்றேன். ஆன்மீக அன்பு மட்டுமே நிரந்தரமான அன்பு என்றும், உலகியல் அன்பு நிலையற்றது என்ற வாதமும் உண்டு. உலகியல் அன்பிலும் உன்னத நிலையைக் காணவேண்டும் என்ற விருப்போடு இந்தத் தொடர்கட்டுரையை நான் எழுதுகின்றேன். அன்புடைமை என்ற சொத்தை நல்ல முறையில் நாங்கள் பேணிவந்தால் வாழ்க்கையில் வெற்றியாளர்களாக வாழ்ந்திட முடியும் என்ற கோணத்தில் நான் ஆராய்கின்றேன்.

அன்புடைமை என்ற சொத்தைப் பூரணமாகக் கொண்ட அவதாரர்களையும், அன்னை திரேசா போன்ற மனிதர்களையும் இந்த உலகத்தில் நாம் கண்டிருக்கின்றோம். ஆனால் குடும்பங்களில் கூட அன்புடைமை இன்றி வரண்டு போயிருக்கும் மனிதர்களையும் இதே உலகத்தில் அதிகம் காண்கின்றோம் என்பது மிகவும்

கவலைக்குரிய விடயம். நட்பு என்ற உயர்ந்த உறவிலும், கணவன் மனைவி உறவிலும் கூட அன்பிற்குத் தட்டுப்பாடு இருப்பது சரியல்ல. அன்புடைமை எம்மில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். நாம் முதலில் எம்மீது அன்பு செலுத்த வேண்டும். எமது எண்ணங்களிலும், பேச்சுக்களிலும், செயல் களிலும் அன்பு நிறைந்திருக்க வேண்டும். இதையடுத்தே எம்மைச் சூழவுள்ளவர்களிடம் அன்பைச் செலுத்த முடியும். நாங்கள் மற்றவர்களிடம் செலுத்தும் அன்பு அகத்தாலும், புறத்தாலும் ஏற்பட வேண்டும். வெறுமனே முகபாவனைகளாலும், புன்சிரிப்பா லும், கனிவான பேச்சினாலும் மட்டும் உண்மையான அன்பைப் பகிர்ந்து கொள்ள முடியாது. ஆனால் இவ்வாறான புறச்செயற் பாடுகளும், அகச்செயற்பாடுகளுடன் சேர்ந்த வகையில் அன்பைப் பகிர்ந்து கொள்ளும் பொழுது வாழ்க்கையில் வெற்றி கிடைக்கின்றது. நாமும் வாழ வேண்டும். நம்மைச் சூழ உள்ளவர்கள் எல்லோரும் நன்றாகவே வாழட்டும் என்ற உணர்வோடு நாங்கள் வாழவேண்டும். மற்றவர்களிடம் எமது வெறுப்பைக் காட்டுவதால் எமக்கு




எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. எம்மிடம் உள்ள எதிர்மறையான விடயங்களைக் களைந்து கொள்வதோடு அன்புடைமை போன்ற நேர்மறையான விடயங்களால் எமது இதயத்தை நிரப்பிக் கொள்ளவும் வேண்டும். மனித வாழ்க்கையில் ஏற்படும் சிக்கலான பிரச்சினைகள் எமது அன்புடைமைக்கு தடையாக இருப்பது வழமை. நாங்கள் எவ்வாறு பிரச்சினைகளை எதிர் கொள்ளலாம் என்று அறிந்து கொண்டு எமது வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்திச் செல்ல வேண்டும்.

அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.
நன்றி. வணக்கம்.
தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# நந்தா புகழ் பெற்ற நாயகன் நடிகமணி வி.வி. வைரமுத்து..

# வி. என். மதிஅழகன் எழுதிய விவரண நூல் வெளியீட்டு விழா

## டிசெம்பர் - 06 - ஸ்காபரோ சிவிக் மண்டபத்தில்

நாட்டுக்கூத்து, கொட்டகை கூத்து என கிராமிய, பாரம்பரிய கலை வடிவங்களின் வரிசையில் அண்ணாவி மரபு இசை நாடகங்களை மேடையேற்றி கலையுலக வாழ்வில் நடிகமணி என நிலைபெற்றவர் அமரர் வி.வி.வைரமுத்து.

அவர் கடைப்பிடித்துவந்த மரபே ஒரு புதிய பாணியாக உருப்பெற்றது 'வைரமுத்துபாணி'. அது ஜனரஞ்சகமாக அமைந்தது'. பாமரர்களையும் கவர்ந்தது 'படித்தவர்களையும் ஈர்த்தது. அவரது இசை நாடக மரபு அதி பழையதுமல்ல' மிகப்புதியதுமல்ல - இரண்டுக்கும் இடைப்பட்டதாக விளங்கியது. இசை நாடகம் என்றால் வைரமுத்து - வைரமுத்து என்றால் இசை நாடகம் எனப் புகழ் பெற்ற உத்தமமான கலைஞராக விளங்கியவர் வைரமுத்து. அவரது கம்பீரமான தோற்றம், நடிப்பாற்றல், இசைத் திறன், தொடர்பாடல்வலு, மேடையைக் கையாளும் வல்லமை யாவுமே சிறப்பாக குறிப்பிடத்தக்கவை.

**இலங்கை நாடக வரலாற்றில் வைரமுத்துவுக்கு தனிஇடம் - முதலிடம் உண்டு.**

20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு பெருமை சேர்த்த உயர்கலைஞர் வி.வி.வைரமுத்து தமிழ் நாடக மேடையில் அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக கொடிகட்டிப் பறந்தவர். தந்தை செல்வா - 'நடிப்பிசை மன்னன்' என்ற பட்டத்தையும், மலையகத்தின் தனிப்பெரும் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் - 'நாடகச்சக்கரவர்த்தி' என்ற பட்டத்தையும், தமிழ் மூதறிஞர் மா.பொ. சிவஞானகிராமணியார் - 'நாடகவேந்தன்' என்ற பட்டத்தையும், பேராசிரியர் கைலாசபதி - 'நவரசதிலகம்' என்ற பட்டத்தையும், நாடாளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு - 'நடிப்பிசை சக்கரவர்த்தி' என்ற பட்டத்தையும் வழங்கி வைரமுத்துவை கௌரவித்தனர்.

அண்ணாவி மரபு இசை நாடகத்துக்கு தம்மை முற்றாக அர்ப்பணித்த கலைஞனின் 90 ஆவது பிறந்த நாள் கடந்த பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டது. கடந்த ஜுலை மாதம் 8 ஆம் திகதி அன்னாரது 25 ஆவது ஆண்டு நினைவுதினம் கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழ் கூறும் நல்லுலகின் கவனத்துக்குரிய நூல் என பேராதனைப் பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் எஸ். தில்லைநாதன் அவர்களும், இலங்கையில் மட்டுமல்ல - இவ்வுலகெங்கும் வாழும் தமிழர்கள் அனைவரும் இலங்கை மண் தந்த கலை மைந்தனின் நாடக வரலாற்றினை தெரிந்துகொள்ள வகை செய்துள்ள நூல் என தமிழ் நாடு சங்கரதாஸ் சுவாமிகள் நினைவுமன்ற செயலாளர் கலைமாமணி டி.கே.எஸ் கலைவாணன் அவர்களும், இசை நாடகத்துறையில் நுண்மாநுட்பங்களைக் கற்றுத் துறைபோகிய மாமேதை நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களை வியந்து வியந்து சுவைத்து சுவைத்து எழுதப்பட்ட நூல் இதுவென்று தமிழ் நாடு 'காந்தளகம்' கலைமாமணி சசிரேகா பாலசுப்பிரமணியம் அவர்களும் மதிஅழகன் எழுதிய நூலை அடையாளப்படுத்தியுள்ளனர்.

'நந்தாபுகழ்பெற்ற நாயகன் நடிகமணி வி.வி.வைரமுத்து' என்ற விவரண நூல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஸ்காபரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் வெளியிடப்படும்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் ஏற்பாட்டில் நூல் வெளியீட்டுவிழா இடம்பெறும்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர், ஓய்வுநிலை பிரதி கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும் வெளியீட்டுவிழாவில் யாழ்.



பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆய்வுரை நிகழ்த்துவார்.

மூத்த ஒலிபரப்பாளர் பி.விக்னேஸ்வரன் நூல் அறிமுக உரையை வழங்குவார். கவிநாயகம் கந்தவனம் வெளியீட்டுரை செய்வார்.

மரபுக்கலை வேந்தன் பொன்அருந்தவநாதன் ஏனைய கலைஞர்களுடன் நாடகமேடைப் பாடல்களை வெளியீட்டு விழாவின்போது பாடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ரிவிஜ தொலைக்காட்சி ஒலிபரப்பாளர் துஷ்யந்தி குணரட்ணம் வெளியீட்டு விழா நிகழ்வுகளை தொகுத்து வழங்குவார்.

அறிஞர்கள், கல்விமான்கள், அரசியல் வாதிகள், ஊடகவியலாளர்கள், ஒலி-ஒளிபரப்பாளர்கள், சங்கீத, தாளஇசை, நடன ஆசிரியர்கள் என சமூகத்தின் பலதரப் பட்டவர்களும் நந்தா புகழ்பெற்ற நாயகன் நூல் வெளியீட்டுவிழாவில் கலந்து சிறப்பிப்பார்கள்.

தாயக கலைஞர்களை நேசிக்கும், நெஞ்சில் நிறுத்தும் அனைவரும் வெளியீட்டு விழாவுக்கு அழைக்கப்படுகின்றனர்.

# தியானம்



என்னதான் நடந்ததே னிந்தச் சோர்வு
எதற்கிந்தத் தள்ளாட்டம் தலைக விழ்வு
மின்னலார் கண்களில் ஒளிகள் இல்லை
மேலான முகத்திலே களையும் இல்லை
பின்னிநீ எதனையோ பிதற்று கின்றாய்
பேச்சொன்றும் உண்மையில் விளங்க வில்லை
இன்னலுக் கிரையாகி ஏங்கு கின்றாய்
இளைஞனே மருந்தொன்று சொல்லக் கேளாய்!

காதலால் தோல்வியா கல்வி கற்றும்
கருதிய வேலையில் லாத சோர்வா
வேதனை உற்றவர் பிரிவி னாலா
விடுதலைப் போராட்ட அழிவி னாலா
பாதியில் வந்தவள் பரிசு கேடா
பற்றுள பிள்ளைகள் நடத்தைப் பாடா
ஏதிலார் எய்திய அம்புக் கூரா
எதுவாயி னும்நம்பி இதனைக் கேளாய்!

கடவுளின் பள்ளியிற் சேர்ந்து கொண்டாய்
களிப்புறு கதிதரக் கருணை யாலே
படிமுறைச் சோதனை பலவே வைப்பான்
பதறாமல் அவற்றைநீ எழுத வேண்டும்
அடிமுடி யில்லாத அவனின் கூத்தை
அறிகிலோர் அறையிலே கதவைப் பூட்டித்
திடமுடன் மனத்தையோர் நிலைப்பு டுத்தித்
தியானத்தால் தீராத கவலை தீர்ப்பாய்!

- தமிழ்வேள் விநாயகர் கந்தவனம் -





**MATH, SCIENCE & ENGLISH TUITION**

*Math & Physics taken for all grades from grade 4 to 1st year university.*

Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at

*Scarborough & Stouffville*



*Contact:* 647.340.9490/ 416.732.2228

# தியாகம்




மாவீரர் அவர் மாவீரர் மீள்வரா அந்த மாவீரர்
மாளவில்லை அவர் மாளவில்லை
மீள்வதற்கு அவர் மாளவில்லை
வாழுகிறார் அவர் வாழுகிறார்
தமிழ் நெஞ்சங்களில் அவர் வாழுகிறார்

ஒழியவில்லை அவர் ஒழியவில்லை
உலவுகிறார் அவர் உலவுகிறார்
அன்பு உள்ளங்களில் அவர் உலவுகிறார்
மாவீரர் தினங்களிது மக்கள் சேரும் நேரம் இது
வணங்க வேண்டிய தருணம் இது

ராமர் கூட பல லக்ஸ்மனராக வாழ்ந்தாரே
அஞ்ஞாத வாசத்தை அநுஷ்டித்தார் வனத்தினிலே
தமிழே எனது மூச்சென்று தரணி வியக்க வைத்தாரே
தாயகம் என்ற வேதத்தை ஓதிக் கொண்டு நின்றாரே
உரிமை காக்க வேண்டும் என்று உயிரை தியாகம் செய்தாரே

ஒட்டு மொத்த உறவுகளையும் விரும்பி விட்டு சென்றாரே
ஊன் உறக்கம் இன்றி அவர் தாய் மண்ணை காத்தாரே
இளமை காலம் முழுவதையும் நம் விடிவுக்காக தொலைத்தாரே
கன்னியரை நாடவில்லை கண்ணிவெடி கோத்தாரே
காதல் சேஷ்டை செய்யவில்லை போரில் சேஷ்டை செய்தாரே

நாட்டின் கண்கள் பெண்கள் என்று புறப்படாரே போருக்கு
அடுக்களை இனி நமக் அடுக்காதென்று ஆயுதம் ஏந்தி நின்றாரே

நெற்றி குங்குமம் தேவை இல்லை என்று நெஞ்சில் குறி வைக்க நின்றாரே
கூந்தலை முடித்து அனலை கக்கி சாதனைகள் செய்தாரே

வெற்றி வாகை சூட வரம் வாங்கவில்லையோ
பெற்றெடுத்த பூமி அது தாங்கவில்லையே
எமை தத்தெடுத்த போது நாமும் ஏங்கவில்லையோ
இதை பார்த்த இரவு பல இரவு தூங்கவில்லையே
இந்நிலைமை கண்டு நிலவு கூட நொந்து போனதே



சிந்தித்ததிலையே ஒரு போதும் சிதறி விட்டோமே முத்துகள் போல
சேர்த்தெடுத்து எமை கோத்திடடுவாரோ வெற்றியின் போது
சூடிடுவாரோ விதி தானே அது விளையாடும்
வெற்றியினையும் வேண்டிதரும்.

- இனியா -

Train to be a ...
Community Service Worker With CO-OP



Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant

EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome

citi COLLEGE

You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179

Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA

OACC PROUD MEMBER

Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005

www.CitiCollege.ca

Financial Assistance may be available to those who qualify

# பத்திரகாளி சோதிட நிலையம்

# BADRAKALLI ASTROLOGY CENTER



## Pandit Sri Hanuman

Kerala (Choddankiri)

## 416.846.2798

## 100% Guaranteed Result



**The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.**

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit Sri Hanuman** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்.

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல் கட்டப்படும்.

- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்

- Business Investments
- Jealousy
- Childless Couples
- Depression
- Worries About Loved Ones
- Enemy Problems
- Money Problems
- Sexual Problems
- Love Problems
- House Protection
- Work Problems
- Money Blessing
- Family Arguments
- Drinking Problems

பிளெக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

**5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2**
**GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)**

Home Line of Credit

upto $100,000

NO APPRAISAL FEE – FUNDED WITHIN 4-5 DAYS

YOU'RE APPROVED WITHIN 24 HOURS

Need 2nd MORTGAGE?

YOU DECIDE HOW MUCH YOU NEED!

BAD CREDIT? NO PROBLEM!

NO INCOME VERIFICATION – NO CREDIT CHECK

416.298.2777

| 2nd MORTGAGE | YOU PAY BACK |
|---|---|
| $20,000 | $133/mo |
| $30,000 | $200/mo |
| $40,000 | $267/mo |
| $50,000 | $333/mo |
| $75,000 | $500/mo |
| $100,000 | $667/mo |

ULTIMATE MORTGAGE AND FINANCE SOLUTIONS INC.

LIC#11995. 305-5200 Finch Ave E. Scarborough, ON M1S 4Z5

# அதுவே விதைத்து அறுவடையும் செய்து கொண்டு போட்டுது!

சூரியகாந்தி என்றதும் நம்மில் பலரின் கண்முன்னே தோன்றுவது மஞ்சள் நிறமுடைய வட்டவடிவான ஒரு பெரிய பூ. அதன் சுற்றுப் புறமெல்லாம் மஞ்சள் நிறத்திலுள்ள நீளமான இதழ்கள். பார்வைக்கு ஒரு பெரிய அழகிய பூ போலத் தோன்றும் இம்மலர் ஒரு தனி பூ அல்ல. உண்மையிலே சூரிய காந்தியை பல சிறிய மலர்களால் ஆன ஒரு கூட்டுப் பூ என்றே கூறுவோம். சுற்றியல் பகுதியில் இதழ்கள் போன்று தோன்றுவது ஒவ்வொன்றும் ஒரு சிறுபூ. இவற்றினை கதிர்ச் சிறு பூ (Ray floret) என்போம். இவை வெறும் கவர்ச்சியைத் தருவதற்காக மட்டுமே உபயோகமாக உள்ளன. அவை தரும் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்ட பூச்சிகள் மகரந்தச் சேரக்கைக்கு உதவகின்றன. இச்சிறு பூக்கள் மலட்டுப் பூக்கள். இவை விதைகளைத் தோற்றுவிக்க மாட்டா. இந்த கதிர்ச் சிறு பூக்களால் சூழப்பட்டு மத்தியில் உள்ளது தனித்தனியான சிறுபூக்களால் ஆன ஒரு கும்பல். இவை ஒவ்வொன்றினையும் வட்டத்தட்டுச் சிறு பூ என்போம் (Disc floret). இவை தான் விதைகளைத் தோற்றுவிக்கும் சிறுபூக்கள். கதிர்ப் பூக்கள் இல்லாவிட்டால் எந்தப் பூச்சியும் இவற்றின் பக்கம் திரும்பியும் பார்க்க மாட்டாது. உங்களிற் சிலபேரைப்போலத் தான் நானும் சூரியகாந்தி என்றால் மஞ்சள் நிறப்பூ பூக்கும் தாவரம் என்றே எண்ணியிருந்தேன் கனடாவில் கால் பதிக்கும் மட்டும். அதுவும் ஸ்காபரோவில் குடியேறிய பின்னர் தான் அறிய முடிந்தது. அதற்கும் நான் தொடர்பு வைத்திருந்த நாற்றுப் பண்ணைகளே (Nursery) காரணமாகவிருந்தன. அவை ஒவ்வொரு பருவ காலத்தின் ஆரம்பத்திலும் தம்வசமுள்ள நாற்றுக்கள் விதைகள் பற்றிய விபரப் பட்டியல் கொண்ட பிரசுரத்தினை (catalogue) எனக்கு அனுப்பி வைப்பது உண்டு. அந்த நாற்றுக்களின்



பூக்களின் வர்ணப் படங்களையும் அந்த பிரசுரங்களில் போட்டிருப்பார்கள். ஐந்து வருடங்களின் முன்னர் ஒரு நாற்றுப் பண்ணையின் குளிர் காலத்துக்கான பிரசுரம் வந்திருந்தது. விரித்துப் பார்த்தேன். பூக்களின் வண்ணவண்ணப் படங்கள் வந்திருந்தன. எல்லாவற்றினுக்கும் கீழே சூரியகாந்தி (Helianthus) என பெயர் குறிப்பிடப் பட்டிருந்தது.



என்னை அறியாமலேயே என் வாய் பிளந்தது. இத்தனையும் சூரியகாந்திப் பூக்களா. இத்தனை வர்ணங்களில் உள்ளனவா. வெள்ளை தொடக்கம் மஞ்சள் வரை எத்தனை நிறங்கள்.

**தொடர்ச்சி 22ஆம் பக்கம்**


Parkway Mall Mobilicity !!!
$50 OFF COUPON
$25/mo
7 DAYS Special
Life Time Deal. No Contract.
Talk, Text & DATA (+$10)
UNLIMITED Local Calling
UNLIMITED Ontario Long Distance
UNLIMITED Text messaging
UNLIMITED Internet & Mobile-Hotspot (+$10)
FREE Caller ID, Voice Mail, Call Waiting and more
Samsung T199 $99.99 FREE
Samsung Gravity Q $99.99 $49.99
Alcatel OneTouch Evolve $169.99 $59.99
LG L70 $249.99 $129.99
Moto G (2 gen) $299.99 $229.99
Samsung Galaxy S4 $649.99 $349.99
No Contract !! No Credit Check !!
PHONES $50 OFF
You can bring in your own phone
ONLY at
Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229
mobilicity
Now that's smart.™

# NEW PROJECT

TRIDEL® BUILT FOR LIFE

## AQUAVISTA

AT BAYSIDE TORONTO



## HomeLife/GTA Realty Inc. Brokerage*

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

**5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969**

*Independently Owned & Operated

# அதுவே விதைத்து...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

தனி இதழ்களால் சூழப்பட்டது முதல் பல இதழ்கள் அடுக்காக. ஆஹா என்ன அழகு!









நம்ப முடியவில்லை. நிறுவனத்துக்கே அழைப்பு விடுத்துக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். நான் அத்தகைய வகைகளை என்றுமே, எங்கேயுமே கண்டதில்லை. ஆகவே ஒவ்வொருவகையினது விதைகளையும் அனுப்பி வைக்குமாற பணித்தேன். வந்தன. எல்லா விதைகளுமே அவை சூரியகாந்தி விதையென ஊர்ஜிதமாயின. என் தோட்டத்தின் முற்புறத்தில் நட்டேன். பசளையின் செறிவினால் அவை அமர்க்களமாக வளர்ந்தன. பொதுவாகவே மூன்று அடி உயரம் வரை வளர்பவை. எனது பராமரிப்பின் விசேடத்துவத்தால் ஏழு அடி வரையில் செழிப்பாக வளர்ந்தன. பெரிய அரையடி விட்டம் உடைய பூக்கள் மலர்ந்தன. பார்த்துப் பரவசமானேன். ஒரு நாள் நான் அவற்றின் இடையே நின்றதைக் கண்ட தபால் விநியோகத்தவர், கொஞ்சம் நகைச்சுவை உணர்வுடையவர். ஓய்! உனக்கு ஏதாயினும் நடந்து நீ தரையில் விழுந்தால் உனது மகள்மார் ஒரு வான் ஊர்தியல்லாவா வாடகைக்கு எடுத்து உன்னைத் தேடவேண்டும் என்றார். கேட்டதும் உல்லாசமாயிருந்தது. ஆனால் இந்த ஆனந்தம் நிலைக்க முடியாமல் போனதற்கு நாவூறா? ஒவ்வொரு பூவினது சுற்றுப்புற இதழ்கள் ஒரு ஐந்து நாட்களாவது அப்படியே இருக்கும். பின்னர் உதிர்ந்து விடும். ஆனால் விதைகள் முற்றாக உருவாவதற்குக் குறைந்தது ஒரு மாதமாவது எடுக்கும், பொறுமையுடன் இருந்தேன், விதைகளை எடுப்பதற்காக. ஆனால் என்னிலும் பொறுமை காட்டாத இன்னொரு ஜீவன் அத்தனை காத்திருக்க விரும்பவில்லை என்பது கழுத்து முறிந்து தொங்கிய பல பூக்கள் எடுத்துக் காட்டின. ஆம், ஒரு அணில் பட்டாளமே எனது சூரிய காந்தியின் மேல் கண் பதித்தமையால் வந்த வினை.



எனது தோட்டம் தனது அழகு கெட்டு அவலட்சணமாகக் காட்சி தந்தது.

ஆஹா! அழகாயுள்ளதே எனத் தெருவால் போவோர் பார்த்தவர்கள் இப்போ ஓஹோ! இப்படி அவலட்சணமாய் உள்ளதே எனக் கழிவிரக்கம் காட்டவேண்டிய நிலை ஏற்பட்டது. அன்று விட்டேன் கொண்டலடி எனத் தமிழில் ஒரு கூற்று உண்டு. எனது சூரியகாந்தி ஆசைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டேன். அந்த ஆசையை விட்டே ஐந்து வருடங்கள் ஆகியது. மூன்று வருடங்களுக்கு முன்னர் எனது மருமகன் ஒருவன் வதியும் டென்மார்க் நாட்டினிற்குச் சென்றிருந்தேன். சமதளமான அழகிய பூமி. நிறையவே நாடெங்கிலும் காற்றாலைகள் காணப்பட்டன. நாடும் நல்ல குளிர்ச்சியாகக் காணப்பட்டது. அவனது வீட்டில் போய் இறங்கிய என்னை பொலிவுடன் பூத்துக் குலுங்கியபடி சூரிய காந்திச் செடிகள் வரவேற்றன. என்னவை போன்று இராட்சத வளர்ச்சி இல்லாமல் அழகாக அளவோடு வளர்ந்திருந்தன. மஞ்சள் நிறப் பூக்கள். எனது பிரலாபத்தைகாட்ட வேணுமே ஆகவே இந்தச் சூரிய காந்தியில் வேறும் பல நிறங்கள் உள்ளன தெரியுமோ என நான் கேட்டடேன். இல்லையே மாமா என ஆச்சரியம் கலந்த ஏகோபித்த குரலில் கணவனும் மனைவியும் ஒத்திசைத்தனர். நான் அங்குபோய் அந்த விதைகளை அனுப்பி வைக்கிறேன் என்றேன். நான் ஊருக்குத் திரும்பும்போது விமான நிலையத்திற்கு இட்டு வந்த மருமகன் குறியே கண்ணாக மாமா சூரிய காந்தி விதைகளை மறக்காதீர்கள் என்றான். அவன் என்னிடம் படிக்கவில்லை. ஆகவே எனது ஞாபகசக்தி பற்றி அதிகம் அறியும் வாய்ப்பு ஏற்படவில்லை. மறக்காமல் அடுத்த வருட ஆரம்பத்தில் சிலவகை விதைகளை அனுப்பி வைத்தேன். அவ்வருட முடிவில் அவனது மைத்துனரின் மகளது சாமர்த்தியச் சடங்கினுக்கு வந்தான். எப்படிச் சூரியகாந்தி எனக் கேட்டேன். அதை ஏன் கேட்கிறீர்கள் மாமா. ஊரே படையெடுத்து விட்டது, பார்த்து ஆச்சரியப்படுவதற்கு. பலர் விதை கேட்டார்கள். சிலருக்குக் கொடுக்க முடிந்தது என்றான்.

இம்முறை வசந்தகாலத்தில் ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது. எனது முற்புறத்துப் பூந்தோட்டத்திலும் பக்கத்து காய்கறித் தோட்டத்திலும் மறு பக்கத்து வாசல் பக்கமாகவும் மூன்று சூரியகாந்திச் செடிகள் தலை காட்டின. நான் விதை போடவில்லை. சூரியகாந்திச் செடிகளை நான் பயிரிட்டே ஐந்து வருடம் சென்று விட்டது. அப்படி என்றால் இவை எப்படி முளைத்தன. யோசித்துப் பார்த்த பொழுது இது அணிலின் உபகாரமாகத் தான் இருக்க வேண்டும் என உணர முடிந்தது. நாம் செய்த தவறான செய்கையால் இவன் மனமொடிந்து சூரிய காந்தியைப் பயிரிடாமல் விட்டு விட்டானே. பாவம் நாமாவது உதவலாம் என்ற நல்லெண்ணத்திலே விதைகளைக் கொண்டு வந்து எனது தோட்டத்தில் இட்டுவிட்டன போலும். நல்ல ஜென்மங்கள். எங்கும் உபகாரிகள் இருக்கவே செய்கின்றன என என் நெஞ்சம் வாழ்த்தியது. பக்குவமாக அவற்றினை வளர்த்தேன். வாளிப்பாக வளர்ந்து பூத்தன. மஞ்சள் நிறவகை. அழகாக இருந்தது. அடுத்த ஆண்டு ஏனைய வகை விதைகளையும் வரவழைத்து இன்னுமொரு முறை பயிரிட்டால் என்ன என எனது மனதில் ஒரு அபிலாசை ஏற்பட்டது. பார்த்தவர்களில் சிலர் எமக்கும் விதை தாருங்கள் என வேண்டினர். தாராளமாகத் தரலாம் என்றேன். அந்தோ? காத்திருந்தவன் பெண்டிலை நேற்று வந்தவன் கொண்டுபோன கதையாயிற்று. விதை வர எங்கே விட்டன என் அழையா விருந்தாளிகள். இதழ்கள் உதிர முன்னரே அவர்களுடைய அறுவடை தொடங்கி விட்டது. உரிமையுடன் செயற்பட்டனர் என்னைக் கண்டால் மாத்திரம் பாய்ந்தோடினர். ஆகவே எனது சூரியகாந்திச் செடிகள் யாவும் தலைவிரி கோலமாக நின்றன. அவற்றினைக் கட்டிப் பிடித்து அழாத குறையாக இனிமேல் உங்களோடு சகவாசம் வேண்டாமென்றேன். வேறு என்ன செய்யலாம்?

அவைகளே விதைத்தனர் அறுவடையும் செய்து கொண்டனர். என் தலையில் மா அரைத்த கதையாக முடிந்தது.



பொன். கனகசபாபதி
அதிபர்

# மருத்துவ குறிப்புகள்!



பேரீச்சம்பழத்தில் இரும்புச்சத்து அதிகமாகவுள்ளது. எக்காரணம் பற்றி உடல் இளைத்திருந்தாலும், அவர்கள் பேரீச்சம்பழத்தைத் தாராளமாகச் சாப்பிடலாம். பேரீச்சம்பழத்தை முறையாக உணவோடு சேர்த்துக் கொள்வதால், மெலிந்த உடல் தேறும். போகக் களைப்பு நீங்கும். தாது விருத்தியும் பலமும் உண்டாகும்.



அருகம்புல்லை வேரோடு பறித்து சுத்தம் செய்து சிறிது நீர் சேர்த்து அம்மியில் வைத்து ஒட்ட ஒட்ட அரைத்து, சம அளவு வெண்ணையையும் கலந்து காலை-மாலை சாப்பிடவும். நீண்ட நாட்கள் சாப்பிட்டு வந்தால்தான் உடலில் பலம் ஏறும்.



வேப்பம்பூ ஒரு அவுன்ஸ், நிலவேம்பு ஒரு அவுன்ஸ் இரண்டையும் நன்றாக நசுக்கி, அதில் 1 டம்ளர் கொதிக்கும் நீரை ஊற்றி வைக்கவும். 2 மணி நேரத்திற்குப்பின், வடிகட்டி வேளைக்கு 2 அவுன்ஸ் வீதம் சாப்பிட்டு வந்தால் எல்லா பலவீனங்களும், முக்கியமாக காய்ச்சலுக்குப் பின் உண்டாகும் பலவீனம் சரியாகிவிடும்.

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

சென்ற தடவை ஏலியன்களின் மரபணுப் பரிசோதனையின் விளைவாகவே மூளை வலுக் கூடிய மனிதவினம் புவியில் 55ஆயிரம் வருடங்களின் முன்னர் தோன்றியிருக்கலாம் என்று கூறும் சில ஆய்வாளர்களின் கருத்தினைப் பார்த்தோம். அது வேற்றுக்கிரக மனிதர்களுக்கும் பறக்கும் தட்டுகளுக்கும் எவ்விதம் பொருந்தும் எனப் இனிப் பார்ப்போம். மனிதராகிய நாமெல்லாம் வேற்றுக் கிரக மனிதர்களின் மரபணு பொறி யியல் ஆய்வின் விளைவாகவே புவியிலே முழுமையானோம் என்பதைச் சரியென்றே வைத்துக் கொள்வோம். வெறுமனே ஆய்வு ஒன்றினைச் செய்துவிட்டு அப்படியே விட்டு விட்டுத் தம்வழியே அந்த வேற்றுக் கிரகிகள் சென்றிருப்பார்களா? அப்படி இருப்பின் அது ஆய்வுமில்லை, அதனால் எதுவித பயனும் இல்லை. எனவே தமது ஆய்வின் விளைவு எப்படியுள்ளது என்று காலத்திற்குக் காலம் பார்ப்பார்கள் அல்லவா! தமது ஆய்வின் பயனாகப் புதிய மாற்றம் கொண்ட உயிரி னங்கள் (அதாவது மனிதர்களாகிய நாங்கள்) பூமியை எவ்விதம் பாவிக்கின்றார்கள்! எவ்விதம் நடந்து கொள்கின்றார்கள் என்றெல்லாம் அறிய முற்படுவார்கள். அத்துடன் மனிதர்களாகிய எங்களில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றெல்லாம்கூட அறிய முற்படுவார்கள்.

இதற்காக அவர்கள் காலத்திற்குக் காலம் எமது பூமியை நோட்டம் விடுவார்கள், விடுகின்றார்கள் எனக் கூறுகின்றார்கள். இதற்காகப் புவியிற்கு பயணமாகி வரும் அவர்களின் வாகனங்கள் சில, நம்மவர்களின் கண்களில் பட்டுவிடுகின்றன. உயர் தொழில் நுட்பத்தில் இயங்கும் வேற்றுக் கிரக மனிதர்களின் விண்கலங்கள் நாம் முன்பின் பார்த்திராதவை. அவற்றின் செயற்படும் முறைகளைக் கூட நாம் அறிந்ததில்லை. ஆக அவ்விண்கலங்கள் எமக்கெல்லாம் எப்படித் தெரியுமென்று எண்ணுகின்றீர்கள்?



இனம் தெரியாத பறக்கும் பொருட்கள்தான். பார்த்தீர்களா, இனம்தெரியாப் பறக்கும் பொருட்களுக்கும் புவியில் மனிதவினத் தோற்றத்திற்குமான தொடர்பை, இந்த வேற்றுக் கிரகிகள் வெறுமனே நோட்டம் விடுவதுடன் நின்று விடுவதில்லை. காலத்திற் குக் காலம் சிலரைக் கடத்திச் சென்று அவர்களை பரிசோதித்தும் பார்க்கிறார்கள். சூழலின் மாற்றத்துடன் தங்களின் உற்பத்தி களான நாங்கள் எவ்விதம் மாற்றமடைகின் றோம், சூழல் மாற்றத்திற்கு ஏற்ப எவ்விதம் நடந்து கொள்கின்றோம் என்றெல்லாம் மிகக் கவனமாக அவதானிக்கின்றார்கள்.

இதற்காகத் தமது விண்கலங்களுக்கே மனிதர்களாகிய எங்களில் சிலரை, மிகச் சிலரைத் தெரிந்தெடுத்துக் கடத்திச் சென்று, ஆய்வுகள் செய்த பின்னர் விட்டுவிடுகின் றார்கள். இந்தக் கடத்தல், ஆய்வுகள் என்பன சில சமயங்களில் பரம்பரை பரம்பரையாகவும் நிகழ்கின்றது எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இது ஒருவேளை பரம்பரை யின் ஊடாக மரபணுக்களின் (DNA) வடிவங்களில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை அறிவதற்காகவாக இருக்கலாம் என்பது நமது ஆய்வாளர்களது எண்ணம்.

இந்த வகையில் அமைந்ததுதான் ஆரம்பத் தில் கூறிய பிரபலமான பாரனிகில், பெற்றி கில் தம்பதிகளின் வேற்றுக்கிரக மனிதர்க ளின் அனுபவம் என்கிறார்கள். பார்த்தீர்களா! என்ன மாதிரி எல்லாம் ஏற்புடையதாக மனிதர்கள் சிந்திக்கின்றனர். அதுசரி வேற்றுக்கிரக மனிதர்களின் மரபணுப் பொறி யியலின் விளைவாகத்தான் புதுமனிதர்கள் தோன்றியிருக்கலாம் அல்லது தோன்றினார் கள் என்பதை உங்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளதா? இல்லையெனில் இதற்கு மாற்றாக அல்லது எதிராக எதை யாவது கூறப்போகின்றீர்களா? கொள்கையள வில் இதனை ஏற்றுக்கொள்ளலாம்தான். ஆனாலும் சிலர் இது போதாது என்கின்றார் களே! இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு பல ஆங்கிலத் திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. ஒருவேளை நீங்களும் கூட அவற்றினைப் பார்த்திருப்பீர்கள். சரி இதனை இத்துடன் முடித்துக்கொண்டு இன்னமும் இருக்கின்ற சுவாரசியமான அறிவியற் பகுதிகளுக்குள்ச் செல்வோம்.

1971ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 17ம் திகதி அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல் எனும் இடத்தில் யோன் கொட்யஸ் என்பவரும் பேற் றேட்றிகஸ் என்பவரும் பின்னிரவு 2 மணியளவில் தமது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். வழியில் அவர்களது வாகனத்திற்கு முன், சுருக்கங்கள் கொண்ட, மூளையின் அமைப்பில் இருந்த இரண்டு பிராணிகளைக் கண்டார்கள். மிகவும் பெரி யனவான அவ்விசித்திரப் பிராணிகளை உற்றுப் பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். வீட்டுக்கு வந்ததும்தான் தாங்கள் இருவரும் இரண்டு மணித்தியாலங் களைத் தொலைத்து விட்டதை அறிந்து கொண்டார்கள். தொடர்ந்து வந்த நாட்களில் அவர்கள் நித்திரையின்றி அவதியுற்றார்கள். சில வருடங்களின் பின்னர் மனோவசியச் சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட கொட்யஸ் ஆச்சரியமான பல விடயங்களை, அரிதுயில் நிலையில் கூறினார். இரண்டு மணித்தியாலங் களைத் தொலைத்திருந்த அந்தக் குறிப்பிட்டநாளில் அவர் உயர்ந்த, நரை நிறமுடைய மனிதர்களினால், அம்மனிதர்களி னது விண்கலத்திற்குக் கடத்திச் செல்லப்பட்டிருந்தார். அங்கு வைத்து அந்த வேற்றுக்கிரக மனிதர்களினால் பல விடயங்கள் கொட்யஸ் இற்கு கூறப்பட்டிருந்தது.

1.) சீரா றிரிகுல்லி என்ற நட்சத்திரக் கூட்டத்தைக் காட்டி அங்கிருந்துதான் தாம் வந்தவர்கள் என அந்த வேற்றுக்கிரக மனிதர்கள் கூறினார்கள்.

2.) ஒரு மில்லியன் வருடங்களின் முன்னர் பூமியில் அவர்கள் செய்த மரபணுப் பரிசோதனையின் விளைவாகத் தோன்றியவர் களே இன்று பூமியில் வாழும் மனிதர்கள்.

3.) மனிதர்களின் கண்டுபிடிப்புக்களான அணுஆயுதங்களினால் பூமி ஒருகாலத்தில் புல் பூண்டுகளே கூட இல்லாத வெறும் கட்டாந்தரை போல ஆகிவிடும். இது போன்ற சில தகவல்களை கொட்யஸ்சிற்கு அந்த வேற்றுக்கிரக மனிதர்கள் சொன்னதாக மனோவசியச் சிகிச்சையின் போது கொட்யஸ் கூறியிருந்தார்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏலியன் என்சைக்குளோப்பீடியா என்னும் புத்தகத்தில் உள்ள தகவல் இது. மேலும் சில தடவைகள் கொட்யஸ் இந்த வேற்றுக் கிரக மனிதர்களினால் கடத்தப்பட்டுருந்தார். பல விடயங்கள், அறிவுறுத்தல்கள் அவருக்கு வேற்றுக்கிரக மனிதர்களினால் கொடுக்கப் பட்டபோதிலும், அவை சரியானவையாக இருந்த போதிலும் கூட, ஏனோ அந்த வேற்றுக்கிரக மனிதர்களைத் தன்னால் நம்ப முடியவில்லை எனக் கூறுகின்றார் கொட்யஸ். (வேற்றுக்கிரக மனிதர்கள் எனும் எனது புத்தகத்திலும் இந்த விபரம் தரப்பட்டுள்ளதை நீங்கள் அறியலாம்) ஆனால் சில ஆய்வாளர்களுக்கு இந்தச் சம்பவமானது ஒரு உறுதியான ஆதாரமாக இருப்பது போல் உள்ளதல்லவா! கொட்யஸ் போன்றே மனோவசியச் சிகிச்சையின்போதான ஆழ் உறக்க நிலையில் வேற்றுக்கிரக மனிதர் களினால் தாம் கடத்தப்பட்டோம் எனக்கூறும் சிலர் சாதாரணவேளைகளில் வேற்றுக்கிரக மனிதர்களை தங்களால் நம்ப முடியவில்லை என்கின்றார்கள். இது கொஞ்சம் முரணானது போலத் தெரிகின்றதல்லவா! இவர்கள் வேற்றுக்கிரக மனிதர்களின் வலிமையான மனோவசிய மூளைச் சலவைக்குட்படுத்தப் பட்டதன் விளைவாகவே இப்படியாகக் கூறுகின்றார்கள் என ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். இன்னமும் வேற்றுக் கிரக மனிதர்கள் வரிசையில் பல அறிவியல் விடயங்களைக் காணப் போகின்றோம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca






Kingsway-Queensway
சந்திக்கருகாமையில்

- எட்டு நிமிடங்களில் ரொரன்ரோ டவுன் ரவுன்
- இரண்டு நிமிடங்களில் கார்டினர் விரைவுப் பாதை
- நிமிடங்களில் பாடசாலை, வணிக மையங்கள்
- 24 மணிநேர பாதுகாவலர்கள் மற்றும் ரெனிஸ் கோர்ட், உடற்பயிற்சியரங்கம், உள்ளக,வெளியக நீச்சல் குளங்கள்
- குறைந்த விலையில் சகல வசதிகளும் உள்ளடங்கிய ஒரு அறை நவீன Condo

Ragunathan Mahesu – Sales Rep - 416-450-6833

VEEDU REALTY INC. BROKERAGE
416-759.6000

AERO COURIER
Fast & Secure World Wide Service
உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது......
கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா
கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய
நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை
பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!
Tel: 416.292.0444
5635 Finch Ave East Unit 2&3
Toronto On.M1B 5K9

# மாதா - பிதா - குரு வழிகாட்டலில் ஓர் இசை அரங்கேற்றம்

## செல்வி ஆரபி பிரபாகரன்



கர்நாடக சங்கீதத்தினை அடிப்படையால் கொண்டு இசைத்துறையில் ஆற்றல்கள், திறமைகளை வளர்த்து பல ரசிகர்கள், விமர்சகர்கள், ஊடகவியலாளர்கள், கலைத்துறை அறிஞர்கள் உட்பட பல மக்களைக் கொண்ட மண்டபம் ஒன்றில் அரங்கேற்றம் நடத்துவது என்பது யாவருக்கும் கைவரும் ஒரு சாதனை அல்ல. விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில இளைய தலைமுறையினரே இன்றைய உலகில் தமிழிசை துறைகளில் உருவாகி கொண்டு வருகின்றார்கள். ஏனெனில் சங்கீதக்குரல் என்பது ஒரு இயற்கையின் கொடை.

கடந்த செப்ரெம்பர் 27, 2014 அன்று ரொறொன்ரோவில் நான் சென்று பார்த்து ரசித்த ஓர் இசை அரங்கேற்றம் என்னை மட்டுமல்ல ஏனையவரையும் பாராட்ட வைத்திருக்கும் என்பதில் எதுவிதமான சந்தேகமும் இருக்கமாட்டாது.

செல்வி. ஆரபி பிரபாகரன் கனடாவில் பல்கலைக்கழக பட்டப்படிப்பனை மேற்கொண்டுவரும் நேரத்தில் மேலதிகமாக இசைதுறையினை சிறு வயது தொடக்கம் பயின்று தனது ஆற்றல்களை சபைக்கு வெளிக்கொணர்ந்து நாளே அன்றைய அரங்கேற்றமாகும்.



கர்நாடக சங்கீதத்தின் ஒவ்வொரு சுரங்களையும் வெவ்வேறு இசைக்கருவிகளின் நாதங்களிலும் தனது குரல் அசைவுகளுடனும் பாடல்களாக பாடியபோது அதற்கு உறுதுணை சேர்ப்பவர்களாக பின்வருவோர் இருந்தனர்.

- தம்புரா வாசித்த அவரின் தங்கை செல்வி. கீரவாணி பிரபாகரன்
- மிருதங்கம் வாசித்த 'மிருதங்க ஞான வாருதி' திரு. வாசுதேவன் இராஜலிங்கம்
- வயலின் இசை ஒலித்த சங்கீத வித்துவான் ஸ்ரீமதி தனதேவி மித்திரதேவா
- கடம் எனும் ஓசையால் இசை நாதம் எழுப்பிய திரு. ரமணன் கிருஸ்ணராஜகுருக்கள்
- கஞ்சிரா இசைக்கருவியால் தாள ஒலி எழுப்பிய திரு. ரிஷி வாசுதேவன்
- 'மோர்சிங்' என்னும் இசைக்கருவியினால் வாய் ஓசை நாத ஒலி எழுப்பிய திரு. நிதுர்சன் இதயராஜா

இவர்கள் யாவரினதும் உறுதுணை அன்று அந்த இசை குயிலின் ஏழிசை ராகங்களும் வீறு நடைபோட கூட்டாக ஒலி எழுப்பி சபையோரை இசைக்கடலில் மூழ்க வைத்தது.

செல்வி. ஆரபி பிரபாகரனின் இசைத்துறைக்கு வழிகாட்டிய மாதா - பிதா - குரு - யார்?

மாதா - பிதா என்கின்றபோது அவர்கள் உலகில் வாழும் பலருக்கும் ஒரு முன் வழிகாட்டியாகவிருக்கும் 'ஜோதி & பிரபாகரன்' தம்பதிகள். இந்த உலகினையே பார்க்க முடியாத வலுவளர் தம்பதியினர். இவர்கள் கல்வித்துறைகளில் முன்னேறி இல்லறவாழ்வில் இணைந்து, இசைதுறையில் கொண்ட ஆர்வத்தினால் தங்கள் மூன்று பெண் பிள்ளைகளுக்கும் இசை ராகங்களின் பெயர்களான 'ஆரபி', 'கீரவாணி', 'சாருகேசி' என பெயர்களை சூட்டியுள்ளனர். ஆரபியை கல்வியில் பல்கலைக்கழகம் வரை கொண்டு வந்தும் இசைத்துறையிலும் மேம்பாடு அடையும் நிலைவரை உருவாக்கியுள்ளது. வாழ்க்கை என்ற படகில் குடும்பத்தலைமை என்ற துடுப்பை உபயோகிக்க தெரியாது தத்தளிப்பவர்களுக்கு இவர்கள் ஒரு 'ரோல் மொடல்'. இவர்களைப் பார்த்து தங்களை நெறிபடுத்திகொள்ள வேண்டிய வழிகாட்டிகள்.

அடுத்து இவரது இசையின் வளர்ச்சிக்கு ஓர் வழிகாட்டியாக அமைந்த குருவினைக் குறிப்பிடலாம். இவர் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சங்கீத துறையில் பட்டம் பெற்று ஈழத்தில் பாடசாலைகளில் சங்கீத ஆசிரியராகவிருந்து ஏராளமான இன்னிசை கச்சேரிகளை இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேற்றி, இலங்கை வானொலியிலும் புகழ்பெற்று இன்று கனடாவில் பல இளைய தலைமுறைக்கு இசைதுறையில் வழிகாட்டும் 'இன்னிசை வேந்தன்' திரு. பொன் சுந்தரலிங்கம். அவரோடு சேர்ந்து அவரது துணைவியார் திருமதி. ரஞ்சனா சுந்தரலிங்கம், அவரது மகள் திருமதி. பிரியா மயூரன் என ஒரு குடும்பமே குருவாகவிருந்து குரல் வள பயிற்சிகளிலும் இராகங்களை ஆரபிக்கு நெறிப்படுத்தியிருந்தனர்.

ஆரபி இசைத்துறையில் மென்மேலும் வளர்ந்து பல சிறப்புக்களைப் பெற விளம்பரம் பத்திரிகை என்றும் வாழ்த்துகிறது.

BANU BEAUTY CREATION



For all your bridal makeup, other occasions make up, Upto. Saree pleating, Ironing, Much more with negotiable price.

(With Certified Licence)

Contact: 416.885.0992

www.tamilvanakkam.com

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

புதன் கிழமை!

அண்ணாவுடன் ஆரம்ப காலத்திலேயே எஸ்.எஸ்.ஆருக்கு நட்பு இருந்தது. 19.11.1943 அன்று ஈரோட்டில் 'சந்திரோதயம்' நாடகத்தை நடத்திய அண்ணா, அதில் நடிக்கவும் செய்தார். ஏற்கெனவே அங்கு நாடகம் நடத்தி வந்த குழுவில் இருந்த எஸ்.எஸ்.ஆர்.தான் அன்று அண்ணாவுக்கு 'மேக்கப்' போட்டவர். திரைத்துறைக்கு வந்தபிறகு இந்த நட்பு நெருக்கமானது. அண்ணா கதை, வசனம் எழுதிய 'சொர்க்கவாசல்' படத்தில் கே.ஆர். ராமசாமியுடன் எஸ்.எஸ்.ஆர். சேர்ந்து நடித்தார். இதில் கே.ஆர். ராமசாமியின் காதலி பத்மினி எஸ்.எஸ்.ஆர். காதலி அஞ்சலிதேவி. மிகப்பெரிய அளவில் இப்படம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஓடவில்லை. 1965இல் ஏவிஎம் தயாரித்த 'காக்கும் கரங்கள்' படத்தில் டாக்டர் வேடத்தில் எஸ்.எஸ்.ஆர். நடித்திருந்தார். பத்திரிகைகள் உட்பட இப்படத்தை பார்த்த அனைவருமே இவரது நடிப்பைப் பாராட்டினார்கள். படத்தைப் பார்த்த அண்ணா, எஸ்.எஸ்.ஆர் வீட்டுக்கே சென்று பாராட்டினார். 'இதுவரை நீ நடித்துள்ள படங்களில் இதுவே சிறந்தது' என்று அப்போது அண்ணா கூறினாராம். கட்சிக்காக எஸ்.எஸ்.ஆர். செய்தவற்றை பார்த்து நெகிழ்ச்சியடைந்த அண்ணா, 1957ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் தேனி சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட எஸ்.எஸ்.ஆருக்கு வாய்ப்பு கொடுத்தார். தி.மு.க. தேர்தலில் போட்டியிட்டது அதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. எஸ்.எஸ்.ஆரும் சேலம் தொகுதியில் போட்டியிட்ட கட்சியின் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியனும் உதயசூரியன் சின்னம் கிடைக்காததால், சேவல் சின்னத்தில் போட்டியிட்டனர். இந்த சின்னம் குழறுபடிகள் காரணமாக, அத்தேர்தலில் காஞ்சீபுரம் தொகுதியில் அண்ணா, குளித்தலை தொகுதியில் கருணாநிதி உள்பட 15 தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றி பெற, நெடுஞ்செழியனும் எஸ்.எஸ். ஆரும் குறைந்த ஓட்டு வித்தியாசத்தில் தோல்வி அடைந்தனர். தொடர்ந்து வந்த 1962 தேர்தலில் மீண்டும் தேனி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பாக எஸ்.எஸ்.ஆர். நின்றார். இப்போது எஸ்.எஸ்.ஆருக்கு ஆதரவாக எம்.ஜி.ஆர். பிரசாரம் செய்தார். அதற்கு பலன் இருந்தது. இந்த முறை எஸ்.எஸ்.ஆர். வென்றார். இதன்மூலம், இந்தியாவில் தேர்தலில் போட்டியிட்டு சட்ட மன்ற உறுப்பினரான முதல் நடிகர் என்ற பெருமையைப் பெற்றார். இதனைத் தொடர்ந்து வெளியான 'சாரதா' படத்தில் எஸ்.எஸ். ராஜேந்திரன் எம்.எல்.ஏ. என்றே பெயர் போடப்பட்டது. 1970 ஏப்ரல் 3 முதல் 1976 ஏப்ரல் 2 வரை தி.மு.க. நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் எஸ்.எஸ்.ஆர். இருந்துள்ளார். அப்போது ராஜமான்ய ஒழிப்பு தீர்மானம் நாடாளுமன்றத்தில் வந்தபோது, அதனை ஆதரித்து ஓட்டுப்போட வேண்டிய கூட்டணி கட்சி உறுப்பினரான எஸ்.எஸ்.ஆர். ஒட்டு போட



அவைக்கே வரவில்லை. அத்தீர்மானம் ராஜ்ய சபாவில் தோல்வியடைந்தது. இதனால் இந்திரா காந்தி இந்திய நாடாளுமன்றத்தையே கலைத்துவிட்டு இடை தேர்தலை அறிவித்தார். பிறகு, இதனைப் பற்றிக் கேட்டபோது 'வயிற்று வலி(!) காரணமாக ஹோட்டல் அறையிலேயே இருந்துவிட்டதாக' எஸ்.எஸ்.ஆர். சொன்னார்.

திமுகவில் இருந்து பிரிந்து எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க.வைத் தொடங்கியபோது எம்.ஜி.ஆருடன்தான் எஸ்.எஸ்.ஆர். செல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எஸ்.எஸ்.ஆர்., திமுகவில்தான் இருந்தார். அவர் மகன் ராஜேந்திரகுமார் மட்டும் எம்.ஜி. ஆருடன் சென்றார். அப்போது எம்.ஜி.ஆரை தாக்கி எஸ்.எஸ்.ஆர். ஒரு அறிக்கை விட்டார். 'அன்றைய தினம் 'ராஜா தேசிங்கு' படத்தில் என்னுடன் திருமதி பத்மினி அவர்கள் நெருங்கி நடிக்கக்கூடாது என்பதற்காக எம்.ஜி.ஆர். செய்த சூழ்ச்சிகளை நாடு மறக்குமா?' என்று அதில் கேட்டிருந்தார். இப்பொழுது இந்த அறிக்கை வந்தால் பேஸ்புக், டிவிட்டர் தளங்களில் பிரித்து மேய்ந்திருப்பார்கள். அப்பொழுது 'துக்ளக்' பத்திரிகையில் சோ மட்டும், 'எஸ்.எஸ்.ஆர். சார்! கேட்கவே பதறுகிறதே, நெஞ்சு கொதிக்கிறது. இப்படியெல்லாம் அநியாயமா? எப்பேர்ப்பட்ட அநீதி இது? இதையெல்லாம் இந்த நாடு மறந்தால் இந்த நாட்டிற்கு விமோசனம் ஏது? இந்த நாடு நன்றி கொன்ற நாடு ஆகிவிடாதா?' கிண்டல் செய்திருந்தார்.

அதன்பிறகும் தொடர்ந்து எம்.ஜி.ஆரை. கடுமையாகத் தாக்கி வந்தார் எஸ்.எஸ்.ஆர்.. நடிகை விஜயகுமாரியின் தங்கை திருமண நிகழ்வில் பேசும்போது, 'இப்போ எம்.ஜி. ஆரிடம் துப்பாக்கி கொடுத்து யாரையாவது சுட சொன்னால் அவர் எஸ்.எஸ்.ஆரைதான் சுடுவார்' என்றார். மதுரை திலகர் திடலில் நடந்த ஒரு கூட்டத்தில், 'எனதருமை நண்பன் எஸ்.எஸ். ராஜேந்திரனை திரையுலகில் இருந்து விரட்டியதே இந்த எம்ஜியார்தான்' என்று திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜாங்கத்தை பேச வைத்தார்.

இப்படி எம்.ஜி.ஆரை விமர்சித்து வந்த எஸ்.எஸ்.ஆர். பின்னாட்களில் அதிமுகவில் இணைந்தது ஒரு பெரும் சோகம். இந்திரா காந்தி எமர்ஜென்ஸி கொண்டுவந்து, திமுக அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டு, மிசா கொடுமைகளில் சிக்கிய போது 'திமுக தலைவர் பதவியில் இருந்து கருணாநிதி விலகவேண்டும்' என்று எஸ்.எஸ்.ஆர் போர்க் கொடி தூக்கினார். தொடர்ந்து நடந்த திமுக செயற்குழுவில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டார். மூக்கு உடைந்தது. அவருடைய காரும் நொறுக்கப்பட்டது. பின்னாட்களில் வைகோவுடன் இணைந்து ம.தி.மு.க. தொடங்கி மீண்டும் தி.மு.க.விற்குத் திரும்பிய மு.கண்ணப்பன் தான் எஸ்.எஸ்.ஆரை அன்று விரட்டி விரட்டி தாக்கியவர். (எம்.ஜி.ஆர். கட்சியை விட்டு விலக்கப்பட்டதற்கு கருணாநிதி கூறிய காரணம், 'பொதுக்குழுவில் பேச வேண்டிய விடயங்களை பொதுக்கூட்டத்தில் பேசினார்' என்பதுதான். பொதுக்குழுவில் எம்.ஜி.ஆர். பேசியிருந்தால் உயிர் பிழைத்திருப்பாரா என்றக் கேள்வியைத்தான் இந்தச் சம்பவம் எழுப்புகிறது.) இது சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் நடந்தபோது, 'அன்பகத்தில் அன்று நடந்த சம்பவம் நினைவிருக்கிறதா?' எனக் கேட்டபோது எஸ்.எஸ்.ஆர். சொன்னாராம்: "மறக்க முடியுமா?!" ஆனாலும், திமுக மீதான பற்று எஸ்.எஸ்.ஆரிடம் குறையவில்லை. தி.மு.க.விலிருந்து எஸ்.எஸ். ஆர். விலக்கப்பட்ட போது வந்த பதிவு தபாலில்கூட அவர், 'எஸ்.எஸ். ராஜேந்திரன், தி.மு.க.' என்றுதான் ஒப்பந்தமிட்டிருக்கிறார். தி.மு.க.விலிருந்து விலக்கப்பட்ட நிலையில் வேறு வழியில்லாமல் அதிமுகவில் இணைந்தார். தொடர்ந்து வந்த பொதுத் தேர்தலில் ஆண்டிப்பட்டி தொகுதியில் எஸ்.எஸ்.ஆரை நிறுத்தினார் எம்.ஜி.ஆர்.

**- ஃபிலிம் நியூஸ் கிருஸ்ணன் -**

அத்தேர்தலில் அகில இந்திய அளவில் அதிக வாக்கு வித்தியாசத்தில் எம்.ஜி.ஆர். செல்வாக்கில் வெற்றி பெற்றார் எஸ்.எஸ்.ஆர்.! இதே காலகட்டத்தில் சிறு சேமிப்பு கழகத்தின் துணைத் தலைவர் பதவியையும் எஸ்.எஸ்.ஆருக்கு வழங்கி அழகு பார்த்தார் எம்.ஜி.ஆர்.!!

எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் மருத்துவமனையில் இருந்தபொழுது நடைபெற்ற 1984 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் எஸ்.எஸ்.ஆருக்கு போட்டியிட வாய்ப்பு வழங்கப்படவில்லை. இது சம்பந்தமாக பேச எம்.ஜி.ஆரையும் தொடர்புகொள்ள முடியாத நிலையில் அ.தி.மு.க.வில் இருந்து விலகி 'எம்.ஜி.ஆர். - எஸ்.எஸ்.ஆர். புரட்சி இயக்கம்' என்னும் புதிய கட்சியைத் தொடங்கி, சேடபட்டி தொகுதியில் போட்டியிட்டார். அதிமுகவின் அதிகாரப்பூர்வ வேட்பாளராக சேடபட்டி முத்தையா நின்றார். இத்தேர்தலில் எஸ்.எஸ்.ஆர். டெபாசிட் இழந்தார். சேடப்பட்டி முத்தையா வெற்றி பெற்றார். இத்துடன் எஸ்.எஸ்.ஆரின் அரசியல் வாழ்வு கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டது. எம்.ஜி.ஆர். உடல்நலம் சரியாகி திரும்பிய பிறகு மீண்டும் அ.தி.மு.க.வில் சேர்ந்தவர், எம்.ஜி.ஆர். மறைவிற்கு பின்னர் அ.தி.மு.க. ஜெயலலிதா அணி, ஜானகி அணி என இரண்டாக உடைந்த நிலையில், ஜெயலலிதா அணியில் இணைந்தார். 1989 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பெரியகுளம் தொகுதியில் அ.தி.மு.க. (ஜெ.)

தொடர்ச்சி 33ஆம் பக்கம்

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
CHEMISTRY, PHYSICS, BIOLOGY
FUNCTIONS, ADV. FUNCTIONS
CALCULUS & VECTORS, DATA MGT
SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
High School ACADEMIC/UNIVERSITY
IB & AP PROGRAMME
M CAT Classes
EQAO GR 3 & 6
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com


Niru Niru
நிரு
பிராண்ட்
BRAND
Niru ®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE
BRAND Niru

# கத்தி - ஒரு பார்வை

தீபாவளி அன்று வெளியான படமான கத்தியின் கதையை கொஞ்சம் பார்ப்போம். சிறையிலிருந்து தப்பியோடிய கைதியைப் பிடிக்க வெளியே வந்து தப்பியோடிய கைதி கதிரேசன். அவன் Bangkok க்கு தப்பி ஓட நினைத்தபோது ஒரு பெண்ணிற்காக இந்தியாவில் இருக்க வேண்டி வருகிறது.



அதே இரவு அவன் நண்பனுடன் செல்லுகையில் ஒருவர் சுடப்படுவதை காண்கிறான். சுடப்பட்டவர் அவனைப் போல இருப்பதாலும், போலீஸ் அவனைத் தேடி வருவதாலும், அவன் சுடப்பட்டவரின் அடையாளங்களை மாற்றி தான் சுடப்பட்டவர் போல் நடிக்க ஆரம்பிக்கிறான். சுடப்பட்டவரின் பெயர் ஜீவானந்தம். அவர் வயது போனவர்களை பராமரிக்கும் இல்லம் நடத்துபவர். Bangkok க்கு செல்ல விரும்பிய கதிர் இவ் இல்லத்திற்கு சேரவேண்டிய பணத்தை தான் எடுத்துக்கொள்ள நினைக்கிறான். அதனால் இன்னும் சில காலம் ஜீவாவாக வாழலாம் என நினைக்கிறான்.

ஆனால் போகப்போக கதிர் ஜீவாவின் வாழ்க்கையை மற்றும் எதிரிகளைப் பற்றியும் அறியும்போது கதையின் போக்கு மாறுகிறது. கதிர் ஜீவாவின் கடமையை செய்வாரா அல்லது பணத்தை எடுத்துக் கொண்டு ஏமாத்துவாரா என படத்தை பார்த்து அறியலாம். முதலில் ஆடல், பாடல் மற்றும் காதல் எனத் தொடங்கும் படம் இரண்டாம் பாகம் கருத்துக் கூறும் படமாக மாறுகிறது.

கத்தியின் முக்கிய கருத்து விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் காட்டுவது ஆகும். பணக்காரர்களும் தொழில்நுட்பமும் முன்னேறும் உலகில் ஏழை விவசாயிகள் படும் கஷ்டத்தை கத்தி எடுத்து காட்டுகிறது. விவசாய நிலங்கள், நகர மக்களின் விருப்பங்களை நிறைவேற்று வதற்காக வாங்கப்படுகின்றன. அதாவது உணவுப்பயிர்கள் வளர வேண்டிய இடத்தில் Coke போன்ற பானம் செய்ய தண்ணீர் எடுக்கப்படுகிறது. உயிர்வாழ அவசியமான தேவைக்கு தண்ணீர் இல்லை. ஆனால் நகரத்தாரின் ஆடம்பர வாழ்க்கைக்கு தேவையான பல பொருட்கள் செய்வதற்கு தண்ணீர் வீணாக்கப்படுகிறது. இது படத்தில் நன்றாக உணர்த்தப்படுகிறது.

அதற்கு மேல் நகரத்தவரின் ஆடம்பர பொருட்களுக்கு விவசாயியின் உணவுப் பொருட்களை பாவிக்கிறதையும் காட்டுகிறார்கள். உதாரணம் உணவுப் பொருட்கள் முகத்திற்கு பூசும் பொருட்களை செய்ய பாவிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது.

இவ்வாறு விவசாயிகள் படும் கஷ்டங்களை நகரமக்களும் செய்தி நிறுவனங்களும் உணராமல் இருப்பது தெரிகிறது. இதை எவ்வாறு அவர்களுக்கு உணர்த்தப்படுகிறது என படத்தை பார்த்து நீங்கள் அறியலாம். ஏழையின் பிரச்சினைகளை பொதுமக்களுக்கு உணர்த்துகிறது இப்படம்.

வெளிநாடுகளில் வெளியாகும் Trendகளை உடனேயே தமிழ்நாட்டிற்கு கொண்டு செல்லப்படுவது இப்படத்தில் தெரிகிறது. உதாரணமாக selfie, instagram போன்ற Trendகளை இப்படத்தில் காணலாம். சமூக இணையத்தளங்கள் வர முந்திய காலத்தில் இங்கிருந்து trends அங்கு செல்ல பல வருடங்கள் எடுத்தன.

இப்பொழுது சமூக இணையத்தளங்களால் உடனுக்குடனேயே தமிழ் சினிமாவில் இந்த Trend ஐ காண முடிகிறது.



**ஞா. ஆரணி**
**அகவை 16**

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# எஸ்.எஸ். ராஜேந்திரன்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

அணி சார்பாகப் போட்டியிட்டார். தோல்வி அடைந்தார். பின்னர் திருநாவுக்கரசு தொடங்கிய 'எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' கட்சியில் சேர்ந்தார். சிறிது காலம் கழித்து அதிலிருந்தும் விலகினார். அத்துடன் அரசியலில் இருந்தே ஒதுங்கினார். ஆனால், எஸ்.எஸ்.ஆரின் மகன் ராஜேந்திரகுமார் தொடர்ந்து அதிமுகவிலேயே இருந்தார். 1991 நாடாளுமன்ற தேர்தலில் செங்கல்பட்டு தொகுதியில் போட்டியிட்ட ராஜேந்திரகுமார் வெற்றிபெற்று எம்.பி.யானார்!

எஸ்.எஸ்.ஆருக்கு மூன்று மனைவிகள். முதல் மனைவி பெயர் பங்கஜம். எஸ்.எஸ்.ஆருடன் நாடகத்தில் நடித்த கேரளாவைச் சேர்ந்த நடிகை இவர். பங்கஜம் - எஸ்.எஸ்.ஆர். திருமணம் 1946 டிசம்பர் 1 அன்று ஸ்ரீரங்கத்தில் நடைபெற்றது. அதேநாளில் அதே மேடையில் எஸ்.எஸ்.ஆரின் தங்கை பாப்பம்மாள் - 'நடிகமணி' டி.வி. நாரா யணசாமி திருமணமும் நடந்தது. இந்தத் திருமணங்கள் அண்ணா தலைமையில் பாரதிதாசன் முன்னிலையில் நடந்தன.

பிறகு 'பார் மகளே பார்', 'குங்குமம்', 'பச்சை விளக்கு', 'கைகொடுத்த தெய்வம்', 'சாரதா' உட்பட 29 திரைப்படங்களில் தன்னுடன் இணைந்து நடித்த நடிகை விஜயகுமாரியைத் திருமணம் செய்துகொண்டார் எஸ்.எஸ்.ஆர். அப்போது வடநாட்டில் ராஜ்கபூர் - நர்கீஸ் ஜோடி புகழ்பெற்று விளங்கியது போல், தமிழ்நாட்டில் எஸ்.எஸ்.ராஜேந்திரன் - விஜயகுமாரி ஜோடி புகழ்பெற்று விளங்கியது. யாரும் எதிர்பாராதவிதமாக ராஜ்கபூர் - நர்கீஸ் பிரிந்தது போல, விஜயகுமாரி எஸ்.எஸ்.ஆர். தம்பதிகளுக்கு ஆண் குழந்தையொன்று பிறந்த நிலையில் இவர்களும் பிரிந்தனர். அதன்பிறகு இருவரும் தனித்தனியாக வசித்தாலும் மணமுறிவு ஏற்படவில்லை. சிறிது காலத்துக்குப் பின்னர் இருவரும் இணைந்து விட்டதாகவும் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தனர். ஆனாலும், மூன்றாவதாக தாமரைச்செல்வி என்பவரை மணந்தார் எஸ்.எஸ்.ஆர். முதல் மனைவி பங்கஜத்தின் வழியாக இளங்கோவன், ராஜேந்திரகுமார், கலைவாணன், செல்வராஜ் என்னும் நான்கு மகன்களும் பாக்யலட்சுமி என்னும் மகளும் உள்ளனர். இரண்டாவது மனைவியான விஜயகுமாரி வழியாக ரவிக்குமார் என்னும் மகன் உள்ளார். மூன்றாவது மனைவியான தாமரைச்செல்வி வழியாக கண்ணன் என்னும் மகனும் ஒரு மகளும் உள்ளனர்.



அரசியலிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு, சென்னை எல்டாம்ஸ் சாலையிலுள்ள தனது வீட்டில் மூன்றாவது மனைவி தாமரைச்செல்வி மற்றும் மகன் கண்ணனோடு வாழ்ந்து வந்தார், எஸ்.எஸ்.ஆர். இக்காலகட்டத்தில் திரையரங்கு, படப்பிடிப்பு ஸ்டுடியோ மற்றும் ஒலிப்பதிவு தியேட்டர் ஆகியவற்றை நிறுவி நிர்வாகித்து வந்தார். தனது வரலாற்றை 'நான் வந்த பாதை' என்னும் பெயரில் நூலாக எழுதினார். தமிழக அரசின் பாகவதர் விருது, கலைமாமணி விருது, சிறந்த நடிகருக்கான விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை எஸ்.எஸ்.ஆர். பெற்றுள்ளார். எஸ்.எஸ். ஆருக்குப் பெரும் புகழைப் பெற்றுத்தந்தது, மருது சகோதரர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு உருவான 'சிவகங்கை சீமை' படம். அந்த மருது சகோதரர்களின் 213ஆவது நினைவு தினமான 24 அக்டோபர் 2014 (வெள்ளிக்கிழமை) அன்றே எஸ்.எஸ்.ஆரும் மறைந்தார்.


## கொய்யாத்தோட்ட மக்களின் கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்

கொய்யாத்தோட்ட மக்களின் கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் எதிர்வரும் மார்கழி மாதம் 13ம் திகதி 2014 அன்று, ***1686 Ellesmere Road, Scarborough M1H 2V5*** அமைந்துள்ள ***JC's Banquet Hall*** இல் இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது என்பதை கனடா வாழ் கொய்யாதோட்ட மக்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம். நீண்ட நாட்களுக்குப் பின்பு ஊர் உறவுகளைப் புதுப்பிக்க இந்த ஒன்றுகூடல் வழி வகுக்கும் என்பதால், அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இந்த ஒன்று கூடலில் உங்கள் பிள்ளைகளோ அல்லது நீங்களோ நிகழ்ச்சிகள் ஏதும் கொடுக்க விரும்பினாலோ அல்லது மேலதிக ஒன்று கூடல் பற்றிய விவரங்களை அறிய விரும்பினாலோ கீழே கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

இராஜசிங்கம் - ***416.258.1371*** / நந்தன்- ***416.830.9277*** / கிங்ஸ்லி - ***(416)-953-0370***

# Education

## Review Questions14 -21

➢ **BIOLOGY 12**

Chemical analogues that mimic the structure of nucleotides incorporated into DNA and prevent DNA polymerase from building a complementary strand during DNA replication. Explain why this is an effective method in treating the growth of cancer cells? Explain side effects of this method.

➢ **DATA MANAGEMENT 12**

A game is played in which two cards are drawn from a box and a six sided die is rolled. Box contains 40 cards numbered 1 through 10 (4 cards in each number). If the cards are not replaced find the probability for an event that one odd numbered card is drawn and an odd number is rolled.

➢ **ADV. FUNCTIONS (12)**


(i)Determine the x- values in the interval $[0,2\pi]$ that satisfy the inequality

$$0 < \sin x \le \frac{\sqrt{2}}{2}$$

(ii) $\log_a x = 3$ and $\log_a y = -2$, determine $\log_a(\frac{x^2}{y^3})$

## Answer Key : 14-20

➢ **ADVANCED FUNCTIONS 12**



$$\frac{P_{(x)}}{q_{(x)}} = \frac{(2x+1)(x-2)(x+2)+1}{(x-2)(x+2)}$$

$$\frac{P_{(x)}}{q_{(x)}} = \frac{2x^3+x^2-7x-6}{x^2-4}$$

*X*-intercepts= -1, -1.5; *y*-intercept=1.5

**CHEMISTRY 12**

(i) Boiling point of hydrazine is higher due to greater inter molecular forces compared to ethene. Intermolecular forces between hydrazine is due to London dispersion forces and dipole –dipole attraction, where as in ethene only London dispersion forces.

(a) $SO_3^{2-} + H_2O - 2e \rightarrow SO_4^{2-} + 2H^+$ ....1

$MnO_4^- + 2H^+ + 10e \rightarrow Mn^{2+} + SO_4^{2-}$ ....2

$5SO_3^{2-} + 6H^+ + 2MnO_4^- \rightarrow 2Mn^{2+} + 5SO_4^{2-} + 3H_2O$

b) $HNO_3 + HCl + NH_4Cl \rightarrow N_2O + Cl_2 + HClO_4 + H_2O$


➢ $4H_2O + Cl^- \rightarrow ClO_4^- + 2H^+ + 8e$

➢ $2Cl^- \rightarrow Cl_2 + 2e$

- $NH_4^+ + H_2O - 8e \rightarrow N_2O + 10H^+$
- $NO_3^- + 10H^+ + 8e \rightarrow N_2O + 5H_2O$

$6HNO_3 + 7HCl + 2NH_4Cl \rightarrow 4N_2O + Cl_2 + HClO_4 + 10H_2O$

**PHYSICS 12**




(a) T= mg = 900x9.8N

(b) (i) pulling back, (h=15-15cos20)= 0.905m

$\Delta E_g = \Delta mgh = mg \times 0.905$ J= $\Delta E_k = \frac{1}{2}mv^2$; V= 4.2m/s

(ii) $T = mg + mv^2/r = 9.9\times10^3$N

(c) $V_2=0$, $V_1 = 4.2$m/s

$a=4.2/0.2 = 21 m/s^2$;

$F=ma= 900\times21N=1.9\times10^3N$


Ans. key 14-20 - next issue

☎ 647 341 3975

K.A.Srikrishnaraj PhD

ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE


# திரை விமர்சனம்...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

எல்லா வழக்குகளிலும், எவ்வளவு பெரிய பக்கா திருடனாக இருந்தாலும், ஒரு புள்ளியை காவல்துறைக்காக விட்டு வைத்திருப்பான் என்பதை நிரூபிப்பதுபோல், ஐ.ஜி. பையனின் காரை அப்புறப்படுத்தும் போது அதனை கான்ஸ்டபிள் சகாதேவன் பார்த்திருக்கிறார். அப்போது அதனை சாதாரண ஒரு நிகழ்வு எனப் பொருட்படுத்தாமல் விட்டுவிட்ட சகாதேவன், இப்போது அதனை காவல்துறை விசாரணைக் குழுவுக்கு சொல்லிவிடுகிறார். ஜார்ஜின் மொத்தத் திட்டமும் தரை மட்டமாகிறது. காவல்துறையின் விசாரணை மேலும் இறுகுகிறது. இப்போது அன்சிபா பிணம் புதைக்கப்பட்ட இடத்தைச் சொல்லி விடுகிறாள். ஆனால், அன்சிபா காட்டிய இடத்தில் தோண்டிப் பார்த்தால் ஒரு கன்றுக் குட்டியின் பிணம்தான் அங்கே இருக்கிறது. ஜார்ஜ் குடும்பம் அப்பாவிகள் என்று நிருபணம் ஆகி விடுவிக்கப்படுகிறார்கள். ஐ.ஜி. மகன் பிணம் புதைக்கப்பட்ட இடத்தில் எப்படி கன்றுக்குட்டி பிணம் வந்தது? எப்படி ஜார்ஜ் இந்தச் சிக்கலில் இருந்து தன் குடும்பத்தைக் காப்பாற்றினார்? அதனைச் சொல்லிவிட்டால் உங்கள் படம் பார்க்கும் அனுபவத்தை கெடுத்ததாகிவிடும் என்பதால் அது இங்கே வேண்டாம்.

ஜார்ஜ் குட்டி பாத்திரத்தில் நடித்திருக்கிறார் மோகன்லால். அத்தனை பெரிய உடம்பு முழுக்க மூளை வைத்திருப்பாரோ என்று பிரமிக்க வைக்கும் அளவுக்கு புத்திசாலித் தனமான பாத்திரம். 50க்கும் 100க்கும் கணக்கு பார்த்து செலவிடும் ஆரம்ப காட்சிகளில் குடும்பத் தலைவனாகவும், குழந்தைகளை அரவணைத்து காவல்துறை விசாரணையில் எப்படி பேச வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்பதை நுணுக்கமாக சொல்லித் தரும்போது அக்கறையுள்ள தந்தையாகவும், 'இன்னைக்கு வீட்டுக்கு வரல, கடையிலேயே படுத்துக்கிறேன்' என வீட்டில் சொல்லிவிட்டு, இரவு டிவியில் பலான பாடலை பார்த்ததும் மூடாகி, கட்டுபடுத்த முடியாமல் கிளம்பி வீட்டுக்கு சென்று மனைவியிடம் வழியும்போது காதலனாகவும்' அட்டகாசமான நடிப்பு. இந்த வயதிலும் காதலை கண்ணில் தேக்கி வைத்திருக்கிறார். 'ஸ்டாமினா போய்டுச்சி' என்று சொல்லிவிட்டு பிறகு 'சைக்கிள் மிதித்தால்' என்று சொல்லி சிரிக்கும் மோகன்லால் குறும்பை ரசிக்காதவர்கள் இருக்க முடியாது.



ஐ.ஜியாக வருகிறார் ஆஷா சரத். காவல் துறையினருக்கே உரிய மிடுக்கு! மகனைக் காணாமல் கலங்குவது, 'ஜார்ஜ் சொல்லும் அத்தனை கதைகளையும் போலீஸ் நம்பலாம் நான் நம்பமாட்டேன். அவன் கண்ணில் ஏதோ பொய் தெரியுது' என்றபடியே பரிதவிப்பது, தன் அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி ஜார்ஜை கடைசி நிமிடம் வரை மிரட்டி நொறுக்குவது என்று வெளுத்துக்கட்டி இருக்கிறார். கான்ஸ்டேபிள் சகாதேவனாக வருகிறார் கலாபவன். லஞ்சத்துக்காக அலையும் காவலர் பாத்திரம். 'பாஸ்போர்ட் வெரி.ஃபிகேஷன்' செய்யப்போன இடத்தில் ஜார்ஜை காருக்குள் பார்த்துவிட்டு, அந்த ஒரு சின்ன புள்ளியை வைத்தே ஜார்ஜ் திட்டங்களை சிதற அடித்துக்கொண்டே இருக்கிறார். எங்கே ஜார்ஜ் குடும்பத்தை மாட்டவைத்துவிடுவாரோ என்ற பரிதவிப்பில், 'ஒன்று போட்டால் என்ன' என்று நமக்கு தோன்றும் அளவுக்கு பாத்திரமாகவே மாறி விட்டார். ஜார்ஜ் மனைவியாக வரும் மீனா, இவர்களின் குழந்தைகளாக வரும் இரு பெண்கள் உட்பட அனைவருமே கூட நடிப்பு என்று சொல்ல முடியாதபடி பிரமாதப்படுத்தி யிருக்கிறார்கள்.

இயக்கம்: ஜீது ஜோசப். இவருக்கு இது ஐந்தாவது படம். ஏற்கெனவே 'டிடெக்டிவ்', 'மெமரீஸ்' போன்ற திகில் படங்களைத் தந்தவர். கையில் குடையுடன் வயல்வரப்பில் மோகன்லால் நடந்து செல்லும் த்ரிஷ்யம்

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

# திரை விமர்சனம் - த்ரிஷ்யம்



கமலஹாசனின் புதிய படமான ‘பாபநாசம்’ படத்தின் மூலப்படம் இந்த ‘த்ரிஷ்யம்’. மலையாளம் மட்டுமல்லாமல் கன்னடம், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் வெளியாகி வரலாறு காணாத வகையில் வெற்றிகரமாக ஓடியது. ஜார்ஜ் குட்டி, நான்காம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர். பெற்றோர் இல்லாமல் வளர்ந்ததால் கஷ்டத்தின் வலியைத் தெரிந்த ஜார்ஜ், காசை பார்த்து பார்த்து செலவு செய்து, லோக்கல் கேபிள் டிவி தொழில் செய்து, நடுத்தர வர்க்கம் என்னும் வட்டத்திற்கு உயர்கிறார். மனைவி, இரண்டு பெண் குழந்தைகளுடன் கிராமத்தில் ஒதுக்குப்புற மாக, அமைதியான சூழலில் வாழ்ந்து வருகிறார். இவருக்கு சினிமா என்றால் அவ்வளவு விருப்பம். வெறித்தனமாக சினி-மாக்கள் பார்ப்பார். வாழ்க்கையில் முக்கிய முடிவுகளை சினிமாவைப் பார்த்து எடுக்கும் அளவுக்கு சினிமாப் பைத்தியம். தமிழ், ஹிந்தி, ஆங்கிலம், மலையாளம் ஆகிய நான் மொழிகளையும் பொது அறிவினையும் திரைப்படங்கள் பார்த்தே கற்றுக்கொண்டவர். இப்படி சிக்கல் இல்லாமல் நகர்ந்து கொண்டிருக்கும் ஜார்ஜ் குடும்ப வாழ்க்கைப் படகு ஒரு புயலில் சிக்கிக்கொள்கிறது.

ஜார்ஜின் பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் மகள் அன்சிபா உடை மாற்றுவதை ஒளித்து வைக்கப்பட்ட கைபேசி காமிரா மூலம் பதிவு செய்கிறான் அவளது வகுப்புத் தோழனான அருண். பிறகு, அதனைக் காட்டி ‘பிளாக்மெயில்’ செய்ய, ஜார்ஜ் இல்லாத சமயம் பார்த்து, ஒருநாள் இரவில் இவர்கள் வீட்டுக்கு வருகிறான். வீட்டில் அப்போது ஜார்ஜின் மனைவி மீனாவும் இருக்கிறார். அம்மா, மகள் இருவருக்கும் பாலியல் தொந்தரவு கொடுக்கிறான் அருண். அவனிடம் இருந்து தப்பிக்க அவனைத் தாக்கும்போது எதிர்பாராதவிதமாக இறந்துபோகிறான். திகைத்து நிற்கும் இருவரும் பிறகு சுதாரித்து பிணத்தை வீட்டின் பின்புறம் புதைத்து விடுகிறார்கள். இதனை பத்து வயதான ஜார்ஜின் கடைசி மகள் பார்த்துவிடுகிறாள்.

ஜார்ஜ் வந்ததும் அம்மாவும் மகளும் நடந்தவற்றை அவருக்கு சொல்கிறார்கள். இறந்துபோன அருணின் அம்மா காவல்துறை ஐஜி, அப்பா நீதிபதி. இப்படியொரு பலமான பின்புலம் உள்ளதால், இதனை எப்படி மறைப்பது என்று திட்டமிடுகிறார், ஜார்ஜ். வழக்கம்போல் இதற்கு தன் சினிமா அறிவைப் பயன்படுத்துகிறார். முதலில் தடயங்கள் எல்லாவற்றையும் அழிக்கிறார். பிறகு, குறிப்பிட்ட நாளில் குடும்பத்துடன் சுற்றுலா சென்றுவிட்டதால் ஊரில் இல்லாத தாகவும், அதனை நிரூபிக்கும் வகையில் சாட்சியங்களையும் உருவாக்குகிறார். ஜார்ஜ் பற்றி ஒருவர் ஒரு சந்தர்ப்பத்தில் சொல்கிறார்: “ஒரு சாதாரண நான்காம் கிளாஸ் படிச்ச நாட்டுப்புறத்தான். அவனால என்ன செய்ய முடியும்னு நினைச்சேன். ஆனா அவன் நம்ம நினைக்கிற மாதிரி சாதாரண ஆள் கிடையாது.” இதனை நிரூபிக்கும் வகையில் இருக்கிறது ஜார்ஜின் சுற்றுலாத்

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

திட்டம். மகனைக் காணாத ஐ.ஜி. தீவிரமான விசாரணை மூலம் மெதுவாக ஜார்ஜ் குடும்பத்தை நெருங்குகிறார். ஜார்ஜ், மனைவி, அன்சிபா, கடைசி மகள் நால்வரையும் தனித்தனியாக விசாரிக்கிறார். ஆனால், ஜார்ஜின் திட்டப்படி சொல்லிவைத்ததுபோல நால்வருமே ஒரே மாதிரி சொல்ல, வழக்கை மேற்கொண்டு நகர்த்த முடியாமல் காவல்துறை தடுமாறுகிறது.

தொடர்ச்சி 34ஆம் பக்கம்



# திரை விமர்சனம்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

சுவரொட்டியைப் பார்ப்பவர்கள் இது வழக்கமான ஒரு மலையாள குடும்பச் சித்திரத் திரைப்படம் என்றுதான் நினைப்பார் கள். ஆனால், திரைப்படம் தொடங்கி நேரம் முன்னோக்கி நகர நகர நாம் இருக்கையில் முன்னோக்கி நகர்கிறோம். இதயத் துடிப்பு எகிறத் தொடங்குகிறது. முதல் ஒரு மணி நேரம், மையக் கதாபாத்திரங்களின் சித்திரங்களை உருவாக்குவதில் திரைக் கதை கச்சிதமாக செலவிடப்பட்டிருக்கிறது. இந்த ஒருமணி நேரத்தில் ஜார்ஜின் குடும்பத்தில் நாமும் ஒருவராகிவிடுகிறோம். ஜார்ஜ் சுபாவம் நமக்கு மிகவும் பிடித்துப் போகிறது. இப்போது ஜார்ஜ் குடும்பம் எதிர்கொள்ளும் சிக்கல் நாமே எதிர்கொள்ளும் சிக்கலாகிவிடுகிறது. கடைசி அடுத்த ஒருமணி நேரம் ஜார்ஜ் குடும்பம் மாட்டிக்கொள்ளக்கூடாது என்ற நம் விருப்பம், அடுத்து என்ன நடக்கும் என்ற எதிர்ப்பார்ப்பு, பயம் என்று பல்வேறு உணர்வுகள் கலந்து நம்மை திரைக்கதைக்குள் கட்டிப்போடுகிறது.



த்ரிஷ்யம் என்றால் காட்சி என்று அர்த்தம். எதற்காக இந்தப் பெயரை இயக்குநர் வைத்தாரோ தெரியாது. ஆனால், படத்தில் ஒரு காட்சியைக்கூட விட்டுவிட முடியாதபடி நேர்த்தியான திரைக்கதை. நிறைய மலையாளப் படங்கள் தமிழில் மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளன. ஆனால், அவற்றில் ஒன்றிரண்டு தவிர பெரும்பான்மை மூலப்படத்திற்கு நியாயம் செய்தவையல்ல. தமிழ் திரையுலக வியாபார பார்மூலாவுக்குத் தக்கபடி மாற்றம் செய்கிறோம் பேர்வழி என்று மூலக்கதையைச் சிதைத்து, தமிழில் வெற்றியும் பெறாமல் காணாமல் போய் விட்டவைதான் அதிகம். 'பாபநாசம்' படத்தில் கமலஹாசன் - ஜெயமோகன் கூட்டணி இந்த வரலாற்றுப் பிழையையே மீண்டும் செய்யுமா அல்லது புதிய வரலாறு படைக்குமா?

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# அமைதிக்கானதொரு குரல்

## *A Voice for Peace*

பிறேம் ராவத் அவர்கள் அமைதி உணரப்பட வேண்டியது என்றதொரு எளிமையான செய்தியுடன் உலகைச் சுற்றிப் பிரயாணம் செய்து வருகிறார். இது ஆடம்பரமான தொன்றல்ல, ஆனால் காற்றைச் சுவாசிப்பது போன்று, உணவை உண்பது போன்று, தங்க இடம் ஒன்று உள்ளதைப் போன்று இது முக்கியமானதென அவர் கூறுகின்றார். இது இந்தப் பூமியின்கண் உள்ள ஒவ்வொரு மனிதனின் உள்ளத்தினதும் அடிப்படையான தேவையென அவர் கூறுகிறார்.

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள: 416 431 5000 தமிழ்
1.877. 707 3221 Toll free
www.wopg.org www.tprf.org

அமைதிக்காக ஏங்குவது மனிதனின் சுவபாவ மாகும். நாம் அந்த சம நிலையில் இருக்கும் போது. நமது உள்ளங்கள் நிறைந்திருக்கும் போது, எம்முடைய உண்மையான சுபாவம் பிரகாசிக்கும். நம்முடைய உண்மையான சுபாவம் மிகவும் அழகானது என திரு. ராவத் கூறுகிறார். இது உண்மையானது. அத்துடன் இது உள்ளத்திலே உள்ளது. உண்மையான அமைதியின் உறைவிடம் அதுதான். அது எமக்கு மிக அண்மையில் உள்ளபோது நாம் அதை தொலைவில் தேடுகிறோம். நீங்கள் உங்களுக்குள்ளே இருக்கும் அந்த அமைதியை உணரவேண்டும். உங்கள் உள்ளே திரும்பி எளிமையானதும், ஆனால் ஆழமானதுமான அந்த ஆனந்தத்தையும், விளக்கத்தையும் அனுபவியுங்கள்.

ஏன் இது ஆழமானது?. ஏனெனில் அது பரிபூரணமானதொன்று என அவர் விளக்க மளிக்கிறார். இந்தியாவில் பிறந்த திரு. ராவத் அவர்கள் இந்த அமைதிக்கான தேவையைப் பற்றி மிக இளம் பிராயத்தில் இருந்தே உரையாற்றத் தொடங்கிவிட்டார். இப்பொழுது அமெரிக்காவில் தங்கியிருக்கும் அவர் தனது செய்தியை எல்லா இடங்களிலும் உள்ள மக்களுக்குக் கொடுப்பதற்காக தொடர்ந்து பிரயாணம் செய்கிறார். அவர் இதைப்பற்றிக் கூறுவது மட்டுமல்லாமல், மாறாத அமைதியை மக்கள் தம்முள்ளேயே கண்டுகொள்வதற்காக தன்னால் உதவ முடியும் எனவும் உறுதியளிக்கின்றார். சந்தேகப் பேர்வழிகள் வாழ்வில் மாற்றம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என விவாதிக்கக்கூடும். வாழ்வு இப்படித்தான் என்று கூற முடியாது. ஏனெனில் வாழ்வின் சூழ்நிலைகள் தொடர்ந்தும் மாறுபடு கின்றது என்பதை அவர் ஏற்றுக்கொண்ட போதிலும் மாறாத ஒன்றை நம்முள் கண்டு கொள்வது சாத்தியம் என்பதை திரு. ராவத் தீர்க்கமாகக் கூறுகிறார். மக்கள் சகலவற்றை யும் இழப்பதை நான் கண்டிருக்கிறேன். அவர்கள் மிகவும் நேசிப்பவர்களையோ, மிகவும் பெறுமதி வாய்ந்தவற்றையோ இழந்தாலும் அவர்கள் என்றும் அழியாத அன்பையும் - காலத்திற்குக் கட்டுப்படாத அன்பையும் பெற்றிருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

அதற்கு அவர், இது நடைபெறுவதற்கான சிறந்த தருணம் இதுதான் என்கிறார். நம்முள்ளே அமைதியைக் காண்பதற்கான நேரம் இதுதான். என்னதான் வாழ்வில் நடந்தாலும் வாழ்வு ஒரு கொடை என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும் என திரு. ராவத் கூறுகிறார். நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பதை ஞாபகத்தில் கொள்வதற்கான தருணம் இதுதான், வந்து போகும் ஒவ்வொரு மூச்சும் தெய்வீகமானதொரு ஆசீர்வாதமாகும்.'

எவ்வித மாற்றங்கள் ஏற்பட்டாலும் தெளி-வென்னும் வண்ணத்தில் இருங்கள், புரிந்துண ர்வு என்னும் வண்ணத்தில் இருங்கள், உண்மைநிலை என்னும் வண்ணத்தில் இருங்கள், அழகின் வண்ணத்தில் இருங்கள். உங்கள் உள்ளே உள்ள அந்த ஆழமான விடயத்தில் இருங்கள் என அவர் மக்களுக்கு ஆலோசனை கூறுகிறார். நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அறிவு இதுதான். உங்களுக்கு உள்ளே இருக்கும் அந்த உண்மையுடன் தொடர்பு கொள்வதற்கான அந்த அறிவு. அதனால் எங்கும் போக முடியாது. அதனால் முடியாது

இந்த உலகில் அறியாமையின் வலிமை மிகவும் சக்திவாய்ந்ததொன்றாக இருப்பத னால், அமைதியின் ஒளியைக் கண்டு கொள்வது சாத்தியமற்றதென்று மக்கள் உணரலாம். ஆனால் அறியாமையில் குறை யொன்று உள்ளது. அதை நாம் உபயோகப் படுத்த வேண்டும் எனத் திரு. ராவத் கூறுகிறார். அறியாமையில் இருக்கும் பலவீனத்தை நீங்கள் பிரயோசனப்படுத்திக் கொள்ளுங்கள் எனக் கூறுகிறார். 'அது என்ன வென உங்களுக்குத் தெரியுமா? அதனால் ஒளிக்கு முகம் கொடுக்க முடியாது. உங்கள் உள்ளத்தில் வதியும் ஒளிக்கான கதவு களைத் திறவுங்கள். உடனடியாக இருள் மறைவதைக் காண்பீர்கள். ஒவ்வொரு நாளும் நன்றியுணர்வுடன் இருங்கள். ஒவ்வொரு நாளும் உங்கள் நோக்கைத் தெளிவாக வைத்திருங்கள். நான் என் கண்களை மூடிக் கொண்டிருக்கப் போவதில்லை. நான் பார்ப்பேன் என்பதை ஒவ்வொருநாளும் ஞாபகத்தில் வைத்தி ருங்கள். அமைதியை உணர்ந்த உள்ளத்தின் மகிழ்ச்சி என்பது ஒரு புது விடயம் அல்ல என்பதை திரு. ராவத் அங்கீகரிக்கிறார். ஆனாலிது மிகவும் சுவாரஸ்யமானதென அவர் கூறுகிறார்.
மகிழ்ச்சி மிகவும் சுவாரஸ்யமானது.
அமைதி மிகவும் சுவாரஸ்யமானது.
அன்பு மிகவும் சுவாரஸ்யமானது.
தெளிவு மிகவும் சுவாரஸ்யமானது.
ஒளி மிகவும் சுவாரஸ்யமானது.

காலம் காலமாக மக்கள் விளக்கத்தை அனுபவித்து அந்தத் தெளிவில் ஆழ்ந்திருக் கிறார்கள் என அவர் கூறுகிறார். அறுநூறு வருடங்களுக்கு முன்பு ஒருவர் விளக்கம் என்னும் ஊற்றின்கீழ் இருந்து ஒரு மென்மை யானதும், தூய்மையானதும், புத்துணர்வளிப் பதுமானதொரு உணர்வை உணர்ந்தார். இப்பொழுது உள்ள தொழில் நுட்பம் அவர் களுக்கு இருக்கவில்லை. ஆனால் இன்று உள்ள ஒருவர் உணரும் அதே உணர்வை அவர்களும் உணர்ந்தார்கள். ஏனெனில் சில விடயங்கள் மாறுவதில்லை. அமைதி என்பது ஒரு புதிய எண்ணக்கருத்தல்ல. யுத்தங்கள் இருந்து வந்த காலம் தொட்டு அமைதிக்காக குரல் ஒன்று மீண்டும் மீண்டும் எழுப்பப்பட்டது. உண்மையான அமைதி, போலியல்லாத அமைதி,- ஒவ்வொரு தனிமனிதனினாலும் அனுபவிக்கப்படும் ஒரு அமைதி.

யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

SPACE AVAIL. FOR PROFESSIONAL OFFICES
1000 - 1800 Sq.ft available for professional offices in GTA Square mall - ***Middlefield & Finch.*** Dedicated underground parking & locker included.
***Pl. call: 416.315.9397***

# ஒற்றைச் சிலம்பு

பெண்கள் அணிகலன்களில் சிலம்பும் ஒன்றாகும். தலையிலிருந்து கால்வரையும் பெண்கள் பல்வேறு வடிவில் அணிகலன் களை அணிகின்றார்கள். இவை அவர்களுக்கு அழகினையும் பொலிவினை யும் தருவதோடு காந்தர்வக் கன்னிகை கள் போல் காட்சியளிக்கவும் செய்கின்றன. வசதியுள்ள பெண்கள், உயர்குடிப் பெண்கள் 'நகைகளின் சுமைதாங்கி'யாகவே தம்மை ஆக்கிக் கொள்கிறார்கள். இதைவிட போலி நகைகளில் ஜொலிப்பவர்களும் உள்ளனர். எனவே நகைகள் பெண்கள் அழகை மிகைப்படுத்தி, திகைப்புறச் செய்து, உவகை ஊட்டுகின்றன. ஆபரணங்கள் அணங்கின் அழகிற்கு கட்டியம் கூறுகின்றன என்றால் மிகையில்லை. சிகை அழகும், நகை அழகும் உடை அழகும் பெண்களை கவர்ச்சிப் பொருளாக ஆக்கி விடுகின்றன. நகைகள் பற்றி காப்பியங்களே எழுந்துள்ளமை, அவற்றின் பெருமையை உணர்த்தும்.

குண்டலகேசி, வளையாபதி, மணிமேகலை, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் என்பன அவையாம். ஒற்றைச் சிலம்பைக் கொண்டு கற்பின் கணலை (நெருப்பு), பெண்மையின் பெருமையினை, மெய்ப்பொருள் காண வேண்டியது அறிவு என்பதனை காசினிக்கு உணர்த்தவே இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றியிருக்க வேண்டும்.

பணமுடை வந்தாலே பலரும் பதட்டப்படுவ துண்டு. கைப்பொருளை விற்று கைச் செலவிற்கு பணம் பெறுவதுண்டு. அந்த வகையிலே தான் கோவலன் மனைவி கண்ணகியின் காற்சிலம்பை விற்பதற்கு மதுரை வீதியிலே சென்றான். பொற்கொல்ல னால் ஏமாற்றப்பட்டு அரசியின் சிலம்பினை திருடிய கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டு



கொலை செய்யப்பட்டான். குடிமகன் ஒருவன் அநியாயமாகக் கொல்லப்பட்டான். இது நீதிக்கு சாவலாக அமைந்தது. ஒற்றைச் சிலம்பை விற்று பெற்றுக் கொள்ளும் பணம் தொழில் தேடும் வரையிலும் சற்று உதவும் என்பதே கோவலனின் அங்கலாய்ப்பாக இருந்திருக்கும். ஆனால் அதுவே கோவலனு க்கு கேவலத்தை உண்டு பண்ணி அவனது சாதலுக்கு காலனாய் அமைந்து விட்டது.

கோவலன் ஒற்றைச்சிலம்பை மட்டும் எடுத்துச் சென்றமை மற்றைச் சிலம்பை கண்ணகியின் காலில் பார்க்கும் போதெல்லாம் விற்ற சிலம்பை விரைவில் மீட்க வேண்டும் என்ற விருப்பத்தை அவனுள் ஏற்படுத்தும் என்பதனாலேயாகும். அத்துடன் சிலம்பின் சாட்சி நீதியை வென்றது எனலாம். அதனை பின்வருமாறு உணர்த்தலாம்.


வாய்மொழி சாட்சியம் கொன்றது பதியை
சிலம்பின் சாட்சியம் வென்றது நீதியை
பொய்பேசாத சாட்சி மௌனமான சாட்சி
அதுவே சிலம்பத்தின் மாபெரும் மாட்சி

கண்ணகியின் சிலம்பும் அரசியின் சிலம்பும் வெளிப்பார்வைக்கு ஒன்றுபோல் இருந்தமை யால் தான் மன்னனும் அரசியும் தவறிழைக்க நேர்ந்தது. தனது சிலம்பை உடைத்து உள்ளிருக்கும் பரல்கள் வேறானவை என்று அரச சபையில் கண்ணகி நிரூபித்த போதுதான் உண்மை வெளிப்பட்டது. முத்துப் பரல்களும் மாணிக்கப் பரல்களும் வெவ்வேறானவை. யானே அரசன். யானே கள்வன் என்று மன்னன் அரயணையிலிருந்து மயங்கி வீழ்ந்து உயிர் துறந்தான். அரசியும் உயிர் துறந்து பத்தினி தர்மத்தை நிலைநாட்டினாள். சோக நாடகம் ஒன்று, கோட்சீன் ஒன்று முடிவுக்கு வந்தது. வழக்கிற்கு தடயம் வேண்டுமல்லவா? கண்ணகியின் காற்சிலம்பி னுள் இருந்த மாணிக்க பரல்கள்தான் தடயப் பொருள். சாதுரியமான வழக்குரையிருந்தா லும் தடயப் பொருள்கள் நல்ல சான்றாதாரமாக இருந்தால் வழக்கை வெல்லமுடியாது நீதி நிலைநாட்டப்படும்.

அத்துடன் வழக்கு இழுத்தடிக்கப் படாமலும் குறுகிய காலத்தில் முடிவுற்றால் நீதி நிலைநாட்டப்படுவதற்கு வழியுண்டு. தடய அறிவியலின் முன்னோடி கண்ணகி எனலாம். எனவேதான் கண்ணகியை தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள்.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு - குறள் 355

வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்படும்போது மேற்காட்டிய குறளே அடிநாதமாக அமைய வேண்டும்.



நா. க. சிவராமலிங்கம்



# பிரிவதற்கல்ல திருமணம்!

பெருகிவரும் விவாகரத்து வழக்குகளும், நிரம்பி வழியும் குடும்ப நல வழக்காடு மன்றங்களும் தான் இந்த கட்டுரையை என்னை எழுத வைக்கிறது. திருமணம் நடந்த பின்புதான் விவாகரத்து தேவை என்கிறது. எனவே முதலில் திருமணம் என்றால் என்ன என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஆண், பெண் இருவரும் பிறந்து வளர்ந்த சூழ்நிலை வேறுவேறு. குடும்பப் பழக்கங்கள் வேறுவேறு. இவ்வாறான இரண்டு குடும்பங்களிலிருந்து இருவர் இணைந்து மணவாழ்வு தொடங்கி மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அதைப் பார்த்து அந்த இரு குடும்பத்தினரும் குறைந்த பட்சம் இருவரின் பெற்றோரும் மகிழ வேண்டும். எவ்வளவு பெரிய பொறுப்புள்ள நிகழ்வு இது. இந்த நிகழ்வை மிகவும் எளிதாக நினைக்கும் எண்ணம்தான் விவாகரத்துக்கான அடிப்படையே.

ஒரு நாட்டினுடைய நாகரிக வளர்ச்சி அந்த நாட்டில் பெண்கள் எப்படி நடத்தப்படு கிறார்கள் என்பமைப் பொறுத்தே அமையும் என்று சொல்லலாம். உன் குழந்தையும், என் குழந்தையும் நம் குழந்தையுடன் விளையா டட்டும் என்று சொல்லும் கலாச்சாரம் நம்முடையது அல்ல. ஒருவனுக்கு ஒருத்தி என்றுதான் நம் முன்னோர்கள் ஒரு பண்பாட்டினை உருவாக்கி இருக்கிறார்கள். முன்னாட்களில் பெண்கள் வேலைக்குச் செல்லாமல் கணவனை நம்பி இருந்தார்கள் என்பதை அடிமைத்தனம் என்று நினைத்தால் அது நிச்சயமாக முட்டாள்தனம் என்பது உண்மை. யோசித்துப் பார்த்தால் தெரியும் அது ஒரு பாதுகாப்பு வளையம் என்பது. அங்கு வேலைப்பங்கீடு (Division of labour) இருந்தது. பொருளீட்டுதல், மனைவிக்கும், குழந்தைகளுக்கும் தேவையானவற்றை வாங்கிக் கொடுத்து அவர்களை நலமாக வைத்துக்கொள்வது கணவனின் வேலை. கணவன் கொண்டு வரும் பொருளை சீராகவும் சிக்கனமாகவும் செலவு செய்து கணவன், குழந்தைகளின் அடிப்படை மற்றும் அத்தியாவசிய தேவைகளை (உணவு, நல்ல பழக்கங்களை சொல்லித்தருதல்) போன்ற வை மனைவியின் கடமையாக இருந்தது. இருவரும் சேர்ந்து சுற்றுலா, பூங்கா, உணவு விடுதி என்று போகா விட்டாலும் ஒருவர் மேல் ஒருவருக்கு புரிதல், அன்பு பரிமாற்றம் ஆகியவை நன்றாகவே இருந்தது.

## நான் வாசித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே. அனுப்புங்கள்

***Vlambaram@sympatio.ca***

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

பாரதியார் சொன்னது போல் நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை எல்லா வற்றையும் பெண்கள் எடுத்துக் கொண்டாகி விட்டது. இவையெல்லாம் பெண்களுக்கு தன்னம்பிக்கை கொடுக்கும் விசயங்களாக சொல்லப்பட்டன. தன்னம்பிக்கை இழந்து அவநம்பிக்கை வரும்போதுதான் விவாகரத்து என்ற வேண்டாத செயல் இருவருக்கும் இடையே வருகிறது. இன்றைய கல்விமுறை வெறும் ஏட்டு படிப்புதான். படிப்புக்கு ஏற்றவாறு வேலை, வேலைக்கு ஏற்றவாறு சம்பளம் என்று கிடைத்தால் நம் வாழ்க்கையை நாமே தீர்மானிக்க முடியும் என்ற எண்ணம் சற்று தவறானதுதான்.

பெரியவர்கள் நிச்சயித்து நடந்த திருமணங்களில் உள்ள வேத, மந்திரங்களையெல்லாம் விட்டுவிடுங்கள். அந்த நிகழ்வுகளை மட்டும் பாருங்கள். பெற்றோரும் உற்றாரும் உடனிருக்க ஒரு திருமணமாகப்போகும் ஆண், தன் மனைவி யாக வரப்போகும் பெண்ணின் கையைப் பற்றுகிறான். இது இருவருக்குமே முதல் தொடுதல் ஆகும். பின்பு நலங்கு என்னும் சடங்கின் மூலம் ஒருவரை ஒருவர் (தேங்காய் உருட்டுதல், பூப்பந்து உருட்டுதல், ஒருவருக்கொருவர் திலகமிட்டுக் கொள்வது) போன்ற செய்கைகளால் மேலும் ஒருவரை ஒருவர் தொடுவது அனுமதிக்கப்படுகிறது. வயதுக்கு வந்துவிட்ட பெண்களை தந்தையும், தனயனும் கூட தொட்டு பேச மாட்டார்கள். ஆனால் இன்று ஆணை தொட்டுப்பேசாத பெண்ணும், பெண்ணைத் தொட்டுப்பேசாத ஆணும் (புத்தர், சாவைக் கண்டு அஞ்சிய ஒரு சீடனை ஒருவருமே சாகாத வீட்டில் ஒரு பிடி கடுகு வாங்கிவா என்று அனுப்பினாராம். அப்படியொரு வீடு இருக்காது, எனவே சாவு என்பது மனிதனாய் பிறக்கும் ஒவ்வொருவனும் எதிர்கொள்ள வேண்டிய நிகழ்வுதான் என்று தன் சீடன் புரிந்து கொள்ளட்டும் என்று) இன்று கிடையாது. சீடனுக்குக் கூட கடுகு கிடைத்துவிடும். ஆனால் தொட்டுப்பேசாத ஆண்பெண் நிச்சயமாகக் கிடையாது, கிடைக்காது. இந்தப் பழக்கத்தினாலேயே திருமணத்தின் முதற்படியான 'ஒருவருக் கொருவர் புது உறவு' என்கிற நிலை அடிபட்டு போகிறது.

இரண்டாவதாக 'உனக்கு நான், எனக்கு நீ' என்ற நிலை இன்று இல்லை. நான்



சம்பாதிக்கிறேன் அதனால் நான் தனியாக வாழமுடியும் என்று நினைப்பது தன்னம்பிக்கை அல்ல. வெறும் அசட்டுத் துணிவுதான் என்று முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அலுவலகத்தில் தவறு செய்து விட்டால் மேலாளர் திட்டுகிறார், அதற்காக வேலையை அன்றே விட்டுவிட்டு வந்து விடுகிறோமா. ஆனால் குடும்பத்தில் மட்டும் ஏன் உடனே விவாகரத்து கேட்டு ஓடுகிறோம். எதில் நிலைத்து இருக்க வேண்டுமோ அதை விட்டுவிட்டு எது வேண்டாமோ அதைத் தேடி ஓடுகிறோம். பெண் சுதந்திரம் என்று நாம் நினைக்கும் (வேலைக்குப் போய் நாம் சம்பாதிப்பது) செயல் உண்மையிலேயே சுதந்திரம் அல்ல. உண்மையிலேயே இது நாமாக சேர்த்துக் கொண்ட சுமைதான்.


## சுமைகள் சுகமாக மாறும்:

நாமாக சேர்த்துக் கொண்ட சுமையை நாம் தான் சுகமாக மாற்ற வேண்டும். இதற்கு கணவன், மனைவி இருவரும் ஒருமனதாக செயல்படவேண்டும். கொஞ்சம் முயன்றால் வளமான வாழ்க்கை கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. முதலில் கணவன் சார்பாக செயல்பட விசயங்களைப் பார்ப்போம். கணவனுக்கு மனைவி என்ற இடத்தில் வந்திருக்கும் பெண் முழுவதுமாக தன்னை நம்பித்தான் வந்திருக்கிறாள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். திருமணம் வரை சாதாரணமான செயல்பாடுகளுடன் இருந்து விட்டு திருமணமானதும் அம்மாவின் மீது அதீதமான பாசம் வரும். இது கட்டாயமாக தவிர்க்கப்பட வேண்டும். மனைவியின் இடத்தை அவளுக்கு அளித்து, தாயின் மரியாதையை அவளுக்கு தருவதை மிகவும் கவனமாக கையாள வேண்டும். புதிதாக வரும் பெண்ணுக்கென்ற ஆசைகள் சில இருக்கும். நிறைவேற்ற கூடிய ஆசைகளை செய்தும், முடியாதவற்றிற்கு தகுந்த காரணமும் கூறி விட வேண்டும். எந்த விசயத்திலும் ஒளிவு, மறைவு அறவே கூடாது. மனைவி தன் குடும்பத்தினரை மதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது போல் அவளுடைய உறவினர்களையும் மதிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். இருவரும் பணி செய்பவர்களானால் குடும்பத்தின் வேலைகளை பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். உடல்நலக்குறைவு ஏற்படும் பொழுது, பொறுமையோடும், அன்போடும் கவனித்துக் கொள்ள வேண்டும். சுடு சொற்களையும், தேவையில்லாத அநாகரிகமான செயல்களையும் தவிர்க்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்ய பெரிய அளவில் முயற்சி செய்ய அவசிய மில்லை இயல்பாக இருந்தாலே போதும்.

மனைவியின் சார்பாகவும் பல செயல்கள் உண்டு. கணவனை மதிப்புதுடன் அவன் வீட்டாரையும் மதிக்க வேண்டும். இருவரும் பணிக்கு செல்பவர்களாயின் இந்தந்த வேலைகளை நீங்களும் செய்தால் இருவரும் பணிக்கு செல்வது எளிதாக இருக்கும் என்பதை புரியவைத்து அவர்கள் செய்யக் கூடிய வேலைகளாக கொடுக்க வேண்டும். இருவருடைய வருவாயையும் ஒன்றாக கணக்கிட்டு அதன் பிறகு மாதத்திற்கான செலவுக் கணக்கை சரிசெய்ய வேண்டும். அத்தியாவசியம், அவசியம், தேவையற்றது என்று பிரித்து செலவு செய்து மாதாமாதம் ஒரு சேமிப்பும் செய்ய வழி செய்ய வேண்டும். கணவனுடைய உடல் நலத்தில் அக்கறை காட்டி தேவையற்ற பழக்கங்களை மெதுவாக எடுத்துச் சொல்லி மாற்ற வேண்டும். இருவருமே கட்டாயமாக ஒரு வீட்டாரை மற்றவர் அவமதிப்பதை அறவே தவிர்க்க வேண்டும். அது மாதிரியான சமயங்களில் மௌனம் காப்பது நலம். அவரவர்களின் விருப்பங்களை அடுத்த வருக்கு இடையூறு இல்லாமல் நிறைவேற்றிக் கொள்ள முயல்வது மிகவும் சிறப்பான குணமாகும். விட்டுகொடுத்து போவது என்ற மனப்பான்மையை இருவருமே வளர்த்துக் கொள்ள வேண்டும். மிகவும் சிறிய செயல்கள்தாம் இவை அனைத்துமே. முயன்று பார்ப்பதால் தவறொன்றும் இல்லையே. மணவாழ்க்கை மலர்ந்து வாசம் வீச வேண்டுமே தவிர மணமுறிவுக்கான செயல்களில் ஈடுபடக்கூடாது. சேர்ந்து வாழத்தான் திருமணம். பிரிந்து போவதற்கல்ல. எனவே முயலுங்கள், முடிவு உங்களுக்கு சாதகமாகத்தான் இருக்கும்.

- ஜெயா சுந்தரம்

நன்றி - இணையமடல் சிறகு


**புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகத் தரமான புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு.

- சிறியது $3
- நடுத்தரம் $4
- பெரியது $5

*வரி கட்டப்பட்டது*



தொடர்புகளுக்கு: **647.629.9095**

# HOUSE FOR SALE நீர்கொழும்பு - இலங்கை









**Custom Built (2009) Luxury Two Story House**

(Excellent Revenue Potential)

- ***5 Bedrooms (4W/AC) 3 Full washrooms. Seperate Convertible Guest house or storage unit w/full bath and urinals.***
- ***Large living and dinning areas with 10ft. Cathedral ceilings.***
- ***Separate entrance to the 2nd floor which has a completely kitchen this property has video surveillance and is being sold completely furnished, is ready to move in condition.***
- ***Completely fenced, beautifully landscaped property on approx 45 perch w/in ground lawn sprinklers, many fruit trees, seperate parking area, septic system and two tube wells.***
- ***5 Minute walk to shops, restaurants, the beach and major beach hotels situated in quite setting w/access to Rani Mawatha, Marians place & cemetery road.***

**Cell: 647.588.1714 / Email: roshand@rogers.com**



"Let me help you make the right choice"



Schuren Sriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL




Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!™

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell



Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
RE/MAX All Stars Realty Inc., Brokerage
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்
Guaranteed Result

For All Your Real Estate Needs
BUY OR SELL



Terrence Thambyrajah
Sales Representative
Dir : 647-709-1202
Bus: 905-201-9977
Fax: 905-201-9229
E-Mail: terrence.thambyrajah@gmail.com
HomeLife/Future Realty Inc.,Brokerage*
*Independently owned and Operated



TD Canada Trust வங்கியில் அனைத்து
Mortgage கடன் வசதிகள் பெற்றுக்கொள்ள
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Low Mortgage Rates


அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....



VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

Free Real Estate Class - Call: 416.321.6969

RealEstate / Mortgage / Commercial Investments



AUTO BODY SHOP + BUSINESS FOR SALE
DANFORTH & MAIN
Price : $1.49 Million



KENNEDY & HWY 401
Bedroom : 2
Washroom: 2
Price : $299,900



FINCH & MCCOWAN
Bedroom : 3 + 1
Washroom: 3
Price : $489,990



9TH LINE & HWY07
Bedroom : 4
Washroom: 3
Price : $ 639,900



BRIMLEY & ELLESMERE
CONDO FOR SALE
Bedroom : 1+2
Washroom: 1
Price : $234,900



KENNEDY & HWY 401
Bedroom : 2
Washroom: 2
Price : $299,900
900 Sq.ft



MORTGAGE ALLIANCE
RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage
A. Anton Jeeva B.Eng
Principal Mortgage / RealEstate Broker
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9

THE TRUSTED MORTGAGE AGENT
MORTGAGE ALLIANCE The Guardian
"Solution For Ever Mortgage"
•I will arrange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage???
"When banks say no We say yes"
@ Interest rate starting from 6.99%+.



Thayalan Gobalakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com
*Some Terms & Conditions May Apply



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED